9.88

# செந்தழல்

1977 1978



தமிழ் மன்றம்.
யாழ் பல்கலைக்கழகம்
தமிழ் ஈழம்.

## விவசாயிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் !
## உற்பத்தியைப் பெருக்குங்கள் !!

**பூமா** நீர் இறைக்கும்

**வில்லியஸ்** எஞ்ஜின் பொருத்திய

**பம்** எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

★ முந்துங்கள், இச் சந்தர்ப்பத்தை இழந்துவிடாதீர்கள் !

★ தண்ணீர் இறைக்கும் யந்திரத்துக்குரிய பலவித உபகரணங்கள், வண்டில் முதலியனவும் விற்பனைக்குண்டு.

தயாரித்து விநியோகிப்போர் :

# சிலோன் இண்டஸ்ரியல் எஞ்சினியரிங் வேக்ஸ்

158, ஸ்ரான்லி றோட்,

**யாழ்ப்பாணம்**

☎ 7426

# செந்தழல்

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள்
தன்மானத்துடன் வாழ்வதற்கு
ஒரேயொரு வழியான
**தமிழ் ஈழம்**
மீட்கும் பணியில் ஈடுபடும்
விடுதலை வீரர்கள் அனைவருக்கும்
இச் செந்தழலைச் சமர்ப்பணம் செய்கிறோம்.

ஆசிரியர் :
ச. பேரின்பராஜா

தமிழ் மன்ற ஆண்டு மலர் 1977 — 78

# மன்றச் செயலவை

| | | |
|---|---|---|
| தலைவர் : | திரு. நா. தர்மராஜா | (டிசம்பர் 1977 வரை) |
| | —— | (ஜனவரி 1978 முதல்) |
| துணைத் தலைவர் : | திரு. மு. சிவதாஸ் | |
| செயலாளர் : | திரு. செ. சண்முகநாதன் | (டிசம். 1977 வரை) |
| | —— | (ஜனவரி 1978 முதல்) |
| துணைச் செயலாளர் : | திரு. அ. ஜெ. செ. சவரிமுத்து | |
| இளம் பொருளாளர் : | ஜனப். அ. லெ. ஜௌபர் சாதிக் | (டிசம்பர் 1977 வரை) |
| | திரு. க. கணேசன் | (ஜனவரி 1978 முதல்) |
| பத்திராதிபர் : | திரு. ச. பேரின்பராஜா | |
| செயற்குழு உறுப்பினர்கள் : | திரு. ச. தில்லைநாதன் | (நவம்பர் 1977 வரை) |
| | திரு. கி. ஆறுமுகம் | |
| | திரு. கு. தம்பையா | |
| | செல்வி. க. மாலினி | |
| | செல்வி. சு. இராசலெட்சுமி | |
| பெரும் பொருளாளர் : | திரு. இ. முத்துத்தம்பி | |

## பத்திரிகைக் குழு

திரு. ச. பேரின்பராஜா
திரு. மு. சிவதாஸ்
திரு அ. ஜெ. செ. சவரிமுத்து
திரு. க. கணேசன்

## மன்றச் செயலவை 1977—78



இருப்போர் (இ→வ): திரு. செ. சண்முகநாதன் (செயலாளர் டிசம். 1977 வரை), திரு. நா. தர்மராஜா (தலைவர் டிசம். 1977 வரை) பேராசிரியர், சு. வித்தியானந்தன் (துணைவேந்தர், யாழ். பல். கழகம்), திரு. இ. முத்துத்தம்பி (பெரும் பொருளாளர்), திரு. மு. சிவதாஸ் (துணைத் தலைவர்), திரு. ஜெராட் சவரிமுத்து (துணைச் செயலாளர்)

நிற்போர் (இ→வ): செல்வி. க. மாலினி, திரு. க. கணேசன் (இளம் பொருளாளர் ஜன. 78 முதல்) திரு. கி. ஆறுமுகம், திரு. கு. தம்பையா, திரு. ச. பேரின்பராஜா (பத்திராதிபர்), ஜனப். அ.லெ. ஜெள. சாதிக் (இளம் பொரு. டிசம். 77 வரை) செல்வி. சு. இராசலெட்சுமி


வராதவர் : திரு. ச. தில்லைநாதன் (நவம்பர் 1977 வரை)



# இத் தழலில்...


1. சமர்ப்பணம்:
2. மன்றச் செயலவை.
3, இத் தழலில்...
4. துணை வேந்தரின் வாழ்த்துரை.
5. பெரும் பொருளாளரின் வாழ்த்துரை.
6. பத்திராதிபர் பக்கம்.
7. மன்றத் துணைத் தலைவரின் செய்தி.
8. தாயினை நினைவூட்டும் காட்சிகள் எனை வாட்டும்.
9. உறக்கம் கலைந்தது.
10. தமிழ் வீரம்.
11. வேலி சரியில்லாட்டில் இப்பிடித்தான்.
12. இறுதி விடை.
13. விசித்திர வண்டி.
14. இருள் விலகுகிறது.
15. எங்களது காலம்.
16 துஞ்சுதற்கஞ்ச மாட்டோம்.
17. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை...
18. வேண்டுகோள்.
19. யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தவர்கள்.
20. ஓர் ஆசிகுள வாசியின் ஆகஸ்ட் அனுபவம்.
21. நம் நாட்டின் சில முக்கிய நாட்கள்.
22. கலையும் கலைஞர் உள்ளமும்.
23. யாழ்ப்பாணக் குடாநாட்டின்...
24. மனித உறவு முறை.
25. புற்று நோயும் அதன் தடுப்பு முறைகளும்.
26. தமிழ் விழாக் கோலங்கள்.
27. தமிழர் வாழ்வும் வளமும்.
28. தமிழ் மன்ற அறிக்கை.
29. நன்றி கூறுகிறோம்.
30. பிழை திருத்தம்.

# துணை வேந்தரின் வாழ்த்துரை




தமிழ் விழாவில் துணைவேந்தர்

யாழ்ப்பாண வளாகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்ந்த பின்னர், தமிழ் மன்றத்தினர் வெளியிடும் செந்தழல் என்னும் இம் மலருக்கு ஆசி வழங்குவதில் மிகு மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ் மன்றத்தினர் பல்வேறு துறைகளில் ஆற்றிவரும் பணிகளை யாவரும் நன்கு அறிவர். பல்கலைக் கழக மரபினைப் பேணியும், மக்களுக்கும் உயர் கல்விப் பீடத்திற்குமுள்ள தொடர்பினை நன்குணர்ந்தும், இன்னும் பாரிய அளவிலே அவர்கள் பணி செய்வார்கள் என்பது எமது நம்பிக்கை.

பல்கலைக் கழக மாணவரிடையே எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும், சுவைஞர்களை வளர்க்கவும், கலைஞர்களை உருவாக்கவும் இம் மலரை வெளியிட்டும் கலை விழாக்களை நடாத்தியும், இலக்கியக் கூட்டங்களை ஒழுங்கு செய்தும் தமிழ் மன்றம் பணி செய்து வருகின்றது.

'யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ் மன்றம் வெளியிடும் முதல் மலராக இச் செந்தழலைக் கொள்ளலாம். அது நன்கு அமையப் பெற்று பல்கலைக் கழக மாணவருக்கும், தமிழ் மக்களுக்கும் நற்பயனளிக்க வேண்டுமென மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

20-12-1978

சுப்பிரமணியம் வித்தியானந்தன்

# பெரும் பொருளாளரின் வாழ்த்துரை



←
தமிழ் விழாப்
பொருட்காட்சியில்
பெரும் பொருளாளர்

இரு ஆண்டுகளுக்கு முன் உதயமான யாழ் - வளாகத் தமிழ் மன்றத்தின் வருடாந்த சஞ்சிகையான 'செந்தழலின்' இரண்டாவது வெளியீடு, மன்றச் செயற்குழு மூன்று முக்கிய அலுவலரை இழந்து நிற்கும் நிலையிலும், பொது அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடனும் பொது மக்களின் நிதியுதவியுடனும், சஞ்சிகைக் குழுவினரின் தளராத உழைப்பினுல் சிறந்த முறையில் வெளிவருவதைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

மன்றத்தின் நோக்கம் தமிழ் மொழியையும் பண்பாட்டையும் வளர்த்தல என்று சுருக்கிக் கூறப் பட்டிருப்பினும், வருங்காலத் தமிழறிஞர்களைச் சிறந்த எழுத்தாளர்களைத் தரம்மிக்க எழுத்தாளர்களை மக்கள் போற்றும் கலைஞர்களை உருவாக்கும் பொறுப்பும் பெருமளவிற்குத் தமிழ் மன்றத்தையே சாரும். இந்த வகையில் இரு ஆண்டுகளாக மன்றம் நடாத்திய கருத்தரங்குகள், விவாத அரங்குகள், கவியரங்குகள், தமிழ் விழாக்கள் போன்று இன்னோரன்ன ஆக்கபூர்வமான முயற்சிகள் பல கண்டு பெருமிதமடைத்தோம்.

யாப்பு விதிகள் போடும் வரம்பிற்குள் நின்று, ஒற்றுமை, பொறுப்பு, கண்ணியம் ஆகிய ஆயுதங்களைத் தாங்கி, அறிவுசால் ஊக்கத்துடன், தமிழ் பேரறிஞன் வித்தியானந்தன் அவர்களின் தண் நிழலில் தமிழ் மன்றம் தனது உயர் இலட்சியப் பாதை வழியே தொடர்ந்து முன்னேறட்டும், திக்கெட்டும் தமிழ் மணம் பரப்பட்டும், சமூக முன்னேற்றத்திற்காக உழைக்கட்டும், தன்னிகரற்ற ஒரு சங்கமாகத் திகழட்டும் என்று மனமார வாழ்த்துகின்றேன்.

இ. முத்துத்தம்பி

For **Quality Photographs**
**Blocks &**
**Photostatprints**





# GNANAMS

(AIR CONDITIONED)

JAFFNA. HELLO: 7067

# பத்திராதிபர் பக்கம்

தமிழ் மன்றத்தின் இரண்டாவது தழல் இது. அறியாமை எனும் இருளை அகற்ற ஏற்படுத்தப்பட்ட தழல் இது. பச்சோந்திகளையும், எட்டப்பர்களையும் எரிக்கவும், இனங் காட்டவும் ஏற்படுத்தப்பட்ட தழல் இது. ஆர்வமான இளைஞர் சமுதாயத்திற்குப் பாதை காட்ட ஏற்படுத்தப்பட்ட தழல் இது.

அறியாமை எனும்போது சுதந்திர தமிழ் ஈழமா? ஐக்கிய இலங்கையா? இதில் எது தமிழரின் தன்மானம் காப்பாற்றப்படுவதற்கு, பேணப்படுவதற்கு ஏற்றது என்ற அறியாமை ஒன்று. சாதிகள் மனிதருள்ளே இருக்கவேண்டும்; அப்போதுதான் சமுதாயம் சீராக இயங்க முடியும் என்று கூறுகின்ற நாவலர் பரம்பரையின் அறியாமை மற்றொன்று. சீதனக் கொடுமையால் எவ்வளவோ பெண்கள் சீரழிதல் கண்டும், அதனைக் கொடுப்பதையும், வாங்குவதையும் பெருமையாகக் கொள்ளும் பெற்றோரின் அறியாமை இன்னொன்று. இவ்வாறு பல தரப்பட்ட அறியாமைகளையும் நீக்கும் நோக்குடன் முயல்கிறது செந்தழல்.

பச்சோந்திகள், எட்டப்பர்கள் எனும்போது அரசியல் பச்சோந்திகளையும், அரசியல் எட்டப்பர்களையும் மாத்திரம் இங்கு குறிப்பிடவில்லை. மாணவர் சமுதாயத்திலும் — குறிப்பாகப் பல்கலைக்கழக மட்டத்தில் — இப்பேர்ப்பட்ட பச்சோந்திகளும், எட்டப்பர்களும் உருவாகிக்கொண்டே வருகின்றனர். இவர்களையும் இனங் காட்டும் நோக்குடன் முயல்கிறது செந்தழல்.

ஆர்வமான இளைஞர்கள் எனும்போது மேற்கூறியவை போன்ற விடயங்களுக்காகப் போராட விழைந்தும், எவ்வாறு போராடுவது என்று தெரியாமற் திண்டாடும் இளைஞர் சமுதாயத்திற்குப் பாதை காட்டும் நோக்குடன் முயல்கிறது செந்தழல்.

இவ்வேளையில்தான் எனக்குச் சில ஐயங்கள் உண்டாகின்றன. மேற்கூறிய நோக்கங்களுள் ஏதாவது ஒன்றாவது நிறைவேறும் பட்சத்தில் இத் தழல் அமைந்துள்ளதா என்பது ஒன்று. அதுமட்டுமல்லாமல் முதலாவது தழல் மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றது. அதன் மதிப்பை இது கெடுத்து விடுமோ என்பது அடுத்தது. இத்தழல் பல கஷ்டங்களுக்கு மத்தியில் வெளியாவதால் இப்பேர்ப்பட்ட குறைகள் இருக்கலாம். இருந்தாலும் இப் பிழைகள் யாவற்றிற்கும் நான் பொறுப்பில்லை எனினும், அவை யாவும் என்னையே சேரவேண்டியன.

இவ் வேளையிலும் தழல் சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்காக என்னாலானவரை முயன்றுள்ளேன். அது எந்தளவுக்கு வெற்றியோ உங்களுக்கே வெளிச்சம். ஆனால் செந்தழலின் நோக்கங்களுள் சிறிதளவேனும் நிறைவேறும் வண்ணம் இத் தழல் அமைந்திருந்தால் அதுவே என் முயற்சிக்குரிய பலனாகும்—வெற்றியாகும்.

இறுதியாக, யாழ். பல்கலைக்கழக மாணவ மணிகளிடம் நான் கோருவது, அடுத்த தழல் மேற்குறிப்பிட்ட நோக்கங்கள் யாவும் நிறைவேறிய தழலாக வெளிவர உங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குங்கள்.

வாழ்க தமிழ் ஈழம்.

ஆ-ர்

*Best Wishes from*

# STANLEY FURNISHING MART

5 & 7, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

# மன்றத் துணைத் தலைவரின் செய்தி



இதயத்தினைத் திறந்து உண்மையைக் கூறுவதானால் எமது தமிழ் மாணவர்கள் மிகவும் துர்ப்பாக்கியசாலிகளே. அவர்களில் ஒரு சிலர் அதிர்ஷ்டசாலிகளாகவும் அமைந்துவிடுகின்றனர். இத்தகைய அதிர்ஷ்டசாலிகளால் நிறைந்து காணப்படும் யாழ் வளாகத்தில் தமிழ் மன்றம் அமைக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகினாலும், இன்று இவ் இதழ் இரண்டாவது மலராகவே வெளிவருகின்றது. கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்ச் சமுதாயம் பெற்ற விழிப்புணர்ச்சியையும், அது எதிர்நோக்கிய பிரச்சினைகளையும் நாம் மறந்திருக்கமாட்டோம். அரசியல் ரீதியாக ஏற்பட்ட எத்தனையோ பிரச்சினைகள் எம்மையும் தாக்கத் தவறவில்லை. ஒவ்வொரு பிரச்சினைக்காகவும் மூடப்படும் முதல் வளாகம் யாழ் வளாகமாகவே அமைந்தது. இத்தகைய இடையூறுகள் எமது செயற்பாடுகளையும் பாதித்தது.

எமது வளாகத்தில் பயிலும் தமிழ் மாணவர்களது கலை, இலக்கிய செயற்பாடுகளுக்குப், சுதந்திர உணர்வுகளுக்கும், சமுதாயக் கருத்துக்களுக்கும் களம் அமைத்துக் கொடுப்பதும், தமிழ் மாணவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு முகங் கொடுப்பதும் இம் மன்றத்தின் நோக்கமாக அமைந்ததுடன், அவற்றுக்கான தேவையும், அவசியமும் இருந்தது. எமது அரசியல், பொருளாதார, சமுதாய மாற்றத்திற்கு எமது மன்றம் உதவவேண்டும்; தன்னால் இயன்ற பங்கினைச் செலுத்த வேண்டும் என்பதே எமது நோக்கம்.

பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம், அடக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, பொருளாதாரத்தில் திட்டமிடப்பட்டு பின்தள்ளப்படும் எமது தமிழினத்தின் விடிவிற்காகவும், கூர்மையடைந்துவரும் உணர்வான சுதந்திரத்திற்கான வழிமுறைகளை முன்னெடுத்துச் செல்வதிலும் எமது பங்கினைச் செலுத்தக் கடமைப்பட்டவர்கள். இவ் அடிப்படையில் அறிவியல் பூர்வமான நடவடிக்கைகளை வழி நடத்திச் செல்வதில் தமிழ் மன்றம் தனது பணியை ஆற்றி வந்துள்ளது என்பதினை நினைக்கும்போது நான் பெருமையடைகின்றேன். உதாரணமாக எமது தமிழ் விழாவில் இடம்பெற்ற கவியரங்கு, ஆய்வரங்கு, பொருட்காட்சி, கருத்தரங்கு, வழக்குரை மன்றம், நாடகங்கள் என்பன சமுதாயத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன. அப் பணியின் தொடர்ச்சியின் ஓர் அங்கமாகவே உங்கள் கரங்களில் இம் மலரைத் தவழ விடுகின்றோம்.

சில துறைகளில் விரைவான மாற்றத்திற்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்பதினை நாம் உணர வேண்டும். அவற்றுக்காகப் போராடவும் வேண்டும்.

ஆனால், தனது இனத்தின் சுதந்திரத்திற்காகவும், தான் சார்ந்த சமுதாய மாற்றத்திற்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும், தனது பிரதேசத்தினைப் பாதுகாப்பதற்காகவும் உழைக்க இன்றைய பல்கலைக் கழக மாணவர்களில் எத்தனை பேர் தயாராக உள்ளனர் எனச் சிந்திக்கும்போது அது கவலைக்குரியதாக அமைவதும் உண்டு.

எதிர்பாராத விதமாக மன்றத்தின் முக்கிய மூன்று உறுப்பினர்களை மன்றம் இழந்தபோது எனது தலைமையில் முழுப் பொறுப்புக்களும் சுமத்தப்பட்டன. அச் சந்தர்ப்பத்தில் எனக்குத் துணையாக நின்று எமது மன்றத்தின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல எனக்கு உதவியும், உற்சாகமும் தந்த சக மாணவர்களை நினைவுகூர நான் கடமைப்பட்டவன். சுதந்திரத்துக்காகப் போராடும் தமிழ் மக்கள் அனைவரையும் ஓரளவிற்கேனும் கட்டியெழுப்பிய தமிழ் விழாவினைச் சிறப்பாக நடத்த உதவிய வளாக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் மன்றத்தின் தலைமைப் பதவியை 'ஏற்று' இருந்தவன் என்ற வகையில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு இனம் மற்றொரு இனத்தால் அடக்கி ஒடுக்கப்படும்போது அந்த இனம், உரிமையும், சுதந்திரமும் கோருவது, அதற்கான போராட்டத்தினை நடத்துவது தவிர்க்க முடியாததாகும். இத்தகைய போராட்டங்கள் என்றுமே தோல்வியைச் சந்தித்ததில்லை. அதில் ஒவ்வொரு தனி மனிதனும் வகிக்கும் பங்கைப் பொறுத்து அது கூர்மையடையும். ஸ்ரீ லங்காவின் நீண்டகால வரலாற்றில் தம்மை இடதுசாரிகள், மார்க்சியவாதிகள் என்று மார்தட்டிய சந்தர்ப்பவாதிகள் எமது விடுதலைக்காக உழைத்தார்களா என்பதினைக் கடந்தகால வரலாறு புகட்டும். ஆகவே எமது விடுதலைக்காக நாம்தான் போராடவேண்டும் என்பதினை நாம் உணர வேண்டும். எத்தகைய இடையூறுகள் எமக்கு இன்னல் தரினும், இயன்றவரை ஆற்றல் உள்ளவர்களை இணைத்துத் தமிழ் மன்றம் தொடர்ந்தும் எமது இனத்தின் சமூக, பொருளாதார விடுதலைக்காகப் போராடவேண்டும் என்பதே எனது விருப்பம்.

எமது காலப்பகுதியில் நடைபெற்ற தமிழ்விழா நிகழ்ச்சிகள் அரசியற் பிரச்சினையில் அதிகளவு ஈடுபாடுடையன என இவ் வளாகத்தினுள் அரசியலைப் புகுத்திய பலரால் விமர்சிக்கப்பட்டது. ஆனால் இந் நாட்டில் தமிழ் மொழியின் நிலை, தமிழ் மக்களின் நிலை, தமிழ் மக்களது சுதந்திரதின் நிலை, தமிழ்ப் பிரதேசத்தின் நிலை, தமிழ் மாணவர்களின் நிலை என்ன என்பதை இவர்கள் ஒரு நிமிடம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 'தமிழ் மன்றம்' என்று ஒன்று யாழ் வளாகத்தினில் இயங்குவதானால், அதன் கடமை இலக்கியங்களைப் படைப்பதும், அதற்கு விமர்சன விழா எடுப்பதும், கலைகளை வளர்ப்பதுடனும் முடிவடைந்துவிட முடியாது. இழந்துவிட்ட உரிமைகளை மீண்டும் பெற உரிமைக் குரல் எழுப்பும் மக்களின் சார்பாகக் குரல் கொடுக்கவும், பணி புரியவும் யாழ் வளாக மாணவர்களும் கடமைப்பட்டவர்களாவர்.

இறுதியாக, இப் பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்கள் அனைவரும் தாமும், தாம் சார்ந்த சமூகமும் தமது முயற்சிகளை வழிநடத்திச் செல்ல, தமிழ் மன்றம் தொடர்ந்து உதவ வேண்டும் எனக் கூறி விடை பெறுகிறேன்.

நன்றி; வணக்கம்.

— மு. சிவதாஸ்

நவீன வேலைப்பாடுள்ள
தங்க வைர நகைகள்
விரும்பிய டிசைன்களில்
உத்தரவாதத்துடன் கிடைக்கும்.



## புதிய
## தங்க மாளிகை

76, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**D.S.I**
மற்றும்
சகல விதமான பாதணிகளுக்கும்



## சரவணாஸ்

45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இதோ வெளிவந்துவிட்டது!

## இந்து நாகரிக வினாவிடை

இது ஒரு அறிவுப்பொழில் வெளியீடு.

விபரங்கட்கு:

ஆசிரியர்,
அறிவுப் பொழில் மன்றம்,
56, மருதடி வீதி,
நல்லூர் - யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு:



## நா. வ. கந்தையா & சன்ஸ்

நகை வியாபாரிகள்.

76/1 & 2, கஸ்தூரியார் வீதி,
(புதிய இல. 206 & 208)
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 500

# தாயினை நினைவூட்டும் காட்சிகள் எனை வாட்டும்...



1. பத்துத் தர முப்பது முத்தான நாட்கள்
எத்தனை தரம்ஏங்கித் தவித்திருந்தாள்
முத்து வர பித்துக் காண்பதற்கு
அத்தனை தரம்கண் விழித்திருந்தாள்.

2. சத்துப் பெற தன்சொத்துச் சுகம்
அத்தனையும் அவள் கடன் கொடுத்து
பெத்து எனை பெருமையாக்கி விட
பெத்தவளவள் நினைத்திருந்தாள்.

3. முலையில் எனக்காய் சுரந்த பாலை
ஒருமுறை சுவைத்தேனா?
முதலில் கண்ணை த்திறந்தபோது
நின்முகம் கண்டேனா?

4. தாயே! தாயே!! தனியே என்னை
ஏன் விட்டுச் சென்றாயோ?
தனிமை இங்கு வாட்டுது என்னை
துணையாய் வந்திடவோ?

5. பாரினில் என்னை ப்பெற்றவள் தனியே
விட்டு ச்சென்று விட்டாள்
தேரினில் என்னை ஏற்றியே வளர்ப்பர்
என்றே நினைத்துச் சென்றாள்.

6. ஊரினில் இங்கு பலபேர் என்னை
ஊக்கிலில் இடுகின்றார்
தாயே! என்னைத் தனியே விட்டு
ஏன் நீ சென்று விட்டாய்?

7. அம்மா! என்று அன்புடன் அழைக்க
மகளே! என்று வாரி அணைக்க
சும்மா வாயினும் ஒருத்தியில்லை
துன்பச் சுமைகள் என்வாழ்வில் கண்டேன்.

8. சிம்மா சனத்தில் இருக்கும் அரசனேனும்
சின்னப் பட்டாடை கட்டும் கொவ்வாய்க்கும்
அம்மா அருகில் இல்லையாயின் - உண்மை
அன்பு காட்ட எவருமில்லை.

9. தாயினைப் பிரிந்து தனியே வாடும்
சேயின் கவலைகள் யாருக்குப் புரியும்
பாயினில் படுத்து பக்கத்தி லிருக்கும்
தாயினை அணைக்க கரங்கள் நாடும்.

10. போரினில் விழுந்து நொண்டிகளாயினும்
காயினில் பட்டு காயங்கள் வரினும்;
தாயினைப் பிரிந்து தனியே வாடும்
சேயின் கவலைக் கீடாகாது.

11. அம்மா உந்தன் அருகில் இருக்கையில்
அவள் அன்பு தெரிவதில்லை
சும்மா கொஞ்சம் விலகிச் சென்றால்
உலகம் உனக்கு தனித்துவிடும்.

12. தாயை ஒதுக்கி தாரத்தைத் தெரிதல்
அதைப்போல் பாவம் எதுவுமில்லை
அதுவே உமக்கும் தொடர்ந்து வரும்
அதனால் அதனைச் செய்யாதீர்.

வேறு.

13. இருக்கின்ற பிடிசோறு தனக்கென்று இல்லாமல்
கொடுக்கின்ற கோவிலென்றும்
தடுக்கின்ற அணையை உடைத்திடும் வெள்ளமாய் — அன்பை
கொடுக்கின்ற இதயமென்றும்
சிரிக்கின்ற நேரமும் கண்ணீர் வடிக்கின்ற வேளையும்
துடிக்கின்ற உள்ளமென்றும்
பாடிடும் பாக்களில் படித்துள்ளேன் எனினும்
எனக்கென்று அம்மா இல்லை.

—சிவா. இரத்தினநேசன்
விஞ்ஞானம்.

செந்தமிழுக்கு எமது வாழ்த்துக்கள்!

# சின்னத்துரை & பிறதர்ஸ்

**39, காங்கேசன்துறை வீதி,**

**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 284

## M. M. ABDUL CADER & BROS.

DIRECT IMPORTERS & DEALERS.

in

Hardware & Brassware Goods
Wholesale & Retail Merchants.

**97, K K. S. Road,**
**Jaffna.**

Phone: 443
(Ext) Cable: "IRUMBU"

Water Pumps & Spares

AGROCHEMICALS

FERTILIZERS

*Please Visit*

## CEYLON MERCHANTS LTD.

484, Hospital Road,
JAFFNA.

Tel: 234
T'Gram: INTEERITY

# உறக்கம் கலைந்தது...!

— வல்வை, ச. பாலசுப்பிரமணியம் —
விஞ்ஞானம் - இறுதி வருடம்

தொண்டைமானாற்றினூடாகவும், ஆனையிறவினூடாகவும் புகுந்து யாழ்ப்பாணத்து நிலத்தின் பெரும்பகுதியை உவப்பாய், விவசாயத்திற்கு உதவாததாய் மாற்றிவிட்டிருந்த கடல் நீர் வருடத்தின் சில மாதங்களில் அவ்வவ் இடங்களில் நின்று 'இறால்' என்னும் வளத்தையும் அள்ளித்தந்து கொண்டிருக்கிறது. அந்த வளம் சிலர் வாழ்விற்கு உழைப்பாகவோ, இன்னும் சிலர் வாழ்விற்கு சுரண்டலாலோ வளத்தை தந்து கொண்டிருக்கிறது.

யாழ்பாணத்தையும் வெளி இடங்களையும் இணைக்கும் அந்தப் பிரதான நெடுஞ்சாலையில் ஓர் இடம். ஆனையிறவு—பளை ஆகிய ஊர்களுக்கு இடைப்பட்ட ஓர் இடம். நேரம் இரவு பத்துமணிக்கு மேலாகி விட்டிருந்தது. அந்த இடத்தில் 'இறால்' என்னும் வளத்தை தம் உழைப்பால் அள்ளிக் கொண்டுவரும் தொழிலாளர்களை எதிர்பார்த்து இரு கூட்டங்களாய் காத்திருந்தனர் சில கொள்முதல் வியாபாரிகள். அந்த நெடுஞ்சாலையில் இரவு நேரத்தில் போய்வருவோர் அவ்விடத்தில் எரியும் பிரகாசமான விளக்குகளையும் அவர்களையும் காணத்தவறுவதேயில்லை'

கிழக்கேயிருந்து சுமார் பத்துப்பதினைந்து தொழிலாளிகள் சைக்கிள்களில் வந்துகொண்டிருப்பது மங்கலான நிலவொளியில் தெரிந்தது. அதைக் கண்ட சேகரம் என்னும் வியாபாரியுடன் வந்திருந்த ஒருவன், ''என்ன சேகரம் அண்ணை அவங்களின்ரை ஆக்களெல்லாம் வந்திட்டாங்கள். இன்னும் எங்களின்ரை ஆக்களை காணவில்லை'' என்றான். அவர் குரலில் நெடுநேரம் காத்துக்கிடந்தால் ஏற்பட்ட சோர்வு தெரிந்தது. சைக்கிளில் வந்தவர்களும் அவர்களைத் தாண்டிச் சென்று அங்கேயிருந்த மற்ற வியாபாரிகளிடம் போய் நின்றுகொண்டனர், அந்த வியாபாரிகளும் தமது கொள்முதல் வேலையை ஆரம்பித்தனர்

இவ்வளவையும் பார்த்துக்கொண்டு ஒன்றும் பேசாதவனாய் அங்கிருந்து மீன் பெட்டிகளில் ஒன்றில் அமர்ந்திருந்த சேகரம், புகைந்து கொண்டிருந்த 'சிகரெட் டின்' கடைசி இழுப்பை இழுத்துவிட்டு தூக்கி எறிந்தவனாய் ஏதோ சொல்ல வாய்எடுத்தவன், கிழக்கே தெரிந்த தட்டிவானை அதன் விளக்குகளிலிருந்து அடையாளம் கண்டு கொண்டவன், ஒன்றும் சொல்லாமல், பேசாமல் இருந்து கொண்டான்.

''ஆ...எங்களின்ரை ஆக்களும் வந்துவிட்டாங்கள் ''என்றவாறே சேகரத்துடன் வந்தவர்களும் சொல்லிக் கொண்டவாறே இறால் நிறுவைக்கான ஏற்பாடுகளை செய்ய ஆரம்பித்தனர்.

''பாம் ... பாம்'' என்று அலறியவாறே கிழக்கேயிருந்து விரைந்து வந்த தட்டிவானும், றோட்டிலிருந்து இறங்கி, றோட்டின் அருகில் இருந்த வெளியொன்றில் நின்றிருந்த வேப்ப மரத்தைச் சுற்றி ஓர் அரை வட்டம் அடித்து நின்று கொண்டது. வானிலிருந்து இறங்கியவர்கள் தங்களுடைய 'பறிகளை' கைகளில் எடுத்துக் கொண்டார்கள். வேலு மட்டும் இறங்காமலேயே சற்றுத் தூரத்தில் நின்றிருந்த சேகரம் குழுவையும், தூரத்தே 'நிறுவை' நடைபெறறுக் கொண்டிருந்ததையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"இவங்கள் - சேகரமாக்களிட்டை 'ருலே' குடுக்காமல் சின்னைய ஞக்களிட்டை குடுத்தா நல்லாயிருக்கும். காசும் உடனே கிடைக் கும் ருத்தலுக்கு ஐந்து, பத்து சதமும் கூட தருவாங்கள். நிறு வையும் நல்ல நிறுவை. ம்...எனட்டை சைக்கிள் மட்டும் இருந்தாப்போதும்... இருபது மைல் தூரந்தானே. ருலே பிடிச்சுப் போட்டு சைக்கிள் பெட்டியிலே பேர்ட்டு விட்டு ஏறி ஒரு உழக்கு உழக்கினனெண்டா ஒர மணித்தியாலத்திலே வந்து போடுவன் இப்ப இவங்களிட்டை விற்க துவங்கினப்பிறகு ருலும் பிடிபடா தாம்..........ருத்தலுக்கு பத்துச் சதம் கூட்டித்தந்தா என்ன... குறைஞ்சு போடுவாங்களோ."

என்று மனதுள் வசை பாடிக் கொண்டிருந்தான் வேலு. மனதில் எழுந்த எண் ணங்கள் முணுமுணுப்புகளாக வெளிவந்து கொண்டிருந்தது.

"என்ன... வேலு யோசிக்கிறுய்... இறங்கு கெதியா" என்ற குரல் கேட்டு எண்ணங்களிலிருந்து மீண்ட வேலுவும் வானின் கதவைத் திறந்து இறங்கிக்கொண் டான். எல்லாரும் தங்களுடைய பறிகளை எடுத்து விட்டிருந்தனர். வேலுவின் பறி மாத்திரம் எஞ்சியிருந்தது. வேலுவும் அதை கைகளில் எடுத்துக்கொண்டான்.

"வேலு கெதியா வாப்பா... ருலேக் குடுத்துப்போட்டு கெதியா வீட்டுக்கு போகலாம்" என்றவாறே கந்தனும் நடந்தான். வேலுவும் அவன் பின்னுல் மரத்தை நோக்கி நடந்து கொண்டே, "டேய் கந்தா... உனக்கு எத்தனை நாள் காசு வரவேணும்!" என்று கேட்டான்,

"எனக்கு மூண்டு நாள் காசு... உனக்கு"

"எனக்கும் மூண்டு நாள் காசுதான்"

வேலு பறியை வைத்துவிட்டு மடியை துழாவிப் பார்த்தான். மடியினுள் வெற்றிலே, புகையிலைகளுடன் இருந்த கடதாசி ரசீதுகளை எடுத்து எண்ணினுன். மூன்று ரசீதுகளும் பத்திரமாகவே இருந்தன. மீண்டும் அவற்றை மடியினுள் வைத் துவிட்டு நிலத்தில் அமர்ந்து கொண்டான். அவர்களின் உழைப்பிற்கான விலை ரசீ துகளிலேயே இருக்கும். அவற்றுள் ஒன்று தொலைந்து விட்டாலோ, சிதைந்து விட்டாலோ நாலைந்து நாட்களுக்கொருமுறை பணம் வழங்கப்படும்போது பணத் தைப் பெற்றுக் கொள்வது முடியாத காரியமாகிவிடும்,

வானில் வந்திருந்த தொழிலாளிகளுக்கு முன்னும் பின்னுமாக பெட்டிகள் பல இருக்கின்றன. அவற்றுடன் காரில் கொண்டு வரப்பட்ட 'ஐஸ்' கட்டிகளும் கிடக்கின்றன.

சேகரத்துடன் வந்தவர்களில் ஒருவன் 'ஐஸ்' கட்டிகளை பிரம்புக் கூடை யொன்றின் மேலிருந்த சாக்கில் போட்டுவிட்டு பலமான கொட்டன் ஒன்றினுல் அடித்து தூள் தூளாக்க ஆரம்பித்தான். தொழிலாளிகளும் 'ருலே' பறிகளினுள் ளிருந்து எடுத்து ,புறப்பறி' களுள் போட்டுக் கொண்டனர்.

வானில் வந்தவர்களில் மூத்தவனுகிய ஒரு கிழவன் தனது பறியினுள் இருந்த இருலே எடுத்து நிறுவைக் கூடைக்குள் எடுத்து வைத்தவாறே, "என்ன... சேக ரம் அண்ணை நிறுவையை துவங்கன். நாங்களும் வீட்டை போகவேணும்" என்றுன்.

சிகரெட் புகைத்துக் கொண்டிருந்த சேகரம் அதை மூற்றுக ஒழிய ஒரு 'இழுப்பு' இழுத்துவிட்டு தூர எறிந்தவனுய் எழுந்தான். தனக்குப் பக்கத்தில் இருந்த ரசீது புத்தகத்தையும் எடுத்துக் கொண்டவன், "ஏன்... உன்னை கிழவி கெதியா

வரச் சொன்னவளே'' என்று அர்த்த புஷ்டியுடன் கேட்டான். அடுத்த கணம் அச் சொற்களின் உட்கருத்தை புரிந்து கொண்டவர்களிடையே சிரிப்பு அலைமோதியது. கிழவன் அதைக் காதில் போட்டுக் கொள்ளாமலேயே நிறுவைக் கூடையை உயர்த்தி விற்றராசில் கொழுவி விட்டான்.

நிறுவை ஆரம்பமாகியது.

சேகரம் கையில் பென்சிலையும் எடுத்து 'ரசீது' எழுதுவதற்கு ஆயத்தமாக 'காபன்' பேப்பரையும் வைத்துக்கொண்டான்.

''ம்... ரெத்தினம் நிறுவையை சொல்லன்''

ரெத்தினம் அந்த வானில் வந்தவர்களில் ஒருவன். அவன் தான் தொழிலாளிகளின் சார்பில் நிறுவைக்கு பொறுப்பாக விடப்பட்டவன். இருலை நிறுக்கும்போது நிறுவையின் அளவுகளால் பிரச்சினை ஏற்படாமலிருக்க நம்பிக்கையின் பேரில் பொறுப்பாக விடப்பட்டவன். நிறுவை முடிந்தபின் ரசீதுகளை விநியோகிப்பது பின்பு வாரமொருமுறை ரசீதுகளுக்கான பணத்தை விநியோகிப்பது எல்லாமே அவன் பொறுப்பில் விடப்படும்.

ரெத்தினன் தராசின் அளவைப் பார்த்தான்.

''பதினாறு''

''என்ன...பதினாறோ...வடிவாப்பார்...இருபது இருக்கும்'' என்றவாறே கிழவன் விற்றராசின் நிறுவையை பார்த்தான். கிழவனின் கண்களுக்கு தராசின் அளவுகள் அந்த 'பெற்றோல் மாக்ஸ்' ஒளியிலும் மங்கலாகவே தெரிந்தன.

,,என்ன பேக்கதை கதைக்கிறாய். பதினாறு தானே கிடக்குது'' என்று ரெத்தினன் அதட்டினான். கிழவனால் பொறுக்க முடியவில்லை. ஒரு றாத்தல் குறைவென்றாலும் விட்டுக்கொடுக்க அவனுக்கு மனமில்லை.

''பொறு...இப்ப கொட்டாதை'' என்று நிறுக்கப்பட்ட றாலை சாக்கில் கொட்டப்போன ரெத்தினனை மறித்துப்பிடித்தவனாய், ''டேய் வேலு இங்கை வந்து இதை ஒருக்காப்பார்'' என்று வேலுவை அழைத்தான்.

வேலுவும் தராசுக்கு கிட்ட எழுந்து சென்று பார்த்தான்,

''அப்பு... பதினெட்டு இருக்கு...'' என்றான் வேலு.

''பாத்தியே சேகரம் எனக்கு இந்த ரெத்தினன் செய்யிற வேலையை...இரண்டு றாத்தல் குறைச்சு சொல்லுறான் ... இரண்டு றாத்தலுக்கும் இரண்டு ரூபாவெல்லே குறையுது என்று சேகரத்திடம் முறையிட்டான் கிழவன்,

''என்ன சொல்லுறாய்... அப்ப ரெத்தினனை பொய்யனெண்டோ. நீங்கதானே நிறுவைக்கு பொறுப்பா தெரிஞ்சு விட்டனீங்கள். பிறகு விசர்க் கதை கதைக்கிறியள்... எங்களிட்டை றால் தர விருப்பமில்லாட்டி அதிலை நிக்கிற சின்னையனுக்க ளிட்டை கொண்டு போய்க் குடன் ...'' என்று பதட்டத்துடன் கத்தினான் சேகரம்.

ரெத்தினனை அவர்கள் நிறுவைக்கு பொறுப்பா விட்டபிறகு ரெத்தினனை கைக்குள் போட்டுக் கொள்ள சேகரம் பேட்டபாடு அவர்களுக்கெங்கே தெரியப் போகிறது. ஒவ்வொருவரினதும் நிறுவையிலும் இரண்டு மூன்று றாத்தலாயினும் குறைத்துத் தந்தால் ஒரு நாளைக்கு ஐந்து ரூபாய் தருவதாக அவனுடன் ஓர் உடன்படிக்கை' செய்திருந்தான் சேகரம். சேகரத்தின் செய்கைகளில் மகிழ்ந்த இரத்தினனும் சேகரத்திற்கு துரோகம் செய்ய முற்படவில்லை.

ரெத்தினனுக்கு இவையெல்லாம் பயத்தை ஏற்படுத்தவே தான் ஏதோதவறு செய்துவிட்டவன் போல நாக்கைக் கடித்தவனாய் நடித்துக்கொண்டு தராசை மீண்டும் பார்த்தான்.

''ஓ...நான்தான் பிழை... பதினெட்டுத்தான்'' என்று சொல்லி ''அதை திருத்தி விடுங்கோ சேகரம் அண்ணை'' என்று கேட்டுக் கொண்டான், சேகரமும் திருத்தியவாறே ''அடுத்த ஆள்...'' என்றான்.

வேலுவும் நடந்தவைகளை பார்த்துக் கொண்டேயிருந்தான். சேகரம் ஆட்களை நினைக்க அவனுள் சினம் மூண்டெழுந்தது.

> ''இவங்களுக்கு ஒரு நாளைக்கு நல்லாக் குடுக்க வேணும்... பாவம் கிழவன். கிழவனுக்கு கண் தெரியாததிலே கிழவனை ஏமாத்துறாங்கள். ஒவ்வொரு நாளும் இப்படித்தான் நடக்குது. இவன் ரெத்தினனை நிறுவைக்கு வேண்டாம் எண்டு சொன்னா ...பிறகு வானிலை எல்லாரும் வந்தாப் போலைதான். தன்ரை மச்சானிட்டை சொல்லி வானையும் நிப்பாட்டிப்போடுவான். இதெல்லாம் இவங்களுக்கெங்கை தெரியப் போகுது, சேகரத்தையும் ரெத்தினனையும் நல்லவங்களெண்டெல்லே நினைச்சுக் கொண்டு இருக்கிறாங்கள்,''

வேலு பக்கத்திலிருந்த கந்தனை தட்டினான். கந்தனும் ''என்ன வேலு'' என்றவாறே திரும்பினான்.

''டேய் கந்தா...இவன் ரெத்தினனின்ரை வேலையை பார்த்தியோ''

''ஓம் வேலு. இப்படித்தான் கனநாளாய் நடக்குது போலை கிடக்கு''

''இவங்களின்ரை ஏமாற்று வேலைகள் இண்டைக்குத்தானே எங்க ஆக்களுக்கு தெரிஞ்சுது. இனிமே இவங்களிட்டை றாலை குடுக்காமல் விடலாம் எண்டா எல்லாரிட்டையும் சைக்கிள் இருக்கே? இருந்தாலும் ஐஞ்சாறு மணித்தியாலமெண்டு தண்ணிக்குள்ளை நிண்டு போட்டு இருபது மைலுக்கு ஆரால சைக்கிள் உளக்க ஏலும்... நானும் நீயுமெண்டா பரவாயில்லை...பாவம் கிழவன் பேரப்பிள்ளைகளோடை படுகிறபாடு மருமகனும் குடிகாரன். உழைக்கிறது எப்படித்தான் போதுமோ தெரியவில்லை'' என்று கிழவன் மேலும் இரக்கப்பட்டுக்கொண்டான் வேலு.

வேலுவிற்கு வீட்டின் நினைவு எழுந்தது. இன்று மத்தியானம் மனைவி ஆக்கித்தந்த சோற்றை அவசர அவசரமாக விழுங்கி வீட்டு வெளியே வந்த அவனை ''இஞ்சருங்கோ... இண்டைக்குத் தன்னும் அவங்களிட்டை அந்தக் காசை வாங்கி வாருங்கோ. நாளைக்கு அரிசிக்கு காசுமில்லை... மறந்து போகாதையுங்கோ'' என்று அவன் பின்னால் எழுந்த மனைவியின் குரல் அவனை உறுத்தியது.

''ஓமடி... வேலைக்கு போறவனை பின்னாலே கூப்பிட்டுக்கொண்டு இருக்கிறாய் இண்டைக்கு றால் பிடிபட்டாப் போலை தான்...'' என்று கத்தியவன்,

> ''இவளோடை பெரிய தொல்லை. நானும் முன்னூறு ரூபா சேர்த்துப் போட்டன், இன்னொரு ஐம்பது ரூபா சேர்த்தா ஒரு சைக்கிள் வாங்கலாமெண்டு பார்க்கிறன். மச்சானிட்டை இருக்கிற சைக்கிளை அவன் விக்கக் கிடையிலே வாங்கிப் போடவேணும்.''

என்று மனதுள் சொல்லிக் கொண்டான். வேலுவிற்கு தன் மனைவியின் சகோதரனிடத்தில் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. தன்னை, தங்கையின் கணவன் என்பதால் தன்னும் மதித்து, சைக்கிளை குறைந்த விலைக்கு தருகிறான் இல்லையே என்ற எண்ணம் ஆத்திரமாக மாறி அவனுள் உருவெடுத்திருந்தது. அந்த ஆத்

திரத்தில், ''நீயும் உன்ரை கொண்ணனும்...'' என்ற வார்த்தைகள் அவன் வாயிலிருந்து பலமாக எழவே இந்தச் சங்கதியெல்லாம் தெரியாத அவர் மனைவி, ''ஏன் ...இவர் என்ரை அண்ணனை ஏசுறுர்...'' என்று நினைத்து குழம்பியவளாய் நின்றுவிட்டு வீட்டிற்குள் சென்றவள் கதவை ''படார்'' என்று பலமாக சாத்தி தன் அதிருப்தியைக் கணவனுக்குத் தெரிவித்துக் கொண்டாள்.

நிறுவை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

தராசில் நிறுக்கப்பட்ட பின்னர், சாக்கில் கொட்டப்பட்டுவிட்ட இறாலைப் பெட்டிகளில் போடுவதற்காக 'ஐஸ்' கட்டிகளை பலமான 'கொட்டன்' ஒன்றினுல் அடித்து நொறுக்கிக் கொண்டிருந்தான் ஒருவன். சாக்கில் கொட்டப்பட்டு விட்ட இறாலைப் பெட்டிகளில் போடுவதற்கு முன்னர் தரம் பிரிப்பதற்கான வேலைகளை நாலைந்து சிறுவர்கள் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் செய்யும் வேலைக்கு ஊதியமாக இறாலுடன் கலந்து வருகின்ற மீன்கள் அவர்களுக்குக் கிடைக்கும். அவர்கள் செய்யும் வேலைக்குப் பொருத்தமாகவோ என்னவோ அவர்களுக்குப் 'பொறுக்கி' என்ற அடைமொழி அவர்கள் மத்தியில் உதவி வந்தது.

பொறுக்கிகளுள் ஒருவன் மீன்களுடன் சிறிது இறாலையும் அள்ளி, தான் வைத்திருந்த கூடைகளுள் போட்டுக் கொண்டான். அதை சேகரத்தின் கழுகுக் கண்கள் கவனிக்கத் தவறவில்லை.

''டேய் பொறுக்கி... என்னடா செய்கிறுய்'' என்றவாறே வேலுவிலும் கிழவனிலும் அவனுக்கு ஏற்பட்டிருந்த ஆத்திரத்தை அவன் மீது காட்டி ஓர் உதை கொடுத்தான். சிறுவனும் குப்பற போய் விழுந்தான். இதைக் கண்டமற்ற சிறுவர்கள் தங்களுக்கு போட்டியாக இருந்த ஒருவன் இனிமேல் இல்லாமல் போய்விட்டான். என்று மகிழ்ச்சியடைந்ததால் பலமாக சிரித்துக் கொண்டனர்.

''என்ன வேலு யோசிக்கிறுய்... போய் நிறுவைக்கு கொட்டன்'' என்ற குரல் கேட்டு நினைவலைகளிலிருந்து மீண்டு வேலு இறாலை புறப்பறியில் மாற்றிப் போட்டுக் கொண்டான். இறாலுடன் அள்ளப்பட்டு வந்த மீனை திரும்பவும் பறியினுள்ளே போட்டுவிட்டு இறாலை நிறுவைக் கூடைக்குள் அள்ளிப் போட்டுக் கொண்டான்.

இறாலை சுமந்தவனுய் தராசுக்கு கிட்ட செல்ல நிமிர்ந்தவனுய்,

''ம் கொண்டா என்ன சுணங்கிறுய்...'' என்று சினத்துடன் அதட்டினுன் சேகரம். வேலு ஒன்றும் பேசாதவனுய் கூடையை தராசில் கொழுவினுன்.

''நாளைக்கு அரிசிக்கு காசுமில்லை... மறந்து போகாதையுங்கோ'' மனைவியின் குரல் அவன் காதுகளில் நின்று ஒலிப்பது போலாகவே சேகரத்தை நிமிர்ந்து பார்த்தவனுய்

''மூண்டு நாள் காசு தரேல்லை எப்ப தர்றது...'' என்று கேட்டான் வேலு. அவன் குரலில் உரிமையை அதட்டிக் கேக்கும் உறுதி தென்பட்டது. என்றுலும் அவன் சொற்கள் சேகரத்தை உறுத்தவேயில்லை.

''என்னப்பா... காசுக்கு என்ன அவசரம். எல்லாம் நாளைக்குத்தான்'' வாயில் இருந்த சிகரட்டை கையில் எடுத்துக் கொண்டவனுய் அலட்சியமான பார்வையுடன் வேலுவை பார்த்துச் சொன்னுன் சேகரம்

அவர் வார்த்தைகளில் இருந்த அசுமந்தப் போக்கு வேலுவின் சினத்தை மூண்டெளச் செய்தது.

இவங்களுக்கு சிகரட் குடிக்கிறதுக்கும் நிறுவை முடிஞ்சப்பிறகு ரெத்தினனும் இவர்களும் சேர்ந்து குடிக்கிற சாராயத்திற்கும் காசு கிடக்குது... எங்களுக்கு ஆக்கித் தின்னுற சோத்திற்கு காசு என்டு கேட்டாத்தான் இல்லாமல் கிடக்குது''

என்று மனத்துள் கறுவிக் கொண்டான் வேலு.

ரெத்தினன் நிறுவையைபார்த்து ''இருபது'' என்றான்.

வேலுவின் பார்வை விற்றராசில் படிந்தது. விற்றராசு''இருபத்தி இரண்டு'' காட்டவே அவனுள் எழுந்த உத்வேகம் ஒன்று செயலாய் மாறியது,

''விடு... என்ரை றாலை விடு...'' என்று அதட்டியவாறே நிறுவைக்கூடையை பற்றி இழுத்தவனாய்

''டேய்... எல்லாரும் எழும்புங்கடா ...இவங்கள் இவ்வளவு நாளா எங்களை பேயரெண்டு நினைச்சு ஏமாத்தியிருக்கிறாங்கள். இனியும் இவங்களை விடுறதோ... டேய் எழும்புங்கோடா... எங்களின்ரை றால் எல்லாத்தையும் அள்ளுங்கோடா...'' என்று கத்தினான்.

நெடுகவே ஏமாற்றி வந்த சேகரத்திற்கும் துரோகம் செய்து பழக்கப்பட்டு விட்ட ரெத்தினனுக்கும் வஞ்சிக்கப்படும் நிலை தெரிந்தோ தெரியாமலோ வாளா விருந்த மற்றையவர்களுக்கும் பேரிடியாய் பெருமுழக்கமாய் அவன் குரல் நின்றொலித்தது.

வேலுவின் சொற்களிலிருந்த உண்மையை அவர்கள் புரிந்து கொண்டனர். கிழவனின் இறாலிலும் வேலுவின் இறாலிலும் இரண்டு, இரண்டு, இறுத்தல்களை குறைத்து ரெத்தினன் சொல்லிக் கொண்டது ரெத்தினத்தின் துரோகத்தை அவர்கள் தெரிந்து கொள்ள உதவியது. தங்களுக்கும் அவ்வாறு இன்றும் நடந்திருக்கும் இவ்வளவு காலமும் நடந்து வந்திருக்கும் என்பதை உணர்ந்து கொண்டனர். வேலுவின் அறைகூவல் அவர்களின் உணர்ச்சியைத் தட்டியெழுப்பியது.

தொழிலாளிகள் வேலுவின் அறைகூவலை ஏற்றுக் கொண்டனர்.

எல்லாரும் வாய்க்கு வந்தபடி சேகரத்தையும் ரெத்தினனையும் ஏசிக் கொண்டே 'றால்' கொட்டப்பட்டிருந்த சாக்கை தூக்கிக் கொண்டு அங்கிருந்த மற்றைய வியாபாரிகளை நோக்கிச் சென்றனர்.

இவற்றை யெல்லாம் சேகரமும் ரெத்தினனும் அதிர்ச்சி மேலிட பார்த்துக் கொண்டே, செய்வதறியாது நின்று கொண்டிருந்தனர்.



வெட்கம் பயத்தை அளிக்கிறது. பயம் நெறியைக் காக்கிறது. இவை இரண்டும் இல்லாததால் ஆடவர் சீக்கிரம் நெறி குலைந்து விடுகின்றார்கள், இவையிரண்டும் இருப்பதால் பெண்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்கிறார்கள்.

# தமிழ் வீரம்

"அகளங்கன்"

1. முன்னொருநாள் போர்ப்பறையின்
முழக்கங்கேட்டு
முகமலரோ வாடிவிட
முத்தாம் தந்தை
அன்னவளின் தோள்தட்டி
விடையும் பெற்று
அடைந்திட்டார் போர்க்களத்தே
ஆவி நீத்தார்.

2. சின்னவளோ வாடிமனந்
தளர்ந்து மீண்டும்
சிந்தித்தாள் சிந்தையிலே
சிறிச் சோர்ந்தாள்
கன்னலெனும் கணவனுமே
கரத்தைத் தொட்டுக்
காரிகையின் முகத்திலொரு
நூறு இட்டு

3. இன்னமுதே! செருக்களத்தே
செல்கின்றேன் நான்
என்னுயிரே! என்றுடு
காத்தல் வேண்டும்
முன்னாளில் எந்தமிழர்
வீரம் எல்லாம்,
முடிந்ததில்லை என்பதனைக்
காட்டி மீள்வேன்.

4. முல்லையே முறுவலித்து
முகத்தில் கோடி
முத்தங்கள் ஈந்திடடி,
அன்பே நாட்டில்
மூண்டபோர் முடித்தந்தி
வந்தே அன்பால்
மீண்டுமொரு போர்செய்வேன்
இரவில் என்று

5. முத்தங்கள் ஒருகோடி
இட்டு வாங்கி
முகமதியைக் கரங்களினால்த்
தடவிச் சேர்த்துச்
சத்தங்கள் கேட்காமல்
மீண்டும் இட்டுக்
கார்குழலை வருடியொரு
விடையும் பெற்று

6. விரைந்திட்டான் போர்க்களத்தே
வீரன் வீழ்ந்தான்
விடியாது அவனுக்காய்
பொழுது என்றும்
இளநங்கை மலரோடு
குங்குமங்கள்
மங்கலமும் விட்டொழித்தாள்
மரமாய் நின்றாள்.

7. முரசதிர மீண்டுமொரு
முழக்கம் கேட்க,
முன்னாளின் தமிழ்வீரம்
அவளை வாட்ட,
முந்தானை தனைத்தொட்டு
நின்ற அந்த,
முறுவலிளங் கன்றுதனை
நோக்கிப் பூத்து

8. வாளொன்று கையினிலே
கொடுத்துத் தட்டித்
தோளிரண்டை நிமிர்த்தியுயர்
வீரஞ் சேர்த்து,
தாளிரண்டை எடுத்துத்தன்
மார்போ டொற்றித்
தந்திட்டாள் விடையிரத்தத்
திலகத் தோடு.

9. வீரமகன் பால்மாறு
வாயி னோடு
திரமொடு செருக்களத்தே
புகுந்தான் போரில்
ஆர்வமொடு பலபேரைப்
புறங்கண்டந்த
அழகுமகன், முருகனென
முறுவலித்தான்

10. போர்புரியும் சிறுவனிவன்
சிங்கக் குட்டி,
யார்புரிந்தார் இவ்வகையில்
என்று கண்டு
தார் அணிந்த வேந்தரெல்லாம்
திகைத்தே நிற்கச்
சண்டானன் தானொருவன்
வேலை எய்தான்.

11. செருக்களத்தே மகன்மாண்டான்
என்னும் சொல்லில்
கொலைக்களத்தே மகன் முதுகில்
காயம் என்ன
உலைக்களத்தே இரும்பாகக்
கண்கள் மாற
முலைகளற்றி எறிந்திடுவேன்
என்று ஆர்த்தாள்.

( வேறு )

12. இடம்விழுந்த பன்றியினை எற்றித் தள்ளி
இடர்மிகுந்த போதினிலும் கரியைக் கொன்று,
வலம்விழுந்தி உண்ணுகின்ற வேங்கை போல,
வலிமைமிகு மைந்தனும் இல்லான் ஆயின்,
திடம்மிகுந்த மனத்தினராய் தந்தை மற்றும்
நிந்தமிழாம் என்கணவர் அனைத்துச் சுற்றம்,
அடைந்திட்ட வீரச்சா(வு) இழிவாம் என்று
அனலிடையே மெழுகெனவே உருகி னாளே!

( வேறு )

13. புறமுது கிட்டு மைந்தன்
போரிலே மடிந்தான் என்றால்
முறமொடு வேங்கை யோட்டும்
முத்தமிழ்க் குலத்து மைந்தன்
திறமிது வென்று கண்டால்,
திருகுவேன் அவன் குடித்த
முலையெனச் சபதஞ் செய்தாள்
முந்தினாள் களத்தை நோக்கி;

( வேறு )

14. பரியொடு கரியும்
மாய்ந்திடும் களத்தே
நரியொடு கழுகும்
நாடிய இரவில்
சுரிகுழல் கலைந்து
தரையினை அடையச்
சுந்தரன் பொன்னுடல்
தேடி யடைந்தாள்.


15. அரியெனு மகனின்
ஆகம தனிலே
உருவிய வேலையவ்
வுத்தமி பார்த்தனள்
செருவினில் மடிந்த
நிந்தமிழ் அன்னான்
கருவினில் வந்தோன்
காத்தனன் வீரம்.

16. மறையொரு நாலும்
அறியா வயதில்
மறமிது வெனவொரு
மாற்றமும் அறியான்
திறமொடு புரிந்த
தீரம் பார்த்தனள்
அறமொடு வீரத்
தாயே அவளே!

( வேறு )

17. ஈன்றஅந் நாளிலின்பம்
எய்திய நிலையேயாக
கன்றினைக் கரத்தாலள்ளிக்
காலொடு உச்சியிறுய்த்
தென்றலே! தமிழேயென்று
தெரிந்தொரு கோடிமுத்தம்,
சென்றபின் பாலுமூட்டிச்
சேர்ந்தனன் மகனோடொன்றாய்.

தமிழ் மன்றம் மென்மேலும் ஓங்கி வளர
எமது நல்லாசிகள் !



வண்ணத் துணியுகத்து
வளமார் வகையனைத்தும்
எண்ணம்போல் தேர்ந்தெடுக்க
ஏற்றதோர் எழிற்கூடம்

# கணேசன் ஸ்ரோர்ஸ்

( பிரபல புடவை மாளிகை )

63, 78, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்

# JANAWAMASA

**FINEST QUALITY**
**PURE CEYLON TEA.**

**ELECTRICAL BULBS**
**CYCLE TYRES & TUBES**
**TORCH BATTARIES.**

# V. T. A. ARUNACHALAM & CO.

**79, Kasturiar Road,**
**JAFFNA.**

அன்பளிப்பு :

## N. வைத்திலிங்கம்

இரும்பு வியாபாரிகள்.

காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தரமான — சுவையான

- ஐஸ் கிறீம் வகைகள்
- ஐஸ் பழம்
- ஐஸ் சொக்
- ஐஸ் ஜெலி
- குளிர்பானங்கள்
- சிற்றுண்டி வகைகள்

ஸ்பெஷல்
சொக்லேட் கிறிப்ஸ், ஸ்ரோபறி கிறிம்

மற்றும்

ராஜா பீடா

## ராஜா கிறீம் ஹவுஸ்

36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் ஓடர் நகைகளைக்
குறித்த தவணையில்,
சிறந்த முறையில்,
குறைந்த செலவில்
செய்விப்பதற்குச்
சிறந்த ஸ்தாபனம்,

## அமுதா
## நகை மாளிகை

உரிமையாளர் :
க. கந்தையாபிள்ளை

363, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

சுவையான சுத்தமான
சைவ உணவு வகைகளுக்கு

யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

## வை. சி. சி. கு.

காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு:

## பரணி மருந்துச்சாலை

ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

*With best Compliment*

## *Ragunathan Pathippakam*

**BOOK CENTRE**

**No. 3, New Central Market,**
**Hospital Road,**
**JAFFNA.**

# "வேலி சரியில்லாட்டில் இப்பிடித்தான்"

— மாலினி கந்தசாமி —
இறுதி வருடம், விஞ்ஞானம்.

சந்தையிலிருந்து வந்து கொண்டிருந்த தவம் படலையைத் திறக்கும்போதே கவனித்தான்: அவனுடைய அப்பா சிவலிங்கம் தோட்டத்தில் வாழை மரங்களுக்குப் பாத்தி கட்டிக்கொண்டிருந்தார். காய்கறிக் கூடையைத் திண்ணையில் வைத்துவிட்டுத் தோட்டத்துக்கு ஓடினான்.

"நீங்கள் ஏனப்பா இந்த வேலையெல்லாம் செய்யவேணும். இங்கை தாங்கோ மம்பட்டியை" உரிமையோடு கடிந்து கொண்டு அவன் கையை நீட்டினான். அவர் விடவில்லை "கொஞ்சம் பொறுபிள்ளை... போய் உடுப்பை மாத்திப்போட்டு வா... சேட் கிழியப்போகுது." அவன் உடுப்பு மாத்துவதற்கிடையில் அவர் இன்னொரு பாத்தி கட்டிவிடுவார்.

"நான் போறனப்பா... நீங்கள் மம்பட்டியைத் தாங்கோ," வலுச் சட்டாயமாக மம்பட்டியைப் பறித்துக்கொண்டு நடந்தான்.

"வெய்யிலிலை நிக்கக்கூடாது எண்டு சொன்னால் கேட்கக்கூடாதோ அப்பா?... கொஞ்ச நாளைக்கு வேலை செய்யாமலிருந்தால் என்னப்பா?" மம்பட்டியைத் திண்ணையில் வைத்துவிட்டு உள்ளே போனான்.

"இது உழைச்சு வளர்ந்த உடம்படா ...அவர் டொக்டர் அப்படித்தான் சொல்லுவார்... பிரஷரென்ன...சுரல் வியாதியும் சொல்லுவார். அதெல்லாம் பணக்கார வியாதியடா...எங்களுக்கெல்லாம் வராது ...வரக்கூடாது," அவர் முணுமுணுத்தார் "படுத்து ஓய்வெடுக்கிறதுக்கு நாங்களென்ன பணக்காரங்களா?" அவர் மம்பட்டியைத் தூக்கிக்கொண்டார்.

* * *

அநுராதபுரத்தில் வேலை பார்க்கும் சிவலிங்கத்துக்கு மாத வருவாய் குடும்பச் செலவுக்குப் போதவில்லை. தோட்டம், காய்கறியென்று உழைக்க முயன்றார்கள். லீவு எடுத்துக்கொண்டு வவுனியாவுக்கு வரும்போதெல்லாம் தோட்ட வேலையில் தான் பொழுது கழியும். தவமும் வவுனியாவிலேயே ஒரு வயல் குத்தகைக்கு எடுத்துச் செய்து கொண்டிருந்தான். அவனும் தாயும் சிறிய தம்பியும் வவுனியாவில் இருக்க ஒரு தங்கை யாழ்ப்பாணத்தில் அப்பம்மாவுடனிருந்து படித்துக்கொண்டிருந்தாள். தவத்துக்கும் யாழ்ப்பாணத்தில படிக்க ஆசைதான். 'அருமையான படிப்பு யாழ்ப்பாணத்தில்' என்று நினைத்தாலும் பொருளாதார வசதி இடங்கொடுக்கவில்லை. அவனுடைய தாயாரும் வவுனியாவை விட்டுவர விரும்பவில்லை. கொஞ்ச நாட்களாக சிவலிங்கத்தின் உடல் நிலை சரியில்லை. டொக்டரிடம் காட்டியதற்குப் 'பிறஷர்' என்று சொல்லி மருந்துகளையும் எழுதிக் கொடுத்தார். மருந்துகளின் விலையைப் பார்த்துவிட்டு மருந்துச் சிட்டையே சிவலிங்கம் கிழித்துப் போட்டு விட்டார். பிரச்சனை விட்டது என்றுதான் நினைத்திருந்தார், பிரச்சனை அங்கேதான் பிடித்துக் கொண்டது. அந்த டொக்டர் பாலனின் மகன் ரகு, தவத்துடன் படிப்பதும் அவன் படிக்க ரகு வீட்டுக்குப் போவதும் அவருக்குத் தெரியாது. ஒருநாள் டொக்டர் கேட்டார்.

"என்ன தம்பி அப்பா மருந்து ஒழுங்காய்ச் சாப்பிடுகிறாரோ?" "என்ன மாமா கேட்கிறீங்க" அவன் திகைப்புடன் கேட்டான். அதன்பின் அம்மாவின் சங்கிலியொன்றை அடைவுவைத்து மருந்துகள் வாங்கி வந்தான். ஆனால் சிவலிங்கத்தால் சும்மா இருக்க முடியவில்லை. 'அது உழைச்சு வளர்ந்த உடம்பு'

தவம் உடுப்பு மாத்திக்கொண்டு வந்தபோது சிவலிங்கம் மீண்டும் பாத்தி கட்டிக்கொண்டிருந்தார். "அப்பா" தவம்

தோட்டத்தில் இறங்குமுன் அது நடந்து விட்டது. அவர் கையிலிருந்த மம்பட்டி கைதவறிக் காலில் பாய்ந்து குருதிகொட்ட 'அம்மா' என்று காலைப் பிடித்துக்கொண்டு அவர் உட்கார்ந்து விட்டார். தவம் ஓடிப் போய்ப் பிடித்துக் கொண்டான்.

மாலையிலேயே வெளிக்கிட்டார் சிவலிங்கம். 'நான் ஒருக்கா யாழ்ப்பாணம் போட்டு வாறன்... அவன் தவம் வந்தா பஸ் ஸ்ராண்டுக்கு வரச்சொல்லு,' மனைவியிடம் சொல்லிவிட்டுப் பையைத் தூக்கிக் கொண்டார்.

''உந்தக் காலோடை இண்டைக்கென்ன அவசரம்... பிறகு போங்கோவன்'' அவர் மனைவி தடுக்க முயன்றாள்.

''என்ரை வேலையை நான்தான் செய்ய வேணும்... அதோட நாளையோட லீவு முடியுது... வேறநேரமில்லை,'' அவர் புறப்பட்டு விட்டார். பையைத் தூக்கிக் கொண்டு காலைச் சாய்த்துச் செல்லும் அவரைப் பார்த்துப் பெருமூச்சு விட்டாள் அவள். 'என்னவோ காலம் சரியில்லை.' கடைசி மகன் சுதா ஓடிவந்தான். ''அம்மா அப்பம்மா வீட்டை இருந்து எனக்கு மோதகமும் வடையும் வரும்... என்னம்மா,'' அவன் தாயைக் கட்டிக்கொண்டான்.

* * *

சோர்ந்து களைப்புடன் வந்த சிவலிங்கம் பஸ் ஸ்டாண்டில் சைக்கிளில் நின்ற தவத்தைக் கண்டதும் சிரித்தார், 'பொறுப்புள்ளபிள்ளை.' ''கனநேரமா நிக்கிறியோ தவம்'' அவர் சைக்கிளில் ஏறிக்கொண்டார்.

''என்னட்டைச் சொல்லியிருந்தா நானே போயிட்டு வந்திருப்பன்... நீங்கள் ஏனப்பா இந்தக் காலோட கஸ்ரப்பட வேணும்''

''நீ போகக் கூடிய வேலையெண்டால் நான் ஏன் போறன்,'' அவர் கொஞ்ச நேரம் பேசாமல் இருந்தார்.

''உனக்குத் தெரியுந்தானே, என்ரை தங்கச்சிக்குக் கலியாணப் பேச்சு நடக்குது ...சீதனப்பேச்சால் இந்த முறையும் குழம்பிப்போடும் போலக் கிடக்கு...ஒரு பத்தாயிரம் ரூபாயெண்டாலும் குடுக்கவேணும் கடனுக்கு எழுதிப்போட்டிருக்கு கிடைக்குமெண்டுதான் நினைக்கிறன்...பாவம் அம்மாவுக்கு என்னை விட்டா ஆரிருக்கினம்? அதுதான் சொல்லிப்போட்டு வாறன்.''

சைக்கிள் வயல் வீதியில் ஓடத் தொடங்கியது. அவன் தான் செய்யும் வயலைக் காட்டிச் சொன்னான். ''வயல் வெட்டத் தொடங்கியாச்சு. விளைச்சலில் ஒரு பங்கு எனக்குத்தான்,'' சிவலிங்கம் பேசாமலிருந்தார்.

''அந்தக் காசை உங்களிட்டைத் தான் தரப்போறன். இங்கை ஏதாவது ஒரு கடை போட்டிட்டு எங்களோடை இருங்கோ... இவ்வளவு தூரம் போய் வேலை பார்த்து என்னத்துக்கப்பா... இன்னும் கொஞ்ச நாளில் பென்சனுக்கு எழுதிப் போட்டிடலாம்'' அவன் தன்னுடைய எண்ணங்களைச் சொல்லிக் கொண்டிருந்தான்.

'எனக்குக் கூட இப்போ வேலைசெய்ய முடியேல்லையப்பா... அடிக்கடி களைப்பும் சோர்வும்' அவர் சொல்ல நினைத்தாலும் சொல்லவில்லை மௌனமாக வயல்களைப் பார்த்துக் கொண்டிருந்தார் 'சரியாகக் கஷ்டப் பட்டிருக்கிறான்... பாவம்'

''அம்மாவீட்டுக்குப் பக்கத்தில இருக்கிற செல்லையாவைத் தெரியுந்தானே உனக்கு... அவர் மிளகாயேத்திக் கொண்டு லொறியில் போறாராம். நானும் வாறனெண்டு சொல்லிப்போட்டன்... பஸ் காசு மிச்சந்தானே'' தவம் ஒன்றும் சொல்லவில்லை. அவர் காலைப் பார்த்துப் பெருமூச்சு விட்டான். 'இன்னும் கொஞ்ச நாளைக்குத்தான்.'

* * *

சாவகச்சேரி, ஒரு ஓலை வீடு. பத்துமணியாகியும் அந்த வீட்டில் யாரும் முகம்கழுவவில்லை சமைக்கவுமில்லை. தியாகு கடைக்குப்போய் பாண் வாங்கி வந்தான். யாரும் எழும்பவில்லை. பொறுக்க முடியாமல் தியாகு எழும்பி அக்காவிடம் போனான்.

''எங்களுக்கெல்லாம் ஆறுதல் சொல்லவேண்டிய நீங்களே இப்படி இருந்தால்

நாங்களெல்லாம் என்னக்கா செய்யிறது... எழும்புங்கோ"

நேற்றுக் கிணத்தடியில் வழுக்கி விழுந்து தலையில் பலமான அடியுடன் மயங்கிவிட்ட அவர்களுடைய அம்மாவை ஆஸ்பத்திரியில் சேர்த்திருந்தார்கள். ஆறு மணித்தியாலங்களாக நினைவு திரும்ப வில்லை. அவர்களுக்கு அம்மாவைப் பிரிந் திருந்து பழக்கமில்லை. ஏதாவது நடந்து விடுமோ என்று பயந்து...பயந்து...

''எனக்குப் பயமாயிருக்குத் தியாகு... அப்பாவைக் கூட்டிக்கொண்டுவா'' அவள் அழத்தொடங்கினாள். அவன் கொஞ்ச நேரம் பேசாமல் இருந்தான்.

சரியக்கா நான் போறன்... நீங்கள் அம்மாவுக்குச் சொல்லவேண்டாம்... நான் எப்படியும் மட்டக்களப்புக்குப் போய் அப் பாவைக் கூட்டிக்கொண்டு வாறன்.'' அவன் ஒரு சீலைப்பையில் ஒரு துண்டு பாணைக் கட்டி வைத்துக்கொண்டு புறப் பட்டான்.

* * *

செல்லையாவின் லொறியில் மிளகாய் மூட்டைகள் ஏறிக் கொண்டிருந்தன. ''இந்தமுறை வழக்கத்தை விடக் கூட மிளகாய் கொண்டு போறன்... இதோட இந்த வேலைக்கொரு முழுக்குப் போடப் போறன். லொறியை வித்தாத்தான் கட னெல்லாம், அடைக்கலாம் போலக் கிடக்கு.'' அவர் மனைவியிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

''அப்பா! அடுத்த கிழமை கட்டாயம் யாழ்ப்பாணம் திரும்பி வந்திட வேணும். எங்கடை 'ஸ்போட்ஸ்' இருக்கு... நானும் ஒரு சம்பியன் அப்பா'' லீலா கெஞ்சுகிறாள்.

''வருவன், கட்டாயம் வருவன்...என் ரை ஒரே ஒரு மகளின்ரை விளையாட் டைப் பாக்காம எனக்கென்ன வியாபா ரம்'' அவர் லொறியில் ஏறிக்கொண்டார். ''இந்த முறை உனக்கு புதுப் 'பிறசெலட்' கொண்டு வருவன்.'' மகளுக்குக் கையை ஆட்டினார். லொறி புறப்பட்டு விட்டது. சாவகச்சேரியைத் தாண்டிக் கொண்டி ருந்த லொறியை ஒரு இளைஞன் மறித் தான்.

''அண்ணை! அவசரமாக மட்டக்களப் புக்குப் போக வேணும்... பஸ் ஒண்டும் இல்லை... நானும் வரட்டே?''

துயரமும் குழப்பமும் நிறைந்த அந்த இளைஞனிடம் ஏனோ இரக்கம் பிறந்தது. ''ஏறிக்கொள்'' என்றார். வவுனியாவில் சிவலிங்கத்தையும் மறக்காமல் ஏற்றிக் கொள்ள வேண்டும்' செல்லையா நினைத் துக்கொண்டார்' ''தம்பி உமக்கென்ன பேர்?'' கேட்டுக்கொண்டே பாதையைப் பார்த்தார்.

''தியாகு'' என்றான் அவன்.

செல்லையாவின் லொறியில் ஏறிக் கொள்வதற்காகச் சிவலிங்கம் தயாராக நின்றார். ''கால் காயம் கவனம் அப்பா'' தவம் சொன்னான்.

சிவலிங்கம் சிரித்தார் ''சின்னப்பிள்ளை மாதிரி என்னிலை என்ன கவனம்!''

கம்பி வேலியினூடாக அடுத்த வீட்டு நாய் பாய்ந்து வந்து இவர்களுடைய நாயைக் கடிக்க, 'சீ... போ!' தவம் துரத்தினான். ''வலியச் சண்டைக்கு வருகு தப்பா... ஒருநாள் இந்தக் குட்டியைக் குதறிப்போடும் போலக் கிடக்கு... வேலி சரியில்லாட்டில் இப்பிடித்தான்.''

''கிராம நாயளுக்கு இதொரு பழக் கம்'' சிவலிங்கம் லொறியில் ஏறிக்கொண் டார்.

''போன உடன் கடிதம் போடுங்கோ'' என்றாள் மனைவி.

* * *

யாழ்ப்பாணத்து அடிவானத்தில் அக் கினிக் கோளமாகச் சிவந்திருந்தான் கதி ரவன், கார்மேக மொன்று எரிமலையாகி அக்கினித் துண்டங்கள் சிதறிக் கொண் டிருந்தன. முகம் கறுவவந்து கிணத்துக் கட்டிலிருந்த தவம் வானத்தை வெறித் துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''தம்பி! முகத்தைக் கழுவிப்போட்டுக் கெதியில் வாரும்'' மாமா கூப்பிட்டார்.

''அண்ணா! எல்லோரும் வந்திட்டினம் ...அப்பா ஏன் இன்னும் வரேல்லை.'' தங்கை கேட்கிறாள்.

''வருவார்,'' அவன் சிரிக்க முயன்றான்.

''என்ரை கண்ணுக்கு முன்னாலை... என்ரை கண்ணுக்கு முன்னால் விளைச்சல் எல்லாத்தையும் கொழுத்திப் போட்டாங்கள் மாமா'' தவம் மாமாவின் கையைப் பிடித்துக்கொண்டு அழுதான். வவுனியாவிலிருக்க முடியாமல் யாழ்ப்பாணத்துக்கு வந்துவிட்ட குடும்பம் அமைதியில்லாமல் தவித்துக்கொண்டிருந்தது.

''அந்தக் காசை எடுத்து அப்பாவுக்குக் கடைபோடலாம் எண்டு நினைச்சன்'' மாமாவுக்கு நெஞ்சில் வலித்தது. அப்பாவோ இன்னும் வரேல்லை. இவன் பழசை நினைச்சு அழுறான்.

''எல்லாம் பிறகு பாப்பம்... முதலில் எழும்பு... எல்லாரும் அநுராதபுரத்தில் இருந்து பஸ்சில் வருகினமாம் உங்கை ஸ்ரான்லி கொலிஜில் தானே முகாம் உன்ரை அப்பாவும் வருகிறாரோ பாப்பம் ...வா ...வா''

அவன் முகம் கழுவினான். காகங்கள் கூட்டமாகச் சேர்ந்து கிளியொன்றைக் கொத்திக் கொண்டிருந்தன. கிளி வெளியேற வழியின்றி அலறிக்கொண்டிருந்தது. அவன் ஒரு கல்லை எடுத்துக் கலைத்து விட்டான். கூட்டம் சேர்ந்தா காகத்துக்குக் கூட ஆணவம் வந்திடுகுது.''

''அப்பா ஏன் இன்னும் வரவில்லை?'' அவன் யோசித்துக் கொண்டே முகத்தைத் துடைக்கிறான். 'சீ! அப்பிடியொன்றும் நடந்திருக்காது.' அவனுக்குத் திகிலும் குழப்பமும் அதிகரிக்கத் தனிமைபயத்தை அளித்தது. போன கிழமை லொறி விபத்தில் சிதறிப்போன நாயொன்றின் உடல் காரணமின்றி எழுந்து வயிற்றைக் கலக்கியது. 'சீ, அப்பாவுக்கு ஒன்றும் நடக்காது.'

'செல்லையா வந்திட்டாராம்...' மாமா ஓடிப்போகிறார். தவமும் ஓடினான். 'அப்பாவும் வந்திருப்பார். போய்க் கூட்டிவருவம்... அப்பா பாவம்! கால்காயம் மாறி இருக்காது. சைக்கிளில் கூட்டிக்கொண்டு வரலாம்.'

'இவ்வளவு நேரமும் ஏதோ எல்லாம் நினைச்சு வீணாப் பயந்து...பயந்து' அவன் சைக்கிள் வாங்குவதற்காக செல்லையா வீட்டுக்குப் போனான்.

''என்னோடை வந்த பெடியனுக்கு உடம்பெல்லாம் ஒரே வெட்டுக்காயம்... என்னப்பா சொல்லுறது... சிவலிங்கம் காலேலாது பின்னாலைதான் ஓடிவந்திது...என்ரை கண்ணாலை கண்டனப்பா... சோடாப்போத்திலை உடைச்சு வயித்தில் குத்திக் கிழிச்சுப்போட்டாங்கள்.''


தவம் எதையாவது பிடித்துக்கொள்ள முயல்கிறான். முடியவில்லை. அப்படியே சரிந்து நிலத்தில் உட்கார்கிறான். முன்பின் தொடர்பில்லாமல் அப்பாவின் ஒரு வசனம் காதை நெரிக்கிறது. ''இது உழைச்சு வளர்ந்த உடம்படா''... ''அப்பா ஏன் இன்னும் வரேல்லையாம்' அம்மாவும் தங்கச்சியும் ஓடி வருகிறார்கள் மாமா எழுந்து வெளியே ஓடி வருகிறார்.

மங்கலான இந்த உணர்ச்சிகளையும் மீறி ஒரே ஒரு உணர்வு 'அப்பா இனி வர மாட்டார்'... என்ற உணர்வு அவன் நெஞ்சில் திரும்பத் திரும்ப...திரும்பத் திரும்ப...

★

கடலின் அலைகளை எப்படி நிறுத்த முடியாதோ, அப்படியே உணர்ச்சிகளின் அலைகளையும் நிறுத்த முடியாது. ஆனால் அந்த அலைகளில் மூழ்காதிருக்கலாம்.

சாய்ப்புச் சாமான்கள்



- பட்டு
- பருத்தி
- நைலோன்
- சிந்தட்டிக்
- கைத்தறி
- வோயில்

சேலைகளுக்கும்

- சேட்டிங்
- சூட்டிங்
- றெடிமேட்
- சிறுவர்

உடைகளுக்கும்

இதர பிடவை வகைகளுக்கும்

# இராசமலர் களஞ்சியம்

79, காங்கேசன்துறை விதி,

யாழ்ப்பாணம்

தொலைபேசி: 494

அன்பளிப்பு

# செல்லப்பா & கோ

4/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

---

*For Quality Recording*

Visit

## VICTOR & SONS RECORDING BAR

100, Stanley Road,
JAFFNA.

தமிழ் மன்றம் ஓங்கி வளர
எங்கள் ஆசிகள்.

# மு. பொன்னுச்சாமி & சன்ஸ்

பருத்தித்துறை.

நல்வாழ்த்துக்களும்
அன்பளிப்பும்

பரராஜசிங்கமும்
அம்பிகைபாலனும்

## அம்பிகை பவான்

சாவகச்சேரி.

Visit

## KANDY GOLD HOUSE

Main Street,
KALMUNAI.

அன்பளிப்பு :

## வீ. எம். கே. தங்க மாளிகை

கண்டி வீதி, சாவகச்சேரி.

Visit

## CICILIYA STORES

15, Main Street,
KALMUNAI.

# இறுதி விடை

— ராஜா —

இது,

அழியாது நிலைபெற்று அமரத்துவம் பெற்றுவிட்ட ஒரு அபூர்வக் காதலுக்கு பாமகன் ஒருவனால் பாடிவைக்கப்பட்ட பார்புகழ் காவியமல்ல.

எதிர்கால உலகின் இளநெஞ்சங்கள் இவர்கள் இலட்சிய காதலர்கள் என எண்ணி இறுமாப்படையப் போகும் ஈடிணையற்ற இலக்கிய படைப்பும் அல்ல.

ஆனால்,

அன்பிற்கு அடிமையாகி, ஆரணங்கொருத்தியின் நஞ்சு கலந்த கொஞ்சும் வார்த்தைகளால் வஞ்சிக்கப் பட்டு வாழ்வின் அந்திய கட்டத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் காதலன் ஒருவனின் கண்ணீர் புலம்பல்.

அளவற்ற அன்பை அருகதையற்ற ஒருத்தியிடம் செலுத்தி அதற்குப் பரிசாக அவமானம் என்னும் அலைகடலில் மூழ்கி தன் மரணயாத்திரையின் இறுதி வினாடிகளில் அவன் இதழ் சிந்தும் உளறல்களின் ஒருங்கிணைப்பு.

அவன்...

பார்புகழும் ஒரு பாவலனாய் இருந்திருந்தால்,

தன் நா குழறும் வார்த்தைகளை கோர்வையாக்கி,

நாடறிய...

ஒரு கோடி நாதங்கள் இசைத்திருப்பான்...

ஊர் வாழ்த்தும் ஓவியனாய்த் திகழ்ந்திருந்தால் - தன் உள்ளத்து உணர்ச்சிகளைப்,

பல பல வண்ணங்களாய் வாரி,

ஊரறிய ஓர் உருவம் வரைந்திருப்பான்.

ஏற்றமுற்ற ஓர் எழுத்தாளனாயிருந்தால்...

தன் இதயத்தின் குமுறல்களை,

இலக்கியமாய்ப் படைத்து,

காதலிலே வஞ்சிக்கப்பட்ட காளையரின் காலடியில்,

காணிக்கையாய் அளித்திருப்பான்.

ஆனால், அவனோ...

ஒரு சாதாரண மனிதன்;

உணர்ச்சிகளால் உலகை அளக்க நினைக்கும்,

ஒரு உயிருள்ள சடலம்.

ஆதலால்,

தன் இதய வீணையின் நரம்புகள் எழுப்பும் சோக கீதங்களைக் கருத்தற்ற வார்த்தைகளாய்.

கண்ணீரில் வரைகின்றான்

அவன் பாவம்...

அவள் வருகை...

தன் வாழ்வில் வரப்போகும் சல சலக்கும் நீரோடை என்றிருந்தான்,

ஆனால்...

அது நீரோடையல்ல... பாய்ந்து வந்த காற்றாட்டு வெள்ளம் எனப் பின்னறிந்தான்.

அவள் நினைப்பு...

சிலிர்க்கும் தென்றலின் அரவணைப்பு என்றிருந்தான்.

ஆனால்... அது தென்றலின் சிலிர்ப்பல்ல... சிறிவந்த புயல் காற்றின் சீற்றம் எனப் பின்னறிந்தான்.

அவள் உறவு...

நிலமகளை ஒளிவெள்ளமாக்கப்போகும் நிலவின் வரவு என்றிருந்தான்.

ஆனால்...

காரிருளில் பளிச்சிட்ட கணநேர மின்னல் அதுவென்று பின் அறிந்தான்,

காலம் கடந்து கண்ட இவ்வுண்மைகளால் நன்மையென்ன...?

அவன்,

அவள் காதலை இழந்துவிட்டதற்காக கண்ணீர் விடவில்லை. ஆனால்... காதலின் மகத்துவம் அறியாத காரிகை ஒருத்தி மேல் தான் கொண்ட காதலின் கண்மூடித்தனத்திற்காக வருந்துகிறான்.

அவள் அன்பை அடையாததற்காக வருந்தவில்லை... ஆனால்... அன்பின் வலிமை அறியா அரக்கி ஒருத்தி மேல்தான் அன்பு செலுத்திய அறியாமைக்காக வருந்துகிறான்.

தான் தொடர்கதை என வரித்திருந்த காதல் ஒரு சிறுகதைக்கு கூட உருவம் கொடுக்க வில்லை என வருந்தவில்லை, ஆனால் அக்கதையின் காவிய நாயகியாக தான் கணித்திருந்தவள் கேவலம் — நேரத்துக்கு நேரம் வேடமாற்றும் ஒரு நாடகப் பாத்திரம் என அறிந்தே வருந்தினான்.

கனவாகிப்போன தன் காதல் வாழ்வு, அந்த நாட்களின் ஒரு சில இனிய நினைவுகள், இவை அவன் மறக்க முயன்று தோல்வியுற்ற இதயத்தின் இரகசியங்கள்.

நினைவுகள் அவன் துயர நாடகத்தின் ஒரு சில சின்னங்கள். நினைவுகளை தன் மனமேடையிருந்து. தூக்கியெறிய நினைக்கும் ஒவ்வொரு கணத்திலும் அவை மீண்டும் மீண்டும் புதிய அலைகளாய்த் தோன்றித் தன்னைச் சித்திரவதை செய்வதை உணர்கிறான்.

எதை ஒருவன் மறக்க முயல்கின்றானோ அந்த முயற்சியே மீண்டும் மீண்டும் அதை நினைக்க வைக்கும் இயற்கையின் கொடுமைக்கு அவன் மட்டும் விதிவிலக்கா...?

ஒரு நாள்...

அவன்— அவள்— அவள் தோழி

அவள் கையில் அழகிய மூன்று ரோஜா மலர்கள்

அவன் சிவப்பு ரோஜாவைக் கேட்கிறான்— அவள் கொடுக்கிறாள். அத்துடன் விட்டானா?... மஞ்சள், வெள்ளை என ஆசையோடு கேட்க அவள் அனைத்தையும் கொடுத்து விடுகிறாள்.

அருகில் நின்ற அவள் தோழி ''அவர் கேட்டால் நீ எதையும் கொடுக்கிறாயே'' எனக்கூற ''அவரின்றிப் பின் எவருக்கு அவற்றை அளிப்பேனடி'' என அவள், அவள் தோழியை வாயடக்குகிறாள்.

இது நினைவுகளின் மீட்சியில் ஒரு துளி. இது மட்டுமா...? இது போன்று எத்தனை... எத்தனை... அத்தனையும் ஒருநாள் அரைக் கணத்தில் மறந்து அலட்சியம் தொனிக்க அவள் அவனை விலக்கிச் சென்றாளே... அதுவும் அவள்தான்.

ஹா...! நினைவுகளின் மீட்சி நெஞ்சில் நெருப்பைக் கொட்டுகின்றன.

இவற்றிற்கு இறுதி முடிவை இன்று அவன் கண்டுவிட்டான்.

நினைவுகள் நெஞ்சில் மீட்சியுறாத ஒரு நித்திரை — மீண்டும் மீளாத நித்திரையில் ஆழ்ந்துவிட அனுமதி பெற்றுக்கொண்டான்.

உணர்வுகள் ஒடுங்கி ஓய்ந்துவிட உறக்கம்— நிம்மதியான— உறக்கத்தில் ஊரின் எல்லையில் ஓய்வெடுக்க உறுதி கொண்டுவிட்டான்.

ஆயிரம் ஆசைகளை அவனியில் விட்டுச் சென்றோர்— ஆடிக்களைத்து ஆசைகளை அறுத்து ஆண்டவன் அடிகளுக்கு அமைதி தேடிச் சென்றோர்— தினம் ஒரு காரில் பவனி வந்து திக்கெல்லாம் புகழ்பரப்பி செல்வச் செருக்கோடு வாழ்ந்தோர்—ஒரு வேளை உணவின்றித் தெரு வீதிகளிலே எச்சில் இலை பொறுக்கி வாழ்ந்தோர்— அனைவரையும் தன்னுள் அடக்கி சமதர்ம சமுதாயமொன்றை உருவாக்கிக் கொண்டிருக்கும் அந்த வனம் — அது நந்தவனமல்ல, ஆனால் புதைத்த இடத்திலெல்லாம் பூத்துக் குலுங்கும் ஒரு புதுமைப் பூமி. அதை நோக்கி அவன் தன் யாத்திரையைத் தொடங்கிவிட்டான்.

அந்த நிலமகளை அகழ்ந்தெடுத்த நிரந்தர வளை அவனுக்காகக் காத்துக்

கொண்டிருக்கிறது. அங்கே அவனுக்கு நினைவுகளை மறந்துவிட்ட நிம்மதி நிலை. அதைநோக்கி அவன் தன் அந்திம யாத்திரையைத் தொடங்கிவிட்டான்.

அங்கே...

அவனை மயக்கும் ஆடல் நங்கையர் இல்லை. வஞ்சித்து குழிபறிக்கும் வனிதையர் இல்லை... காதல் மணம் பரப்பித் திரியும் கன்னியர்களில்லை. காதல் இல்லை. காதல் தோல்வியும் இல்லை.

அதனால்...

அவனைச் சுற்றி வளைத்து சூறையாடும் சோக நினைவுகள் இல்லை.

இது அவனது யாத்திரை. ஆனால் அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து, ஊரார் வாழ்த்த உலகம் வியக்க ஒரு காந்தி நடத்திய உப்பு யாத்திரையைப் போன்றதல்ல... உலகை வெறுத்து, உள்ளம் நெக்குருக அடியார் படை சூழ புறப்பட்ட புனித யாத்திரையுமல்ல...

சோகங்கள் கரைமீற, துயர வெள்ளம் அணைகடக்க, நினைவுகளின் பிடியிலிருந்து நிரந்தர விடிவு பெற அவன் விரும்பிய தால் விளைந்த விதியின் யாத்திரை.

ஊரார்கள் கிசு கிசுக்க, உறவினர்கள் தலை குனிய மனச்சாட்சி மறக்கவேண்டி மறைந்து மறைந்து அவன் செய்யும் மரணயாத்திரை.

புண்ணிய பூமியில் பிறந்து, பூ மனம் அல்ல - தேன் மணம் கொண்ட சிருங்கார நங்கையரை விட்டு— தேன் துளி அல்ல சிந்திவிழும் விஷத்துளிகளை இதழ்களிலே தேக்கி நிற்கும் தேவதைகளை விட்டு—ஆடவரைக் கொல்லாமல் கொன்று விட்டு நல்லவராய் நாடகமாடும் நாகரீக உலகின் நாரீமணிகளை விட்டு அவன் பெற்றுக் கொண்ட விடுதலை யாத்திரை.

அவன் யாத்திரை ஆடவர் உலகத்திற்கு ஒரு அபாய அறிவிப்பாக இருக்கட்டும். இதுவே அவன் இறுதி ஆசை.

## ஒரு சந்தேகம்...

"கண்ணன்"

வட்டமிருக்குமிடமெல்லாம்
உங்கள்
புத்தகோவில்களிருந்ததென்றால்,
இருள்சூழ் இரவொன்றில்
இருள் சிறிதகற்றி
பாலொளி தந்துநிற்கும்
முழுமதியிலும்,
பார்வைக்குச் சுட்டெரித்தாலும்
பயிர் வளர்த்து
மனுக்குலத்து உயிர்காக்கும்
பகலவன் மீதிலும்
உங்கள்
புத்தகோவில்களிருந்தனவோ?

# விசித்திர வண்டி

வாழ்க்கை வசதியுடையோர்க் கின்பப் பொய்கை
வளமற்று வாடுவோர்க்கொரு போர்க்களம்
சிந்தையிலே நிறைவுண்டானுல் சிறந்த வாழ்க்கை
'சீச்சீ' என்ற வாழ்க்கை நிம்மதி யிழந்தோர்க்கே
துன்பம் வறுமை யென்னும் கோடுகள் வாழ்க்கையிலே
துடுக்கற்ற கப்பலைப் போலலைந்திடுவர் வாழ்வுக்கடலிலே
வகை வகையாய் வசதிகள் யாவும் பெற்றுவிட்டால்
வாழ்க்கை யொரு பொற்றேராய்ப் பவனி வரும்

வாழ்க்கை யென்பதோர் விசித்திரங் கண்டீர்
வையகத்திலதன் அற்புதங்கள் கேள்மின்
வீதியிலே யெயிலில் வாழ்வதோர் வாழ்க்கை
விசிறியொடு மாடியில் வாழ்வதோர் வாழ்க்கை
பசியுடன் போராட்டம் வாழ்க்கையிலே
குஷியுடன் களியாட்டம் வாழ்வுச் சோலையிலே
ஏமாற்று வித்தையால் சினப்பதோர் வாழ்க்கை
ஏமாற்றப் படுவோர்க் கது விரக்தி வாழ்க்கை
வாழ் வென்பது வெறுங்கனவே சிலருக்கு — அது
வசந்தம் மலிந்த கொள்கலம் மற்றோர்க்கு

வாழ்க்கை யெனும் வண்டியிலே எத்தனை பேதம்
வழுக்கி வீழ்பவர், வன்மையாகப் பற்றுவர் என்றே
எத்தனை யறைகள் அப்பெரும் வண்டியிலே
ஓர் அறையில் பணக்காரர் அடுத்தறையில் பரதேசிகள்
இவ்வறைதனில் இரக்கமற்ற கல் நெஞ்சர்
அதோ அவ்வறையில் அங்கவீனர் கும்பல்
அதற்கப்பாலே ஏமாற்றி வாழும் நயவஞ்சகர்
பக்கத்து அறைதனிலே ஏங்கித்தவிக்கும் குலம்

பார்வையை மேலேவிட்டால் அவ்விடத்தே
பார்த்திருக்க உண்ணும் வயிறு புடைத்த சீமான்கள்
பல்லிளிக்கும் பாசாங்குக் கூட்டம் தனியறையில்
எல்லோரும் மனிதரே என உணராதார் ஓரிடத்தே
வல்லான் இறைவனெனும் சாரதியே — இப்
பல்லோர் சுமை வண்டியை இயக்கிச் செல்வது பார்
உள்ளாரு மல்லாரும் மற்றோரு மெல்லோரும்
ஊர்ந்து செல்வதிந்த விசித்திர வண்டியிலே.

— செல்வி, விக்னேஸ்வரி விஸ்வலிங்கம் —

அன்பளிப்பு:

# ரவி ரேடர்ஸ்

செட்டிகுளம்.

சகல விதமான
பலசரக்குச் சாமான்களும்
சகாய விலையில்
எம்மிடம் பெறலாம்.

## சிவன் ஸ்ரோர்ஸ்

பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

உங்களுக்குத் தேவையான
தங்க ஆபரணங்களுக்கு
நம்பிக்கையான ஸ்தாபனம்



## தாமோதரம்ஸ் நகைத் தொழிற்சாலை

காங்கேசன்துறை வீதி,
இணுவில்.

ஆடவர்களே !

தரமான தையல் வேலைப்பாடுகளுக்கு
நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டிய இடம்,

# REGINE
## DRESS MANUFACTORY

3, ஜும்மா பள்ளி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

---

சித்திரக் கோலத்தில்
சிங்காரப் புதுமை நிறைந்த
★ கூறைச் சேலைகள்

நெஞ்சை அள்ளும்,
★ நைலெக்ஸ் சாறிகள்

அனைத்திற்கும்

## ஞானம்ஸ்
### ரெக்ஸ்ரைலஸ்

18 A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

---

வாழ்த்துக்கள் !

## M. P. L. MANUFACTURES

118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நாளுக்குநாள் மாறும் நாகரிக

புடவைத் தினிசுகளுக்கு

விஜயம் செய்யுங்கள்

# ரஞ்சஹௌஸ்

17, 18, 18A, நவீன சந்தை,

யாழ்ப்பாணம்.

---

விவசாய இரசாயன மருந்து வகைகள்

உர வகைகள்

இறக்குமதி செய்யப்பட்ட

மீன்பிடி வலைகள்

நிதான விலையில்

விற்பனை செய்பவர்கள்.

# வின்ரோ

6, நவீன சந்தை, (மேல்மாடி)

யாழ்ப்பாணம்.

---

மணிப்புரி சேலைகள்

நூல் சேலைகள்

வோயில் சேலைகள்

சேட்டிங்-சூட்டிங் வகைகள்

# லிங்கம்ஸ்

## சில்க் ஹவுஸ்

18, நவீன சந்தை,

யாழ்ப்பாணம்.

உங்கள் புகைப்படங்கள்
சிறப்பாக அமைய
நாடுங்கள்

# பாரத் ஸ்ரூடியோ

அவசர வேலைகள்
உடனுக்குடன் கவனிக்கப்படும்.

82/1, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

# இருள் விலகுகிறது.

— "அகளங்கன்" —

பறவைகள் கூச்சலிட்டுக் கொண்டு தம் கூடுகளை நோக்கிப் பறந்துகொண்டிருந்தன. ஆதவனும் தன் கதிர்களை வாரிச் சுருட்டிக் கொண்டு அகன்று கொண்டிருந்தான். எங்கும் ஒரே இருள் சூழ்ந்துகொண்டிருந்தது.

வானத்தில் மட்டுமா இருள்? இல்லை, வரதனின் உள்ளத்திலும்தான். வானத்துப் பறவைகளின் மாலைநேரத்துக் கானமெல்லாம் அவனது இதயத்திலும் ஒலித்துக்கொண்டிருந்தன. மாலை நேரத்தில் மன்மதனின் ஐங்கணையின் தாக்குதலில் மெய்மயங்கி வாடவேண்டிய பருவம் அவனுக்கு. மனம் மயக்கும் மங்கையரின் நினைவிலே மதிமயங்கிக் களிப்படையவேண்டிய வயது அவனுக்கு.

இப்போதும் மங்கையரின் நினைவுதான். ஆனால் அவை துன்பமயமான நினைவுகள். தனது உடன்பிறந்த சகோதரிகள் பற்றிய நினைவுகள்.

வெட்டவெளியொன்றை நோக்கி வீதி வழியே சென்றுகொண்டிருந்தான் வரதன். வெட்டவெளிபோல் இருந்த அவனது இதயத்தில் எத்தனை கவலைக் கள்ளிகள் முளைத்துவிட்டன. நீலமாயிருந்த அவனது இதய வானத்தில் எத்தனை கருமுகில்கள் படர்ந்துவிட்டன. "காற்று வீசாதா? கருமுகில் கலையாதா? என் கவலைகள் தீராதா?" என்று அவன் அங்கலாய்க்காத நாளேயில்லை.

காற்று வீசவுமில்லை. கருமுகில்கள் கலையவுமில்லை. அந்தக் கருமுகிலெல்லாம் அவனது கண்களுக்குள்ளே வந்து குடிகொண்டன. இதயம் இடித்து முழங்கியது. கண்கள் நீரைச் சொரிந்தன.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கால்போன போக்கில் சென்றுகொண்டிருந்தான்.

"சமூகமாம்! சமுதாயமாம்...! தனிமனிதன் வாழ வழியில்லை. சமூகம் என்று ஒன்று ஏழைகளை வாழவிடவில்லை. நீதிக்குப் புறம்பான சமூக அமைப்பு இருந்தால், சமூக அமைப்பை உடைத்தெறிய மாட்டாமல், 'சமூக அமைப்பு அப்படி' என்று மட்டும் குறைகூறிக்கொண்டு அந்த உளுத்துப்போன சமூக அமைப்புக்குள்ளேயே கட்டுண்டு கிடந்து புரட்சிபற்றிப் பேசும் புரட்டுக்காரர்கள் மலிந்துவிட்ட சமுதாயத்தில் நானும் ஒரு அங்கமா?..."

அவனது இதயத்தின் கேள்விகள் பலமாக ஒலிக்கத் தொடங்கின.

தெருவோரத்தில் சைக்கிள் ஒன்றில் சீள்க்கை ஒலியில் பாடலிசைத்து மகிழ்ந்து செல்லும் சிறுவன் ஒருவனின் சைக்கிள் மணி ஓசையால் சிந்தனை குழம்பினான் வரதன். "நானும் சிறுவனாகவே இருந்திருந்தால்... வீண் சிந்தனை..." என்று எண்ணி நடையைத் தொடர்ந்தான்.

வானத்துக் கருமையினைக் கானகத்துக் கனுப்பிவிடச் சந்திரன் தன் கரங்களை ஏவிவிட்டு வெளிக்கிளம்பிக் கொண்டிருந்தான். சந்திரனின் குளிர் முகத்தையே கண்வெட்டாமல் பிரமை பிடித்தவன் போல் பார்த்துக் கொண்டிருந்த வரதனின் நடை தளர்ந்தது. சிலையெனச் சமைந்து போய் செவ்வானத்தை நோக்கினான். சந்திரனின் அருகில் தோன்றிய நட்சத்திரம் அவனுக்கு வீட்டு ஞாபகத்தை மீண்டும் கொணர்ந்தது.

"அக்காவும் இப்படித்தான். எத்தனை அழகோடு, பொலிவோடு, பூரிப்போடு, வாழ்ந்தவள். அவளது முகத்தின் அழகுக்கு இந்தச் சந்திரன் எங்கே ஈடு கொடுக்கப் போகிறான் என்று நான் அன்று எண்ணியிருந்தேன். ஆனால் இன்று...... பாவம் அக்கா! துன்ப இருள்மூடி சோகமயமாகி விட்டாள்..."

''மாமா பெரிய பணக்காரன். அந்தப் பணமெல்லாம், அப்பாவின் சொத்து. தாயார் சாக அப்பா தன் தங்கையை மாமாவுக்கு மணம் முடித்து வைத்து இந்தப் போலிச் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்துடன் வாழ வைத்தவர். சாதாரணகிளார்க்காக இருந்த மாமாவுக்கு, அப்பா முப்பதாயிரம் சீதனமும், வீடுவளவும் கொடுத்துத் தன் தங்கையைத் திருமணம் செய்து வைத்தவர். மாமிக்கு வயது ஏறிக் கொண்டே போகுதே என்று கவலைப்பட்டு தனது சொத்துக்களை யெல்லாம் மாமாவின் சுகபோகத்துக்கு பலியாக்கியவர்.''

''இன்று மாமா என்ன சொல்கிறார் தெரியுமா? தனது க. பொ. த. சாதாரண தரம்படித்து விட்டு ஓவசியர் வேலை பார்க்கும் மகனுக்கு பீ. ஏ. படித்துப் பட்டம் பெற்ற எனது அக்காவையும் இருபத்திஐயாயிரம் காசும், வீடு வளவும் தரட்டாம்.''

''நல்ல வேளை அப்பா இந்தச் சீர்கேடுகளை யெல்லாம் காணுமல் செத்துப் போனார்....''

அவனது மனம் மீண்டும் மீண்டும் இவைகளை எண்ணிக் குமுறிக்கொண்டது.

* * *

அப்பொழுது அவனுக்குப் பதினாறு வயதிருக்கும். அவனது தமக்கை விமலாவுக்கு பல்கலைக் கழக அனுமதி கிடைத்திருந்தது. தோட்டத்தினை நம்பி குடும்பம் நடத்திக் கொண்டிருந்தார் தர்மலிங்கம், மூத்தவள் பல்கலைக் கழகம் செல்வதில் அவருக்கும் சந்தோஷந்தான். ஆனால் செலவு...?

விமலாவின் விருப்பத்தை நிராகரிக்கவும் முடியவில்லை. ஆரம்பத்தில் வீட்டு நிலைமைகளைச் சொல்லிப் பார்த்தார். விமலாவோ எப்படியும் தன்னைப் படிக்க வைக்குமாறு கதறிக் கொண்டிருந்தாள். அந்த நேரத்தில்...

''அப்பா! அக்காவைப் படிக்க வைப்பம். என்ன செலவானாலும் பறவாயில்லை. என்ர உயிரைக் கொடுத்து உழைச்சு அக்காவைப் படிக்க வைப்பன்'' என்று வைராக்கியம் கூறியபோது தர்மலிங்கம் பூரித்துப் போனார். ''எல்லாம் விதிப்படி தான் நடக்கும்'' என்று கூறி அவனைப் பேராதனை வளாகத்துக்கு அனுப்பி வைத்தார்.

மூன்று பெண் குழந்தைகளுக்கும் ஒரு ஆண் குழந்தைக்கும் சேர்த்து அவர் ஒருவராக உழைத்து உழைத்து உருக்குலைந்து அவர் பட்டபாடு இந்தச் சமூகம் அறியாவிட்டாலும் அவரது தோட்டத்து மண் அறியும். ஏற்றம் இறைத்த மாடுகள் அறியும். அவர் எத்தனை தடவைகள் கிணற்றடியில் மயங்கிச் சாயந்தார் என்பதை கிணற்றடியில் குத்தி இறுக்கியிருந்த கதியால் அறியும்.

விமலாவின் இரண்டாம் வருடப் படிப்புத் தொடங்கியபோது தான் தர்மலிங்கத்தாருக்கு ஒரு யோகமடித்தது. கஸ்டங்கள் துன்பங்களிலிருந்து விடுதலை கிடைத்தது. வரதன் க. பொ. த. உயர்தரம் படித்துக் கொண்டிருந்தவன் வீட்டு ராச்சியத்தின் இளவரசனாயிருந்தவன் அரசனானான்.

'விமலாவின் படிப்புக்கு செலவு செய்ய முடியாத கஸ்டத்தால் அவளது படிப்பை தாயார் நிறுத்த முயன்ற போதெல்லாம் 'தன்னால் முடியும்' என்று கூறி அவளைப் படிக்க வைத்துக் கொண்டிருந்தான் வரதன்.''

''நீ சின்னப் பொடியன் தானே. நீ உழைச்சு என்னண்டு இந்தக் குடும்பத்தைக் காப்பாற்றப் போறாய். அதிலையும் இவள் விமலா படிக்கிற செலவு கொடுக்க உன்னால் முடியுமோ? பேசாமல் அவளை மறிச்சுப்போட்டு, ஏதோ வீட்டுப்பாட்டைப் பார்'' என்று அறிவுரை கூறியவர்களில் அவனது மதிப்புமிக்க மாமனாரும் ஒருவர்.

தனது பிள்ளைகளுக்குக் கிடைக்காத சந்தர்ப்பம் விமலாவுக்குக் கிடைத்துவிட்டதே என்ற பொறாமையில் புழுங்கி அவர் பொரிந்து தள்ளிய வார்த்தைகள்தான் அவை என்று அப்போது அவனுக்குத் தெரியாது.

விமலாவுக்குத் தெரியாமலே தனது படிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டுத் தோட்ட வேலையிலேயே அவன் மூழ்கிவிட்டான். இரண்டு தங்கைகள் பாடசாலைக்குப் போகும் செலவு விமலாவின் படிப்புச் செலவு. அத்தோடு குடும்பச்செலவு.

தகப்பன் சிந்திய வியர்வைத் துளிகள் அவனுக்கு உழைப்பின் உறுதிலய விளக்கிக்கூறின. கிணற்றடியில் குத்தி இறுக்கியிருந்த கதியால் அவனுக்கு, சமுதாயப் போர்க்களத்தில் தகப்பன் புகுந்து வீசிய போர் வாளாகக் காட்சி தந்தது.

ஒருநாள் காலை ஆறு மணியிருக்கும் தோட்டத்திற்குத் தேனீர் கொண்டுவந்த வரதன் அந்தக் கதியாலில் கையை இறுகப்பிடித்தபடி தகப்பன் விழுந்து கிடந்த காட்சியைக் கண்டு அலறித் துடித்து...

காவியம் முடிந்து விட்டது. பாலைவரை ஓடிய கதிரவனின் கைத் தடியை வாங்கி சந்திரன் அஞ்சலோட்டத்தின் மிகுதியைத் தொடர்ந்தான்,

பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தபோது விமலாவுக்கு ஒரு குறையும் தெரியவில்லை. மூன்று வேளை உணவு, ஆனால் படிப்பு முடிந்து வந்ததும் வீட்டாரின் இருவேளை உணவுக்குப் பணிந்து போகவேண்டியதாயிற்று.

பல்கலைக் கழகத்தில் நன்றாகப் படித்து அங்கேயே அவள் வேலையிலமர்ந்திருந்திருந்தால் அவனது துயர் குறைந்திருக்கும். வியர்வை நீங்கியிருக்கும். ஆனால் பல்கலைக்கழகத்தில் வேலை பார்ப்பதற்குப் படிப்பு மட்டும் தகுதியல்ல. அதற்கு வேறு பல தகுதிகளும் இருக்கவேண்டுமென்பதை அவன் எப்படி அறிவான்?

பட்டதாரிகள் வெளியேறியவுடனேயே அவர்களுக்கு வேலை வழங்கக்கூடிய வகையில் அரசாட்சி இருந்தாலாவது அவனது கவலை குறைந்திருக்கும். ஆனால்...

இரு தங்கைகள் பருவமெய்தித் திருமணத்துக்காகக் காத்திருக்கும்போது மூத்தவள் வழிவிட்டாலதானே. அவள்... தனது படிப்புக்கு ஏற்ற மாப்பிள்ளை வேண்டுமாம். அவளது படிப்புக்கேற்ற மாப்பிள்ளை கேட்கும் சீதனத் தொகைக்கு அவனெங்கே போவான்?

இப்போது அவனுக்குத் தனது தகப்பனும், மாமனும் கூறியவை காதில் ஒலித்தன. அவளைப் பல்கலைக்கழகப் படிப்புப் படிக்க வைத்ததுதான் குற்றம். ஏழைப் பெண்கள் படிக்கக்கூடாதா? உயர்படிப்புப் படிக்கவே கூடாது. இது அவனது முடிவு. படிப்பை ஒரு சீதனமாகக் கருதாமல் படிப்புக்கூட, சீதனமும் கூட வாங்கும் ஆண்கள் இருக்கும்வரை ஏழைப் பெண்கள் உயர் கல்வி கற்கக்கூடாதுதான்.

பட்டதாரிப் பெண்ணுக்குக் கொட்டிக் கொடுக்கக்கூடிய சீதனம் வைத்திருக்காத தகப்பன், தனது மகளைப் பல்கலைக்கழகம் அனுப்பக்கூடாதுதான்.

* * *

அவனது சிந்தனைகள் எங்கெங்கோ அலைமோத, அருகே வந்த ஒரு நண்பன் சிந்தனையைக் குழப்பினன்.

''என்ன தனிமையில யோசனை...''

''அக்காவின்ர பிரச்சனைதான்''

''ஏன் என்னவாம்... கலியாணத்துக்கு மாட்டாளாமோ...?''

''தன்ர படிப்புக்கேற்ற மாப்பிள்ளை வேணுமாம், நானெங்க போறது?''

''அப்ப சுந்தரத்தின்ர விசயம்...''

''சுந்தரம் நல்லவன்; எனக்குத் தெரியும். ஆனா அக்காவோ தனக்கு தன்ர தராதரத்திலயெண்டாலும் வேணுமாம். என்ர நிலமைக்குச் சுந்தரம் போதும். அறிவாளி; உழைப்பாளி. வேறென்ன வேணும்''

''சொல்லுறனெண்டு குறை நினைக்காத, சுந்தரம் கொஞ்சம் குறைஞ்ச சாதி... அப்பிடியெண்டு...''

''ராசு! விசர்க்கதை கதைக்காத. உயர்ந்த சாதியில பிறந்தகால நாங்கள் என்ன கோடீஸ்வரரையோ வாழுறம்? எத்தனை நாள் என்ரவீட்டில அடுப்பெரியேல்ல, தெரியுமா உனக்கு? பெரிய சாதிமான்கள்

எல்லாம் எங்களைக் கவனிக்கேல்ல. அப்பா வும் சாக, நான் பட்டபாடு ஆருக்குத் தெரியும். பெரிய சாதிக்காரர் ஒருத்தர் சீதனமில்லாமல் அக்காவைக் கலியாணம் செய்ய முன்வரட்டும். அதுக்கு ஏலாது. பிறகென்ன சாதி...?''

அவனது குரல் ஆவேசமாகத் தொனித்தது.

''நீ அவனை விமலாவுக்கு முடிச்சு வைச்சா உன்னைச் சாதியால கழிச்சு வைச்சுப்போடும் இந்தச் சமூகம்''

''சமூகம்... சமூகம் நீதியற்ற முறையில வகுத்து வைச்ச கட்டுப்பாட்டுக்கு என்ர குடும்பம் பலியாகாது. நான் இந்தப் போலிச் சமூகப் பகட்டை ஏற்றுக்கொள்ள மாட்டன்...'' என்று மிகவும் ஆவேசமாகக் கூறினான். அவனது நிலையைப் புரிந்து கொண்ட ராசு மெல்ல அவ்விடத்தை விட்டகன்றான்.

வரதனின் நெஞ்சம் உணர்ச்சிக் குமுறலால் கொந்தளித்துக் கொண்டிருந்தது. தொடர்ந்து நடந்துகொண்டிருந்தான்.

''வரதண்ணை...! வரதண்ணை! வீட்டில சண்டை நடக்குது. விமலாக்கா உங்களை வரட்டாம்...'' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான். அவனது பக்கத்து வீட்டுச் சிறுவன் கூறிய வார்த்தைகள் அவனது இதயத்தில் முள்ளெனத் தைத்தன.

அவனது உள்ளம் அலைமோதும் துரும்பாக அலைக்கழிக்கப்பட்டது. அவனது எண்ணங்களோடு போட்டி போட்டுக் கொண்டு அந்தப் பையனின் சயிக்கிள்ச் சக்கரங்களும் சுழன்றன.

பிரச்சனைக்கு அவனது மாமனார்தான் காரணம் என்றதும் அவனது கோபம் எல்லையை மீறியது. ''வசதி படைத்தவர்கள்; எங்களால் வாழ்ந்தவர்கள்; எங்களை வாழ விடாது தடுப்பதா?'' என்று அவனது இதயம் குமுறியது. வீட்டு வாசலில் வந்து நின்றான் வரதன். ஆனால் அப்போது பிரச்சனை ஓய்ந்திருந்தது.

''அம்மா...அம்மா...'' என்றபடி வீட்டினுள் ஓடினான் வரதன்.

''உன்ர மாமாதான்ரா, தங்கச்சியை சுந்தரத்துக்கு முடிச்சு வைச்சா கொலை செய்வாராம். நாங்கள் தங்கட மானத்தை விக்கிறதுக்குத்தான் இப்பிடிச் செய்யிறமாம்''

வரதனின் கோபம் கொழுந்து விட்டு எரிந்தது.

''வசதி படைத்த போலி வேடதாரிகளின் கௌரவத்துக்காக வாழ வழியற்ற ஏழைகள் வாழ்விழந்து போவதா? கொலை செய்ய அவரால்தான் முடியுமா?'' என்றபடி சயிக்கிளில் ஏறினான் வரதன். சயிக்கிள் முகப்பில் அவனது கைகளுக்குள் இருந்த நீட்டுக் கம்பி இரத்த தாகத்தால் ஏங்கிக் கொண்டிருந்தது.

சயிக்கிளின் வேகத்தைத் தடுத்தது விமலாவின் குரல்.

''எங்க போறாய்...தம்பி...?''

''போகவேண்டிய இடத்துக்கு...''

''என்னத்துக்கு...?''

''செய்யவேண்டிய காரியத்தைச் செய்யிறதுக்குத்தான். ஆம்பிளை இல்லாத நேரமாப் பார்த்து வீடு வரைக்கும் வந்து சண்டித்தனம் காட்டினாங்களே. அவங்கட வீட்டதான்''

''டேய், நீ போகவேண்டிய இடம் அங்க இல்ல. செய்யவேண்டிய காரியமும் அதில்லை.''

''அக்கா நீ என்ன சொல்லுறாய்?''

''நான் இந்தக் கலியாணத்துக்குச் சம்மதிக்கிறன். நீ சுந்தரம் வீட்ட போய் ஒழுங்கு செய்துபோட்டு வா...''

வரதனுக்கு ஒரே புதிராக இருந்தது. இவ்வளவு நாளும் மறுத்து வந்த விமலா மாறிவிட்டாளா? எமது குடும்ப நிலையை உணர்ந்து திருந்திவிட்டாளா...?

''தம்பி, எனக்கு என்ர படிப்புக்கேற்ற மாப்பிளை வேண்டாம். என்னை வாழ வைக்கிறதுக்குத்தான் மாப்பிளை வேணும்.''

அவளது வார்த்தைகள், அவனுள்ளே எழுந்த ஆவேசக் கோபத் தீக்கு நீரை வார்த்தன.

அவனது சயிக்கிள் திசை திரும்பியது. அவளது திருமண ஒழுங்குகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

விமலாவின் முகம் பல்கலைக்கழகத்துக்குச் செல்லும்போது இருந்ததுபோல் பிரகாசமாய் இருந்தது. அவளது படிப்பு அவளுக்கு அப்போதுதான் அறிவு கொடுத்திருக்கிறது என்பதை அவளது முகத்திலே தவழ்ந்த சந்தோஷம் காட்டியது.

அவளது முகமதியை மூடியிருந்த மேகம் விலகிவிட்டிருந்ததால் அவள் பூரண சந்திரனுனுள். அவளருகே இப்போதும் ஒரு நட்சத்திரம் காவலாய் இருந்தது. அவள் வாழ்வதைக் கண்டு களிக்க ஆவலாய் இருந்தது.

# சூடு கண்ட பூனை

தேர்தல் காலத்தில் ஒருமுறை பொத்துவிலிற்குச் சென்றிருந்தேன். அரசியலில் மிகவும் ஈடுபாடுடைய எனது நண்பன் ஒருவனை அணுகி ''நீ ஆருக்கு...'' என்று இழுத்தேன். ''கனகருக்கு ' என்முன். அவன் பேச்சிலே பெருமிதம் தொனித்தது. ''ஏன்?'' என்று கேட்டுவைத்தேன். பிறகுதான் ஏன் அப்படிக் கேட்டேன் என்முயிற்று. ஏனெனில் சிங்கள ஆட்சியின் கொடுமைகளையும், தனித் தமிழ் ஈழத்தின் அவசியத்தையும் பற்றிப் பல புளித்த கதைகள் பேசி எனது பல மணி நேரத்தை வீணுக்கிவிட்டான். அசல் கூட்டணியின் வார்ப்பு.

அண்மையில் பொத்துவிலிற்குச் செல்லும் ஒரு சந்தர்ப்பம் கிட்டியது. அப்போது அந் நண்பன் பச்சைத் தோரணங்கள் கட்டுவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான். அவனை அணுகி ''என்ன விஷேசம்?'' என்றேன். ''கனகரெட்ணம் மாவட்ட மந்திரியான பிறகு இண்டைக்குத்தான் நம்மட ஊர்ப்பக்கம் வாருர்'' என்முன். பல கேள்விகள் என்னுள் எழுந்தன அவனிடம் கேட்கவேண்டும்போல். ஆனுலும் பேசாமல் சென்றுவிட்டேன். முன்பொருமுறை அவனுடன் மணிக்கணக்கில் காலத்தை வீணுக்கியது நினைவுக்கு வந்தது.

சூடு கண்ட பூனைதானே.

* * *

''நாமிருக்கும் நாடு நமதென்ப தறிந்தோம் — இது
நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம் — இந்தப்
பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம்...........''

— பாரதி

* * *

காவலிருக்கும் இடத்தில் அசிரத்தை இருப்பது இயல்பு.

# எங்களது காலம்

நாளை யிந்தச் சாலை
மருங்கெல்லாம் செந்தளிரும்
பூவும் பொலியு மொரு
புதுவாழ்வு நிச்சயமாம்
ஆதலினால் இன்று
இலையுதிர் காலத்து ஏக்கத்தில்
வாடும் மரங்களுக்கு
நம்பிக்கை தரும் கீதம்
வசந்தக் குயில்களே
வாய் திறந்து பாடுங்கள்.
தென்றலே வா,
திகைப்பில் விறைத்திருக்கும்
சிறுகிளையை உசுப்பிவிடு.
விரக்திக்கு இந்த
மேதினியில் இடமில்லை.
இவ்விடத்தில்
காலாற நடக்கின்ற காதலரே
மெதுவாக மெதுவாக
இன்னும் மெதுவாகப் பாதம் பதியுங்கள்.
காக்கி இன வெறியர்
காடைத்தனப் புயலில்
மானிடத்தின் எழுச்சி
மரமுதிர்ந்த இள மலர்கள்
மூடும் சருகுகளின்
சமாதிக்குள் துயில்கின்றார்
இலையுதிர் காலத்து
ஏக்கமெல்லாம் எத்தனை நாள்
நாளை வசந்தத்தை
யாரோ தடுக்கவல்லார் ...?

— வ. ஐ. ச. ஜெயபாலன்
3ம் வருடம்
மனிதப் பண்பியல்.

# துஞ்சுதற் கஞ்ச மாட்டோம்...

— தி. சூரியகுமார் —
விஞ்ஞானபீடம், இரண்டாம் வருடம்.

1 மங்களத் தமிழ் என்றும்
எங்களின் தாயே கொடுஞ்
செங்கள மாடிடினும்
சிங்களம் கொள்ள மாட்டோம்.

2. அன்று முதல் நாமிங் குழைக்க
இன்று வந்தொடுக்குகிறான் எமையிந்த
நன்றி கெட்டான் சாதியினும்
தோன்று தம்மா மேலென்று நாய்கள்.

3. தன்னிக ரில்லாத் தாயை
என்னின மிழக்க வரினும்
அந்நிய னரசின் கீழே
சென்னியைப் புதைத்து வாழோம்.

4. இருந்த விடம் தெரியாமலுடல்
பருந் துக்கே விருந்தானாலும் நம்
அருந் தமிழ் மொழியைக் காக்க
மருந்தாக ஈவோமுயிர்.

5. மஞ்சத்தில் கொஞ்சும் போதும்
வஞ்சமர் முரசார்ப்பின்
வஞ்சியைப் பிரிந்தே வருவோம்
துஞ்சுதற் கஞ்ச மாட்டோம்.

---

# மாதுளம் பழம்

''மாது உளம் பழம்'' என்பது இந்தப் பழத்துக்குப் பெயர். அதாவது பெண்களின் உள்ளத்தைப் போன்ற தன்மையுடைய பழமாம் இது. எண்ணற்ற இரகசியங்களை இதயத்துள் போட்டு அடைத்து வைத்துக் கொண்டு ஏதொன்றும் தெரியாததுபோல் வெளிக்குத் தோற்றமளிப்பது பெண் தன்மை. இப்படித்தான் இந்த மாதுளம் பழமும்கூட. வைர மணிகள் போன்ற நறுஞ்சுவைச் சுளைகளை வரிசையாக அடுக்கி மறைத்துக்கொண்டு வெளித் தோற்றத்துக்கு மிகச் சாதாரணமாகக் காட்சி தருகிறது. இதனால் தான் இப் பழத்துக்கு 'மாதுளம்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள் நம் ஆதிகாலத் தமிழர்கள்.

— ஜெகசிற்பியன்

அன்பளிப்பு

# கல்கிசன்ஸ்

147, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

# கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையின் கவிதைகள் பற்றிய கண்ணோட்டம்.

— சி. சுமத்திரி —
இறுதி வருடம், மனிதப் பண்பியல்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கம்பனைப் போல், வள்ளுவனைப்போல், இளங்கோவைப் போல் தமிழை வளர்த்து வளம் பெருக்கி வந்துள்ள அறிஞர் பரம்பரையிலே தலைசிறந்தவராகக் கொள்ளத்தக்கவர். கவிதைத் துறையில் ஒரு சிலையாகத் திகழும் இவரது, கவிதைகள் அனைத்தும் எளிமையாகவும், இனிமையாகவும் இருப்பதுடன் சகலரும் படித்து அனுபவிக்கக்கூடிய மொழி நடையிலும், ஓசையமைப்பிலும் சிறப்புற்றுத் திகழ்வதைக் கொண்டு அவரது கவிதை வளத்தினை நாம் மதிப்பிட முடியும். கவிமணியின் கவிதைகள் யாவும் குழந்தைச் செல்வம், மலரும் மாலையும், ஆசிய ஜோதி, உமர்கயாம் பாடல்கள், மருமக்கள் வழி மாண்மியம், தேவியின் கீர்த்தனங்கள் என்ற பெயர்களில் நூலுருவாக வெளிவந்துள்ளன.

தேசிக விநாயகம் பிள்ளையின் கவிநயத்தை நோக்குவதாயின் அவர் கவிதை பற்றிக் கொண்டுள்ள கருத்தினை முதலில் அறியவேண்டும். 'சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி' என்று கம்பர் கவிதையை மதியோடு ஒப்பிட்டுப் பாடுகிறார். மேல்நாட்டுத் திறனாய்வாளர்கள் கவிதையின் அமைப்பு, பயன் குறித்துச் சில விளக்கங்கள் தந்துள்ளார்கள். கார்லைல் என்பவர் 'இசைவடிவான எண்ணமே கவிதை' என்றும், ஷெல்லி 'கற்பனையின் வெளிப்பாடே கவிதை' என்றும், மத்யூ ஆர்னல்டு 'வாழ்க்கையின் திருப்தியே கவிதை என்றும் கூறுகிறார்கள். இவர்கள் எல்லோரி லும் பார்க்கக் கவிமணி கவிதை பற்றிக் கொண்டுள்ள கருத்து. வேறுபட்டதாகக் காணப்படுகிறது. இவர் கவிதையின் சிறப்பினைப் பாடும்போது.

> ''தேனும் தினையும் பாலில் உண்ணலாமடா—மிகத்
> தித்திக்கும் முக்கனியும் உண்ணலாமடா
> கானக் குயிலிசையும் கேட்கலாமடா—ஊடே
> கரிவண்டு பாடுவதும் கேட்கலாமடா''

> ''உள்ளத் துள்ளது கவிதை—இன்ப
> உருவெடுப்பது கவிதை''

என்றும் கூறுகிறார். இந்த இரண்டு கவிதைகளையும் நோக்கும்போது இவர் இன்பத்தையே கவிதைக்குரிய முக்கிய பொருளாகக் கொண்டார் எனக் கூறக்கூடியதாகவுள்ளது. கவிதை பற்றிக் கூறிய இவரது கருத்து, எந்தளவுக்கு இவரது கவிதைகளில் செறிந்துள்ளது என்பதனை ஆராய்தல் வேண்டும்.

கவிமணியின் கவிதைகள் மனிதாபிமானம், குழந்தை உணர்வு, சீர்திருத்தம், இயற்கை இன்பம், தத்துவம், தேசியப் பற்று, தமிழ்ப்பற்று என்பவை அடங்கியதாகவே காணப்படுகின்றன. மொத்தத்தில் உலகிலே எதையாவது அவர் கவிதைக்குரிய பொருளாக எடுக்காமல் விட்டதில்லை என்றே கூறலாம். இவர் எழுதிய பாடல்கள் யாவும் பாலர் முதல் விருத்தர் வரை படித்து இன்புறக்கூடியதாக அமைந்துள்ளமையால் கவிதைத் துறையில் புகழ்பெற்றுத் திகழ்கிறார்.

தேசிகவிநாயகம் பிள்ளையின் பாடல்களிலே மனிதப்பண்பு (Humanism) பேணும் தன்மை பலவிடங்களிலே காணப்படுகிறது. அன்பு, கருணை, மனிதாபிமானம் என்பவற்றை உள்ளடக்கியதாக இவரது தனிப்பாடல்கள் யாவும் விளங்குகின்ற போதிலும் 'வையமும் வாழ்வும் என்ற பகுதியிலுள்ள பாடல்களிலே இந்தப் பண்பினை மகுதியாகக் காண முடிகிறது.

> ''சாதி சாதி என்று நிதம்
> சண்டை போட்டு மண்டைகளை
> மோதி மோதி உடைப்ப தொரு
> மூடச் செய லென் றுணரீரோ?''

என்ற பாடலில் சாதிச் சண்டையின்றி எல்லோரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று மனிதாயப் பண்போடு கூறுகிறார்.

> ''புத்தர் பிரானது சரித்திரப் பகுதிகளிற் சிலவற்றை அதியற்புதமான தமிழிற் பாடியுள்ளார். இப்பகுதிகளை நாம் படித்து நோக்கினால் கவிமணி எவ்வளவு ஆழமாக இச்சரிதத்தில் ஈடுபட்டார் என்பது தெரியும்''

என்று எஸ். வையாபுரிப்பிள்ளை கூறுகிறார். உண்மையில் ஆங்கிலத்தில் எத்தனையோ சிறந்த நூல்கள் இருக்கவும் 'ஆசியஜோதி' என்னும் நூலை மொழி பெயர்த்தமைக்கும் காரணம் புத்தரது அன்பு, இரக்கம், கருணை ஆகிய கொள்கைகளில் பற்றுள்ளமையினாலேயே. அந்தளவிற்கு மனிதப்பண்பு நிறைந்தவராகக் காணப்பட்டார்.

முதன்முதலாகக் குழந்தைகளுக்கென பாடல்களைப் பாடியவர் அதனை நடைமுறைக்குக் கொண்டு வந்தவர் கவிமணியே ஆவர். இவரைக் குழந்தைப் பாடலின் முன்னோடி என்று குறிப்பிடலாம். மலரும் மாலையும் என்ற நூலிலே ''செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்குரியதாய் என்றும் வாழ்கவே'' என்று சமர்ப்பணமாகக் குறிப்பிட்டுள்ளார். இப்படிக் குறிப்பிட்டிருந்தாலும் முழுப் பாடல்களும் குழந்தைப் பாடலாக இல்லாது மழலைமொழி, கதைப்பாட்டு போன்ற பிரிவுகளே குழந்தைகளுக்கென அமைக்கப்பட்டுள்ளது. குழந்தைகளை அடி, ஐயா, அம்மா என்று அன்போடும், ஆசையோடும் விழித்துப் பாடுகின்ற தன்மையினை இவரிடம் காணலாம். அவர்களுக்கு விளங்கக் கூடிய முறையில் எளிய பதங்களையும், சாதாரண பேச்சு வழக்குச் சொற்களையும் பயன்படுத்துகிறார்.

> ''தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு—அங்கே
> துள்ளித் திரியுது கன்றுக்குட்டி''

என்ற பாடலில் மேயுது, திரியுது என்பன சாதாரண பேச்சு வழக்குச் சொற்களே இவரது பாடல்கள் யாவற்றிலும் இந்த எளிமைப்பண்பினைக் காணமுடிகிறது. பாரதியாருக்குப் பின்வந்த கவிஞர்களிடம் குறிப்பாக கவிமணியிடம் இப்பண்பு கூடுதலாகச் காணப்படுகிறது என்று கூறலாம்.

வள்ளுவர் தொடக்கம் இன்றுள்ள கவிஞர்கள்வரை சமுதாயத்தைச் சீர்திருத்த எண்ணிப் பாடல்கள் பலவற்றைப் பாடியிருக்கிறார்கள். சமூக, பொருளாதாரத் துறையில் வளம் நிறைய வேண்டும் என்று கனவு காண்பது கவிஞர்களின் வழக்கம். ''வாடிய பயிரைக் கண்டபோதெலாம் வாடினேன்'' என்று பாடிய வள்ளலாரைப் போல மற்றவர்களின் துன்பத்தை உணர்வு பூர்வமாக உணர்ந்து பாடுகிறார் கவிமணி.

" கள்ளுடனே ஆடு கோழி
நலந்துண்ணும் காளிதேவி
பள்ளர் எமைக் கண்டவுடன்
பாய்ந்தோடி விடுவாளோ"

என்ற பாடலில் தீண்டாமை ஒழியவேண்டும் என்ற சீர்திருத்தக் கருத்துத் தெளிவாகப் புலனுகின்றது. பெண்களின் உரிமைகள், மதுவிலக்குப் பாடல்கள், தொழிலாளர் முறையீடு என்பன போன்ற பல பாடல்கள் சீர்திருத்த நோக்குடனேயே பாடப்பட்டன. ஆசிய ஜோதியிலுள்ள கருணைக்கடல் என்ற பகுதியில் கவிமணி பலியிடுதலை முற்றிலும் வெறுத்துப் பாடியிருக்கிறுர். இவரது காலத்தில் நாஞ்சில் நாட்டிலே சொத்துக்கள் யாவும் ஒருவனுடைய மகனுக்குச் சேராமல், அவனது மருமக்களுக்குப் போய்ச் சேரும் 'மருமக்கள் வழித் தாயம்' நிலவிவந்தது. இதன் காரணமாகக் குடும்பங்களுக்கிடையே போட்டியும், பூசலும், சண்டையும் சச்சரவுகளும் ஏற்படத் தொடங்கின. இந்த மருமக்கள் வழி உரிமையை நீக்குவதற்காக 'மருமக்கள் வழி மான்மியம்' எனும் நூலை எழுதினுர். இவரது மனதிலே பதிந்திருந்த சமுதாயத்தை மேன்மைப்படுத்த வேண்டும் — திருத்தியமைக்க வேண்டும் - என்ற நல்லெண்ணம் இத்தகைய பாடல்கள் பாடுவதற்குக் காலாயிருந்தது.

இயற்கைக் காட்சிகளைப் பாடுவதில் கவிமணிக்கு நிகராக வேறெருவர் இல்லை என்றே கூறலாம். இயற்கை, கவிஞர்களது கவிதைக்கு வளம் கொடுப்பதொன்ருகும். கம்பன், இளங்கோ, பாரதி, காளிதாசன் போன்ற மாபெரும் கவிஞர்களும், மேலைநாட்டுப் புலவர்களான ஷேக்ஸ்பியர், மில்டன், ஷெல்லி, கீட்ஸ், வேர்ட்ஸ் வொர்த் முதலியோரும் இயற்கையில் திளைத்துத் தமது கவிதைகளை வடித்தார்கள். இவர்களைப் போலவே கவிமணியும் இயற்கையிடத்திலே தான் அனுபவித்ததைத் கற்பனையுடன் கலந்து பாடியிருக்கிறுர்.

" கல்லும் மலையும் குதித்துவந்தேன் — பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரித்த சமவெளி — எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன் "

எனத் தொடங்கும் பாடலில் ஒரு ஆறு எங்கெங்கெல்லாம் இருந்து ஓடிவருவதாகக் கூறி, இறுதியில்

" நில்லும் எனக்கினி நேரமில்லை — இன்னும்
நீண்டவழி போக வேண்டும் அம்மா ! "

என்று முடிப்பதாக அமைந்துள்ளது. ஆறு ஓடிவருவதாகிய இயற்கையான இந்த நிகழ்ச்சியைக் கவிமணி மிக அற்புதமாகக் கவிதையில் வடித்திருக்கிறுர்.

மக்களுக்குத் தத்துவக் கருத்துக்கள் பலவற்றைக் கவிமணி தனது பாடல்கள் மூலம் வெளிக்காட்டுகிறுர். புல் தனது சுயசரிதையைக் கூறுவதாக அமைந்துள்ளது ஒரு பாடல்.

"..................... கிடைத்த நீரை
அருந்திப் பலநாள் அயர்வு நீங்கித்
தெளிந்து நிமிர்ந்தேன். சிறிதென் உடலில்
பச்சையும் பிடித்தது பார்த்தனர் பாவிகள்
தரிக்கிலர் உள்ளம் தளைக்கும் தலையைக்

காலால் மிதித்தனர் கழுத்தை அறுத்தனர்
ஆட்டையும் மாட்டையும் அடித்து மேய்த்தனர்
......................''

எனத் தொடர்ந்து வருகின்ற பாடலிலே புல்லினை அழிக்க மக்கள் எவ்வளவு பாடு பட்டாலும், அது அவ்வளவு கொடுமைகளையும் தாங்கித் திரும்பவும் துளிர்க்கப் பார்க்கிறது. இதேபோலச் சமூகத்தில் இத்தகைய பொறுமையாளர்கள், தமது இன்னல்களை பொருட் படுத்தாது வாழ்க்கை நடாத்துகிறார்கள் என்ற அரிய தத்துவத்தை விளக்குகிறார்.

கவிமணியின் பிற்கால வாழ்வில் தேசியப் பற்று இவர் மனத்தில் இடம் பெற்றது என்றாலும், பாரதியாரைப் போல அதிதீவிரமாகத் தேசப்பாடல்களைப் பாடவில்லை. இந்தியா முழுவதும் பரந்திருந்த தேசியப்பற்று கவிமணியை விட்டு விடவில்லை. கதர் விற்பனை என்ற தலைப்பில் அவர் எழுதிய பாடலில் தேசிய உணர்வும், ஏழைமக்களிடம் கொண்டிருந்த பரிவும் தெளிவாகத் தெரிகின்றன. 'ஊக்கத்துடன் நெற்றியில் வியர்வை விழ நேர்மையாக உழைத்தால் சுதந்திரம் தானாகக் கிடைக்கும்' என்று வலியுறுத்துகிறார்.

''விடுதலை வேட்கை அவரைப் பூரணமாக ஆட்கொள்ள வில்லையெனி னும், முழுக்க முழுக்கத் தேசிய உணர்வு ஓங்கிநிற்கும் கவிதைகளைப் பெருமளவில் அவர் பாடவில்லை எனினும், எழுச்சி ஊட்டும் தேசியப் பாடல்கள் சிலவற்றைப் பாடிய கவிமணியின் தொண்டு சிறப்பானது''

என்று கா. திரவியம் என்பவர் குறிப்பிடுகிறார். கவிமணியின் தேசியப் பாடல்கள் வேகமும், துடிப்புமற்ற காரணத்தினால் சமூகத்தில் பெருமளவு தாக்கத்தினை ஏற்ப டுத்தவில்லை. ஆனால் பாரதியார், வேகமும் ஆவேசமும் கொண்ட பாடல்கள் பல வற்றைப் பாடியபடியால் சமூகத்தில் பெரியதொரு தேசிய வெறி உருவாகியது. பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையின் கூற்று இந்த இடத்தில் கவனிக்கதக்கது.

'' புத்தறிவின் தாக்கத்தாலும், தேசபக்தியாலும் கனிந்தன பாரதியார் பாட்டுக்கள். பழைய யுகத்தைப் போக்கிப் புதுயுகத்தை வரச்செய்யும் இவரது திருமொழிகள். ஆனால் கவிமணியின் வாழ்க்கையோ பாரதி யின் வாழ்க்கைக்கு முற்றிலும் மாறுபட்டது. அவர் சுதேசமன்னர் நாடாகிய திருவிதாங்கூரில் உள்ளவர். இந்தியன் என்ற அளவில் அவருக்குத் தேசபக்தி உண்டே தவிர இப்பக்தி அவர் உள்ளத்தில் கனன்று பொங்கியெழுவதற்கு நியாயமே இல்லை''

இவருடைய பாடல்கள் யாவும் தமிழ்ப் பற்றின் பிரதிபலிப்பாகவே காணப் படுகின்றன, தமிழ் மொழியை வளர்த்த வளம்பெருக்கிய கம்பன், வள்ளுவன், பாரதி, ஔவை, போன்ற புலவர்களைப் புகழ்ந்து பாடியிருக்கிறார், கம்பனை 'நயந் தெரிந்து கதை நடாத்தும் நாடகக் கவிஞன்' என்றும், வள்ளுவனை 'வையம்'புகழ் ஞானி' என்றும், பாரதியைப் 'பாட்டுக் கொரு புலவன்' என்றும், ஔவையை 'நெல் லிக் கனியைத் தின்றுலகில் நீடு வாழும் 'தமிழ்க் கிழவி' என்றும் பாடியிருக்கிறார். சிலப்பதிகாரத்தை 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றும்' கலித்தொகையை 'இன்பக் கற்பனை சேரும் களஞ்சியம்' என்றும், பண்டை இயற்கை வளங்கள் நிறைந்தது பத்துப்பாட்டு என்றும், பண்டைய இலக்கியங்களைப் பாராட்டுகிறார். இப்படிப் பாடுதற்கு மூலகாரணமாய் அமைந்தது அவரது தமிழ்ப்பற்றே ஆகும். மருமக்கள் வழி மான்மியத்தில் பின்வருமாறு பாடுகிறார்.

"அப்பன் மரணம் அடையும் காலம்
எமவே தனைகள் இல்லா தாக்கவும்
சிந்தை சிவனடி சேரச் செய்யவும்
செந்தமிழ் மறையாம் திருவா சகத்தைப்
பக்கமிருந்து படிக்க அறியா
மக்கள் படிப்பை வையம் மதிக்குமோ?"

மலையாள ஆதிக்கம் பெருகிய நாஞ்சில் நாட்டில் மக்கள் இறக்கும் போது திருவாசகம் படிக்கக் கூட வழியில்லாமற் போயிற்று. ஆண்மை மிக்கவர் இல்லாததினுலேயே தமிழ் மொழிக்கு இந்த இழி நிலை ஏற்பட்டது என்று பாடுகிறார்.

மொத்தத்தில் இவருடைய கவிதைகளை மூன்று பெரும் பிரிவுகளாய் பிரிக்கலாம். அவையாவன தன்னுணர்ச்சிப் பாடல்கள், (lyric Poetry) மொழிபெயர்ப்புப் பாடல்கள், இசைப் பாடல்கள் என்பனவாகும்.

கவிமணியின் தன்னுணர்ச்சிப் பாடல்கள் சொந்த அனுபவத்தை உரைப்பதில் அவருக்குள்ள திறமையைப் புலப்படுத்துகின்றன. அவை கவிஞனுடைய ஆழ்ந்த அடிமன உணர்ச்சிகளை வெளிக் கொணரும் பான்மையில் அமையப் பெற்றுள்ளன. புகழ் வாய்ந்த ஆங்கிலக் கவிஞரான வேர்ட்ஸ் வொர்த் "அழுத்தமான உணர்ச்சிகளின் செம்மையான ஒட்டமே கவிதை" என்கிறார் கவிமணியின் கவிதைகளில் அழுத்தமான உணர்ச்சிகள் அணைகடந்து பாய்ந்துவருவதனைக் காணலாம்.

"மோட்டார் வண்டி வந்தும் மோட்டமில்லை—நாங்கள்
முன்செய்த தீவினைச் சென் செய்குவோம்;
ஏட்டிலெழுத அடங்கிடுமோ —கஷ்டம்
யாரிடம் சொல்லியழுதிடுவோம்"

குதிரைகள் புலம்பலாக வருகின்ற இந்தப் பாடலில் குதிரைகளின் கஷ்டத்தினையும், துன்பத்தினையும் தாமே அனுபவித்தவர் போல உள்ளுணர்ந்து பாடுகின்ற அவரது கவித்திறன் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

தமிழோடிசை பாட மறந்தறியாத தேசிக விநாயகம் பிள்ளை தனது கவிதைகள் பலவற்றையும் இசையுடன் பாடக்கூடிய வகையில் இயற்றியுள்ளார். உணர்ச்சி கற்பனை இவற்றுடன் இசை சேரும் போது கிடைக்கும் கவிதை மிகச் சிறந்ததாக எல்லோராலும் சுவைக்கக் கூடியதாக அமைகிறது. பொதுவாக எல்லாப் பாடல்களுமே தாள லயம் பிசகாமல் சந்தத்துடன் பாடக்கூடியதாக அமைந்துள்ளமை அவருடைய கவித்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன.

இசைத் தமிழுக்கென இவரால் எழுதப்பட்ட பல கீர்த்தனைகள் தேவியின் கீர்த்தனைகள் என்ற தொகுப்பிலே அடங்கியுள்ளன, பழந்தமிழ் நூல்களிலே பண்ணும், இசையும் காணப்பட்டதே ஒழிய கீர்த்தனை முறை காணப்படவில்லை. ஆனுல் இவர் பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற பிரிவுடன் கீர்த்தனைகளை அமைத்துள்ளார். இவருடைய கீர்த்தனைகள் கணபதி, திருமால், கலைமகள், முதலிய தெய்வ வழிபாட்டுப் பாடங்களாகவும் சாந்தியடிகள், அண்ணாமலைச் செட்டியார் முதலியோரைப் பற்றியவையாகவும். கல்விச்சாலை, சுதந்திரக்கொடி முதலியவற்றைக் குறிப்பனவாகவும் உள்ளன. இயற்றமிழில் மட்டுமன்றி இசைத்தமிழிலும் வல்லுனர் என்பதை இவரது கீர்த்தனைகள் பறைசாற்றுகின்றன.

கவிமணியின் படைப்புகளில் குறிப்பிடத் தக்க இடத்தை வகிப்பது அவரது மொழிபெயர்ப்புப் பாடல்களே ஆகும். எட்வின் ஆர்னல்ட் என்பவரால் எழுதப்பட்ட

'Light of Asia' என்ற நூலின் தழுவலாக ஆசியஜோதி என்ற பாடல் தொகுதி அமைந்துள்ளது. உமர்கயாம் பாரசீக பாஷையில் பாடிவைத்த 'ருபையத்' (Rubaiyat) என்ற தத்துவப் பாடல்களை ஆங்கிலக் கவிஞராகிய பிட்ஜெரால்டு (Fitzgerald) மொழிபெயர்த்தார். இந்த ஆங்கில மொழிபெயர்ப்பைத் தழுவி கவிமணி தமிழில் உமர்கயாம் பாடல்கள் என்பதை எழுதினார். அத்துடன் குட்றிச் மக்டோனல்ட், எமர்சன் முதலிய ஆங்கிலக் கவிஞர்களது சில தனிப்பாடல்களையும், சில வங்காளிப் பாடல்களையும் இவர் மொழிபெயர்த்திருக்கிறார்.

''பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்''

என்ற பாரதியாரது பரந்த எண்ணத்தினை நிறைவேற்றியவராகக் கவிமணி விளங்குகிறார்.

> ''இவருடைய சொந்தக் கவிதைகளை விட, இவர் பிற மொழியிலிருந்து தமிழிற் பெயர்த்து அளித்துள்ள கவிதைகள் மிகுதியான சுவையும், மயக்க வைக்கும் அழகும் கொண்டவையாகத் திகழ்கின்றன''

என்று பேராசிரியர், ரா. சீனிவாசன் குறிப்பிட்டிருக்கிறார். உமர்கயாம் பாடலில் வருகின்ற ''வெய்யிற் கேற்ற நிழலுண்டு......'' என்று தொடரும் பாடலில், இடையே 'கையிற் கம்பன் கவியுண்டு' என்று பாடுகிறார். உமர்கயாம் இப்படிப் பாடினாரோ தெரியாது. இந்நூல் பிறமொழித் தழுவலாக இருந்தாலும் தமிழ் மரபுக்குச் சொந்தமாகவே கவிதைகளைப் படைத்துள்ளார்.

பொதுவாக இவருடைய கவிதைகளை நோக்கும்போது இவர் கவிதை பற்றிக் கூறிய கருத்திலிருந்து விடுபட்டுச் சென்றுள்ளமையைக் காணமுடிகிறது. ''இன்ப உருவெடுப்பது கவிதை'' என்று கூறிய இவர், வாழ்க்கையில் ஏற்பட்ட கஷ்டங்களினையும், துன்பங்களினாலும் கவிதைக்குப் பல்வேறு விஷயங்களைப் பொருளாகக் கொண்டார். இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள் அனைவரும் இந்தப் பாதிப்புக்குட்பட்டிருந்தார்கள்.

அமெரிக்கத் திறனாய்வாளர் ஒருவர் ''நாட்டு இன, மொழி வேறுபாடுகளுக்கு வித்தூன்றாத கவிதைகளைப் படைப்பவனே சிறந்த கவிஞன்'' என்று கூறுகிறார். இந்த மேற்கோள் கவிமணிக்குப் பொருந்துவதாகவே உள்ளது. ஆசியஜோதி, புத்தரது வாழ்க்கை வரலாறு பற்றிய நூல். உமர்கயாம் பாடல்கள் பாரசீக நாட்டைச் சேர்ந்தது. இந்த வகையில் இன, மொழி வேறுபாடின்றிக் கவிதைகளைப் பாடியிருக்கின்றமையைக் கவனிக்கும்போது இவரை ஒரு 'தேசிய ஒருமைப்பாட்டுக் கவி' என்று குறிப்பிடலாம் போலத் தோன்றுகிறது.

இவ்வாறாகத் தமிழ்க் கவிதை மரபு என்ற பழைய கொடியில் மலர்ந்து புதிய மணம் வீசிய கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, காலத்தின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு தன்னை வளர்த்துக்கொண்டு, தன் கவிதைகளையும் வளர்த்துவிட்டதனால்தான் அவரது கவிதைகள் இன்றும் புகழ்பூத்து விளங்குகின்றன.

> ''ஆராய்ச்சித் தராசில் தே. வி. அவர்களின் கவிதையுள்ளத்தை வேறு யாராலும் மிஞ்சமுடியாது''

என்ற வி. ஆர். எம். செட்டியார் என்பவரது கருத்தைக்கொண்டு பார்க்கும்போது கவிமணியின் கவிதையுள்ளம் எவ்வளவு ஆழமானது-பரந்தது-என்றமுடிவுக்கு வரக் கூடியதாகவுள்ளது.

★ ★ ★

# வேண்டுகோள்

— ராஜா —

என்னுள் உருவாகி
என்னையே பழிவாங்கும்
என்னினிய காதல்
இன்ப உணர்வுகளே !
உங்களுக்கு நான் விடும்
ஒரு உருக்கமான வேண்டுகோள்.

உறவுப் பூக்களை ஒருநாள்
உதிர்த்துச் சொரியப் போகும்
காதல் விருட்சத்தின்
கன்னி விதைகளே...!!
நீங்கள்
தங்கி நிழல் காண
இருண்ட என் இதயந்தான்
இடமாகப் பட்டதா...??
பரவாயில்லை
நீங்கள்
உதிர்த்த விதைகள்
உலர்ந்து போகு முன்
ஓடுங்கள் விரைந்து
ஒரு தூதுவனாய் அவளிடம்.

ஒருமுறை
என்றோ எப்போ நீங்கள்
என்னிடம் குடிபுகுந்து
கனத்துக் கிடந்த என்னிதயக்
கட்டாந் தரையிலே
விதைத்த விதைகளை - நான்
வேண்டாம் என்றதற்கா...??
இன்றிந்த
விடிவற்ற தண்டனைகள்
இன்றோ என்னிதயம்
பதமாகி விட்டது.

நீங்கள்
தெளித்த விதைக ளெல்லாம்
செழித்து வளர்கின்றது.
எனவே
விரையுங்கள் அவளிடத்தில் - ஒரு
விதி யென்ற தூதுவனாய்

நான்
மறுக்கவில்லை
தூசி படிந்து கிடந்த
என்னிதய வீணையிலே
மோகனராகம் மீட்டத்தான் - நீங்கள்
முற்றுகையிட்டுள்ளீர்கள்
ஆனால்
உங்கள் முற்றுகையின் நோக்கம்
முழுமை பெற வேண்டாமா...??
நீங்கள் மீட்டும் இராக ஆலாபனைகள்
அவள் நெஞ்சையும்
நெருட வேண்டாமா??
உங்கள்
முயற்சியின் முன்னுரைகள்
துன்ப இராகங்களின்
தொடக்கமாக மாறுமுன்
விரையுங்கள் - ஒரு
தொடர்கதை பிறப்பதற்கு
தூதுவனாய் மாறுங்கள்.

# யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தவர்கள்

— வ. ஐ. ச. ஜெயபாலன் —
மூன்றும் வருடம், மனிதப் பண்பியல்.

உழவு யந்திரத்தின் சில்லுகளில் மாட்டியிருந்த இரும்பு வளையங்கள் சேற்றைக் கலக்கி வாரியிறைத்ததில் அந்த உழவு யந்திரத்தைப் போலவே அவனும் சேற்றுச் சிலை போல ஆகிவிட்டிருந்தான். கார்த்திகை மாத வெய்யில் மோசமாக கொழுத்திக் கொண்டிருந்தது. கோரைப் புற்கள் அழுகிய அந்தச் சேற்றின் வாசனையை அனுபவித்தபடியே உழவு யந்திரத்தின் வேகத்தைக் குறைத்தான் ஞானக்குட்டி.

''வா...சாப்பிட்டிட்டு வெய்யில் தாண்டதும் உழலாம்'' ஞானக்குட்டியின் தகப்பன் பூசாரி சுப்பையர் வயலோரத்து ஆத்தி மர நிழலில் நின்றபடி மகனைப் பார்த்துக் கையை அசைத்தார்.

உழவுயந்திரத்தை ஆத்திமரத்துக்கு அருகாக ஓரளவு நிழலில் நிறுத்திவிட்டு பக்கத்து வயலில் நிறைந்து கிடந்த தண்ணீரில் கையையும் காலையும் கழுவிக் கொண்டான் ஞானக்குட்டி ''சின்னத்துரையைக் கண்டனான்.''

கால்களில் கட்டி கட்டியாக காய்ந்து கிடந்த சேற்றை வயல்நீரில் கரைத்தபடியே தகப்பனை நிமிர்ந்து பார்த்தான் ஞானக்குட்டி. அவனை இனம் புரியாத கலவரம் பற்றிக்கொண்டது.

''இல்ல, நீ வேற வேல இருக்கறைக்ரரை உன்ர எண்ணத்துக்கு கொண்டந்திட்டியாம்...''

ஞானக்குட்டிக்கு இப்போது நிம்மதியாக இருந்தது. சின்னத்துரையரின் உழவு யந்திரத்தைத் தனது மூப்பில் கொண்டு வந்து தனது வயலை உழுவதால் ஏற்படக் கூடிய எந்த விளைவுகளையும் எதிர்நோக்க அவன் தயாராகவே இருந்தான் அவன் பயப்பிடுகிற மாதிரியான விஷயங்கள் ஒன்றும் அவன் பயப்பிடுகிற அளவுக்கு இன்னும் முற்றிவிடவில்லை.

''இண்டைக்குள்ள வேலையை முடிச்சுப் போடட்டாம், தனக்கு வேற வேல கிடக்காம்...''

பூசாரி சுப்பையரின் குரல் கடுகடுத்தது.

'' உம் ... ''

'' வேலை முடியாட்டி மாட்டால அடிச்சு விதைக்கட்டாம் இல்லாட்டி வேற றக்ரரைப் பிடிக்கட்டாம்...''

ஞானக்குட்டி மௌனமாக அந்த அதிகம் உயரம் இல்லாமல் சடைத்துப் போயிருந்த ஆத்திமரத்தின் நிழலில் வந்து சாப்பிட அமர்ந்தான்.

* * *

இந்த ஆத்திமரம் இருக்கிறதே பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் ஞானக்குட்டி சின்னப் பையனாக இருந்த போதும் இப்படி பெரிய நிழல் மரமாகவே நின்றது. அப்போதெல்லாம் மத்தியான வெய்யிலில் எருமைக்கடாக்களை அவிழ்த்துவிட்டு விட்டு இந்த ஆத்திமர நிழலில்தான் அவர்கள் சாப்பிடவும் தூங்கவும் செய்வார்கள். அவனது தந்தையார் ஓயாமல் அந்த ஆத்திரமத்தில் நார் கிழிப்பது உலர்த்துவது கயிறு பின்னுவது என்று ஏதாவது துரு துரு வென்று செய்து கொண்டிருப்பார்.

பத்துப் பதினொரு வயதிலேயே உழவு நடக்கும்போது ஞானக்குட்டியை நம்பி ஒரு சோடி எருமை மாடுகளையும் கலப்பையையும் கொடுத்துவிடுவார் பூசாரி சுப்பையர். ஞானக்குட்டி பெருமை பிடிபடாது துள்ளுவான். தன்னுடைய பிஞ்சு மகனின் கெட்டித் தனங்களை இட்டு பூசாரி சுப்பையருக்கும் பெருமை இருக்காதா என்ன?

நான்காம் வகுப்பிற்குப் பின்னர் ஒரு நாள் அந்த வன்னிப் பள்ளிக்கூடத்தில்

கடமையாற்றிய யாழ்ப்பாணத்து ஆசிரியருடன் தகராறு பட்டுக்கொண்டு வீட்டில் வந்து நின்றான் ஞானக்குட்டி. அதன் பின்னர் அவனை யாருமே பாடசாலைக்குப் போ என்று விரட்டவில்லை...

யாழ்ப்பாணத்து ஆசிரியர்கள் அந்த வன்னிப் பாடசாலைப் பக்கம் தலைகாட்டுவது அந்த அந்த மாதங்களுக்குரிய தின வரவுப் புத்தகங்களை நிரப்புவதற்கும் சம்பளம் சம்பந்தமான கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் மாணவர்களிடம் நெய், தேன், இறைச்சி, வத்தல் என்று கப்பம் வாங்குவதற்குத் தான் என்பதை எல்லா பெற்றோர்களைப் போலவே அவனது பெற்றோர்களும் அனுபவரீதியாக அறிந்திருந்தார்கள். இவற்றை விடவும் அந்த ஆசிரியர்கள் செய்யும் பணிகள் சிலவும் உண்டு. வன்னியான் வன்னியான் என்று அவர்களை குத்திக் குத்திப் பேசி தாழ்வு மனச்சிக்கலுக்கு அந்தப் பிஞ்சு வயதிலேயே ஆளாக்கினார்கள் அவர்கள். ''யாழ்ப்பாணத்தான் எப்பவும் எங்களிட்ட ஏதும் புடுங்கிக்கொண்டு போகத்தான் வாறது'' இந்த நியாயமான அபிப்பிராயம் காலம் காலமாகவே வன்னிப்பகுதிகளில் வேரூன்றிப் போயிருந்தது.

அவன் பள்ளிக்கூடம் போகாமல்விட்டது ஒருவரது கவனத்தையும் கவரவில்லை. அதன் பின்னர் பிஞ்சு வயதிலேயே அணிஞ்சியன் குளம் கிராமத்தின் தலைவிதியை நிர்ணயிப்பவர்களில் அவனும் ஒருவனாகி விட்டான்.

* * *

''யோகபுரம் மகாவித்தியாலத்துக்கு புதுசா வந்திருக்கிற தலைமை வாத்தியை கண்டனீங்களோ'' சாப்பிட்டபடியே கேட்டான் ஞானக்குட்டி.

''ஆரான் வந்திருக்கிறது''

''கந்தசாமி எண்டு ஒரு கறுவல் சுள்ளித்தடிமாதிரி முந்தி அணிஞ்சியன் குளத்தில் எனக்குப் படிப்பிச்சுது...''

''இருக்கும்...'' சுப்பையருக்கு இப்படியான விசயங்களில் அதிகம் ஈடுபாடில்லை.

''நெல்லை நனையப் போட்டிட்டான். நாளாம் நாள் முளை கட்டிடும்...கிடா மாடுகளும் காடுகரம்பையோட......
கண்ணகைத்தாயே ஆற்றையும் ரக்ரர் சந்திக்காட்டி என்ன செய்வன்...'' கைகளை விரித்து வானத்தைப் பார்த்தபடி அங்கலாய்த்தார் பூசாரி சுப்பையர். அவருக்குதான் கவலையுடன் சுற்றிச் சுற்றிவரும் வளமையான பிரச்சனைப் பிரதேசங்களுக்கு வெளியே அபிவிருத்தியடையும் எந்த புதிய பகுதிகளிலும் கிஞ்சித்தும் கவனம் செல்வதில்லை.

பதினைந்து வருடங்களுக்குப் பின்னர் கந்தசாமி வாத்தியார் யோகபுரம் மகாவித்தியாலயத்துக்கு தலைமையாசிரியராக வந்திருக்கிறார் என்ற விசயத்தை சில நாட்களின் முன்னர்தான் ஞானக்குட்டி கேள்விப்பட்டிருந்தான்.

அவரை நினைக்கிறபோது அவரை நேருக்கு நேரே சந்தித்து ஒரு பேச்சும் மூச்சுமில்லாமல் அவரது முகத்தில் ஒரு குத்து விடவேண்டும் போல அவனது அந்தராத்மா அந்தரித்தது.

காலையில் உழவு யந்திரத்தை வயலுக்கு செலுத்தி வந்தபோது கந்தசாமி வாத்தியார் தெருவில் போய்க்கொண்டிருந்தார். அவரைக் கண்டதும் உழவு யந்திரத்தின் வேகத்தை திடீரென அதிகரித்தான் ஞானக்குட்டி. மேலதிகமாக சில்லுகளில் மாட்டியிருந்த சேறும் இரும்பு வளையங்களும் கலப்பையுமாக அந்த உழவு யந்திரம் ஒரு புல்டோசரைப் போலவே கம்பீரமாக முன்னேறியது. கந்தசாமி வாத்தியாரைத் தாண்டிச் செல்லும்போது உழவு யந்திரத்தை திடீரென்று மடக்கி வெட்டி தெருவின் நடுப்பகுதிக்குத் திருப்பி ஏககாலத்தில் கிளச்சையும் பிறேக்கையும் அமுக்கி கியரை நடுநிலைக்குத் தட்டிவிட்டு நச்சுச் சிரிப்புச் சிரித்தான் ஞானக்குட்டி.

கந்தசாமி வாத்தியாருக்குத் தன்னைச் சுதாகரித்துக் கொள்ள சில விநாடிகள் எடுத்தது. அவரது முகத்தைப் பார்க்க ஞானக்குட்டிக்கே பரிதாபமாக இருந்தது. கந்தசாமி வாத்தியாரின் தலைமயிர் ஐதாகி நரைத்துப் போய் இருந்தது. கறுப்புச் சட்டம் போட்ட கண்ணாடி வேறு அணிந்

திருந்தார். மற்றும்படி கறுத்த அதே சுள்ளல் உடம்புதான். என்றாலும் அதுவும் உள்ளார ஈடாடிப் போயிருந்தது.

''வாத்தியாருக்கு என்னைத் தெரிய வில்லையோ? நான்தான் ஞானக்குட்டி. அணிஞ்சியன் குளத்தில் உங்களிட்டப் படித்தனான்.'' கந்தசாமி வாத்தியாருக்கு முகம் சற்று மலர்ந்தது அவனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு கண்ணாடியைக் சுழட்டிப் புருவங்களை மேலே தள்ளியபடி தலையைச் சொறிந்தார். பின்னர் வியப்புத் தாழாமல் அந்த உழவு யந்திரத்தைப் பார்த்தார் கந்தசாமி வாத்தியார். ''துவாய்த்துண்டு கட்டியபடி குடும் முடித்துக்கொண்டு தனக்கு முன் கைகட்டியபடி நடு நடுங்கிய வன்னிச் சிறுவர்களில் ஒருவனாக இருந்தவனா இவன்? அதுவும் றைக்ரரில் வாட்டசாட்டமாகவா...?

கந்தசாமி வாத்தியார் எப்போதுமே வேகமில்லாத மனிதர். சமூகங்கள் வேகமாக வளர்ச்சி அடைந்து வருவதில் தான் பின்னுக்கு தள்ளப்படுவதாக அவர்களுக்கு எப்போதுமே ஒரு ஆற்றாமை. ''காலம் கெட்டுப்போச்சி...'' மெதுவாக அவரது உதடுகள் முணுமுணுத்தன.

''ஆள் ஆரெண்டு ஒண்டுமே பிடிபட வில்லை...''

''அதுதான் வாத்தியார் பண்டிக்கருக்கல் கொண்டு வராததுக்காக நாளைக்கு கடாமாடு மேய்கின்ற உனக்கு பள்ளிக்கூடம் ஏதுக்கெண்டு கலைச்சுவிட்டியள் ஞானக்குட்டி...''

கந்தசாமி வாத்தியாருக்கு முகம் வெளுத்துப் போனது. ஒருவாறு சிரித்து நிலைமையைச் சீராக்க முனைந்தார். அவர் சிரிப்பும் பரிதாபமாகவே வெளிப்பட்டது.

''ஓ... எங்கிட பூசாரி சுப்பையற்ற மகனல்லலே, இப்ப எல்லாரும் எப்பிடி, நீ என்ன தம்பி செய்யிறாய்...?''

''பார்க்கத் தெரியவில்லையா'' என்றபடி உழவு யந்திரத்தைப் பெருமிதத்துடன் காட்டினான் ஞானக்குட்டி.

''ஓ... நல்லது... சொன்னாப்போல டி. ஆர். ஓ. எங்கிட பெடியன்தான் தம்பி. ஏதும் அலுவல் பார்க்க வேணுமெண்டால் சொல்லு'' கந்தசாமி வாத்தியார் சற்று நிமிர்ந்தார்.

''டி. ஆர். ஓவா அவனுக்கும் எங்கிட விவசாயிகள் முன்னணிக்கும் இழுபறி இருந்தது. இப்ப அவர் மாற்றம் கேட்டிருக்கிறார் போல'' கந்தசாமி வாத்தியார் எச்சிலை மிண்டி விழுங்கிறார்.

''தம்பி எங்கிட முத்தமிழ் பாதுகாப்பு கழகத்தில நீயும் சேரன்!... யாழ்ப்பாணத்துக்கு எல்லாம் வந்து கூட்டங்களில் கலந்து கொள்ளலாம். தமிழர் ஒற்றுமைப்பட வேண்டும்''

வெற்றிப் பெருமிதத்துடன் கந்தசாமி வாத்தியார் ஞானக்குட்டியை ஏறிட்டுப் பார்த்தார்.

''எங்களின்ர முத்தமிழ் வேற வாத்தியார். நாங்க கையடிச்சு சீவிக்கிற நாங்க. அதுக்கும் எங்களை மிதிக்கின்ற உங்களின்ர முத்தமிழுக்கும் ஒத்துவராது...''

ஞானக்குட்டி பற்களை நறுமியபடி கியரை மாற்றி வேகத்தை அதிகரித்து கிளச்சில் இருந்தகாலை திடுப்பென தூக்கினான். அவன் மனதை உணர்ந்து கொண்டதுபோல உழவுயந்திரமும் ஒரு உறுமல் உறுமியபடி முன்னோக்கிப் பாய்ந்து பின்புறத்தை ஆட்டி கந்தசாமி வாத்தியாருக்கு அழகு காட்டிவிட்டு சீராக முன்னோக்கி ஓடி மறைந்தது.

* * *

வெய்யில் இன்னும் தணியவில்லை. சிறகைகளும் கொக்குகளும் அங்குமிங்குமாக உழுது சேறுடப்பட்ட பாத்திகளுள் சுறு சுறுப்பாகக் காணப்பட்டன. பருந்து ஒன்று சேற்றில் மோதி வயல் கோவியன் பாம்பு ஒன்றை வாரி எடுத்துச் சென்றது.

பூசாரி சுப்பையர் ஞானக்குட்டியைப் பார்த்து தொண்டையைக் கனைத்துக் கொண்டார். அதுவரை அந்த சேறுடப்பட்ட மண்ணின் வாசனையை அனுபவித்துக் கொண்டு கண்களை மூடிக்கிடந்த ஞானக்குட்டி கண்களைத் திறந்தான்.

"பார் யாழ்ப்பாணி, யாழ்ப்பாணி என்..." பூசாரி சுப்பையர் கனல் கக்கினார்.

"ஏனண..."

"பார் நீ இராப்பகல் பாராமல் அடிச்சுக் குடுக்காட்டி சின்னத்துரையர் றக்ரருக்கு கட்டுக்காசு ஒழுங்காகக் கட்டுவாரோ?... துரச்சாமியின்ர றைக்ரரைப் பறிச்சது போல பறிச்சுக் கொண்டுபோயிருப்பாங்கள். அவருக்கு வேறு வழியில் வரும்படியள் இருக்கோ..."

"விதைப்புக்கு றைக்ரர்தானே நான் கொண்டு வாறன். சும்மா என நீ யாழ்ப்பாணத்தாரைத் திட்டிறுய்..."

"நீ என்ன சொன்னலும் அவங்கள் அவங்கள்தான்"...

"பேசாம இரன்" ஞானக்குட்டிக்கு எரிச்சல் எரிச்சலாக இருந்தது.

"உங்கிட காலத்தில் நாங்கள் கண்ட யாழ்ப்பாணத்தார் வேற அவங்க பெரிய இடத்து யாழ்ப்பாணியர், அவங்கள் எல்லோரும் உத்தியோக தோரணையிலே எங்கட உழைப்பை தவிச்சமுயல் அடிக்கிற மாதிரி தட்டிக்கொண்டு போகவே வந்தவங்கள்... இப்ப இங்க குடியேறி கமஞ் செய்ய வந்திருக்கிற யாழ்ப்பாணத்தார் எங்களைப் போல சாதாரண மனிதர், ஏழை எளியதுகள்..."

பூசாரி சுப்பையருக்கு மகன் சொல்வதிலும் நியாயம் இருப்பதாகவே பட்டது. வவுனிக்குளம் கட்டி முடிந்து யாழ்ப்பாணத்தவர்கள் ஆயிரக்கணக்கில் அந்தப் பிரதேசத்தில் குடிவந்தபோது பூசாரி சுப்பையருக்கு மட்டுமல்ல எல்லா வன்னி மக்களுக்குமே வாழ்க்கை அஸ்தமித்துப் போய்விட்டது. போலத்தான் இருந்தது. குறிப்பாக துணுக்காயைச் சேர்ந்த நிலக்கிழார்கள் பதறிப்போய் விட்டார்கள்.

"யாழ்ப்பாணியள் வந்து எங்களைத் துலைச்சுப்போடப் போருங்கள்" நிலக்கிழார்கள் சாக்குருவிச் சோதிடம் சொன்னார்கள். அதுவரை ஏழை வன்னி விவசாயிகளின் வீட்டு முற்றத்துக்குக்கூட வந்திராத பெரும் பெரும் காணிக்கார வன்னியாரெல்லாம் அடிக்கடி அவர்கள் வீடுகளுக்கு வந்து யாழ்ப்பாணத்தாரை அகற்றச் சங்கம் கூட்டினர்கள்.

நிலக்கிழாரின் ஆதிக்கம் முடங்கியதைத் தவிர யாழ்ப்பாணத்து ஏழை விவசாயிகளின் வருகையால் ஏழை வன்னி மக்கள் பயப்பட்டதுபோல ஒன்றுமே நடந்துவிடவில்லை.

"யாழ்ப்பாணத்துக் கமக்காறர் வராட்டி இப்பவும் நாங்கள் கடாமாடுகளுக்குப் பின்னுக்குத் திரிய வேண்டியதுதான்" ஞானக்குட்டி அர்த்தபுஷ்டியுடன் தகப்பனைப் பார்த்துக் கிண்டல் செய்தான்.

ஞானக்குட்டிக்குச் சண்முகநாதனின் ஞாபகம் வந்தது. நில அபிவிருத்தித் திணைக்களத்தில் உழவு யந்திர சாரதியாகப் பணிபுரிந்த யாழ்ப்பாணத்தவன் அவன். அவன் தான் மேலதிகாரிகளுக்குத் தெரியாமல் ஞானக்குட்டிக்கு உழவு யந்திரம் செலுத்தக் கற்றுத் தந்தவன்.

மெல்ல எழுந்த ஞானக்குட்டி வெய்யிலை அளப்பவன் போல நோட்டம் விட்டபடி உழவு யந்திரத்தை நோக்கி நடந்தான். இப்போது வானத்தில் முகில்கள் கறுத்திருந்தன.

* * *

ஒரே பாணியில் அரசாங்கத்தால் கட்டிக் கொடுக்கப்பட்ட சிறுசிறு கல் வீடுகள் நிறைந்தது யோகபுரம் குடியேற்றத் திட்டக் கிராமம். இருமருங்கும் வேலிகளில் பாவட்டைச் செடிகளும், கிழுவை மரங்களும் செழித்திருந்த ஒழுங்கையால் உழவு யந்திரத்தைச் செலுத்தி ஓட்டி வந்த ஞானக்குட்டி சின்னத்துரையரின் வளவுக்குள் வீட்டுக்கு முன்பாகச் சற்றுத் தள்ளிப் போடப்பட்டிருந்த கொட்டிலுள் உழவு யந்திரத்தை லாவகமாகச் செலுத்தி நிறுத்தினன்.

பின்புறமாகத் தோட்டத்தில் ஏதோ பிரயாசத்தில் ஈடுபட்டிருந்த சின்னத்துரை உழவு யந்திரச் சத்தம் கேட்டு முற்றத்துக்கு வந்து சேர்ந்தார். சேற்றில் வேலை செய்த அடையாளமே தெரியாமல் உழவு யந்திரம் துப்பரவாகக் கழுவப்பட்டதில்

அவரது கடுகடுப்பெல்லாம் தணிந்தது. சற்று மலர்ந்த முகத்துடன் ஞானக்குட்டியைப் பார்த்தார் சின்னத்துரையர்.

''என்ன, முழுக் காணியையும் கலக்கி உழுதிட்டியா?''

''உம்'

''விதைப்புக்கு றைக்ரர் தோதுப்பட்டு வராது''

''நான் உங்கள நம்பி நெல்லை நனையப் போட்டிட்டன். நாலாம் நாள் விதைக்க வேணுமே...'' ஞானக்குட்டியின் குரலில் கடுகடுப்பிருந்தது.

''அப்பா...'' இனிமையான, மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டும் அந்தக் குரல் வந்த திசைக்கு ஞானக்குட்டியும், சின்னத்துரையரும் தலையைத் திருப்பினர்கள். பால் தேநீர் நிரம்பிய பெரிய கிளாஸ் ஒன்றுடன் பரத நாட்டிய அலாரிப்பு ஆடும் நர்த்தகியின் பாணியில் பணிவுடன் மெல்ல மெல்ல அடிவைத்து இறங்கி வந்தாள் யசோதா. திரும்பி நடந்து யசோதாவிடம் தேநீர் பாத்திரத்தை வாங்கி வந்து ஞானக்குட்டியிடம் நீட்டினர் சின்னத்துரையர்.

''றைக்ரர் வாங்கிய விதத்தில் கொம்பனிக்கு இருபதினுயிரம் ரூபாவுக்கு அதிகமாகக் கடன் கட்டவேணும். ஊரிலும் எனக்கு எக்கச்சக்கமாகக் கடன்'' சின்னத்துரையர் பொய் பேசவில்லை என்பதை ஞானக்குட்டி அறிவான். எங்காவது உடன் காசு வரக்கூடிய வேலை செய்தால்தான் அவரால் நிலைமையைச் சமாளிக்கமுடியும். தனது நிலைமைக்கு மிஞ்சி அகலக் கால் வைத்துவிட்டதாக சின்னத்துரையர் அடிக்கடி மனச் சங்கடப்பட்டும் கொண்டார். ஞானக்குட்டியைப்போல பொறுப்பும் திறமையுமுள்ள சாரதியும் கிடைத்திருக்காவிட்டால் அவர் பெரிய நெருக்கடிக்குள் மாட்டிக்கொண்டிருப்பார்.

''விதைப்புக்குக் கட்டாயம் றைக்ரர் வேணும்'' ஞானக்குட்டியின் குரலில் அழுத்தம் தொனித்தது.

''என்னத்தையண்டாலும் செய்...'' திரும்பி நடந்த சின்னத்துரையர் சற்று நிதானித்து ''சாப்பிட்டுவிட்டுப் போ' என்றபடி பின்புறமாக இருந்த தோட்டத்துக்குள் மறைந்தார்.

வீட்டு வராந்தாவில் காலடிச் சத்தம் கேட்டது.

'' சாப்பாடு போட்டிருக்கு...''

தந்தையார் தோட்டத்துக்குப் போய் விட்ட துணிவில் மிடுக்காக முற்றத்தில் நடந்து வந்த யசோதா சுதந்திரமாகவே ஞானக்குட்டியைப் பார்த்துப்பேசினுள்.

'' நான் வீட்டில சாப்பிடுறன்...''

'' இதுவும் வீடுதான் சாப்பாடு போட்டாச்சு...''

இருவராலும் கண்டிப்பைத் தொடர்ந்து பராமரிக்க முடியாமல் போய் விட இருவருமே ஏக காலத்தில் கல கல வென்று வாய்விட்டுச் சிரித்தார்கள்.

ஞானக்குட்டி சாப்பிடும்போது யசோதா மேசை ஓரமாக அவனுக்குப் பக்கத்தில் வந்து நின்றுள்.

'' அப்பா றைக்ரரை விக்கப் போறுர்... ''
யசோதாவின் குரலில் துக்கம் நிறைந்திருந்தது.

ஞானக்குட்டி வியப்புடன் கண்களை அகட்டி அவளை நேருக்கு நேராகப் பார்த்தான். பின்னர் என்ன நினைத்தானே சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விடாமல் எச்சில் கையால் யசோதாவை ஆதரவுடன் அணைத்துக் கொண்டான்.

* * *

ஞானக்குட்டி வீட்டுக்குள் நுழைந்ததும் நுழையாததுமாக அவனது தந்தையார் அதுவரை பொறுமையிழந்து அவனது வரவுக்காகக் காத்துக்கொண்டிருந்தவர் போல் வாய் திறந்தார்.

'' என்ன விதைப்புக்கு றைக்ரர் வருமே? இல்லையெண்டா அந்த யாழ்ப்

பாணியனிட்ட நீ வேலே செய்ய வேண்டாம்.

''சும்மா கிடவெணை விதைப்புக்கு றைக்ரர் வராதெண்டு ஆர் சொன்னது.''

பூசாரி சுப்பையர் தமது மகனை ஏற இறங்கப் பார்த்தார். அவன் உருண்டு திரண்டு ஒரு ஆணழகனைப் போலவே இருந்தான். வன்னி இளைஞன் ஒருவனையும் யாழ்ப்பாணத்து குமரிப்பெண் ஒருத்தியையும் இணைத்து மிகச் சாதாரணமாகப் பேசக்கூடிய காலமொன்று தங்களது நாட்களிலேயே ஏற்பட்டிருந்தது அவருக்கு அவ்வளவு சீரணிக்க முடியாத விசயமாகவே இருந்தது.

'' உண்மைதான் அப்ப நாங்கள் கண்ட பெரிய இடத்து யாழ்ப்பாணியார் வேற. இப்ப கமம் செய்ய வந்த யாழ்ப்பாணியா வேறதான் போல கிடக்கு.''

பூசாரியரது அகன்ற மார்புள்ளிருந்து நம்பிக்கையுடனும் திருப்தியுடனும் ஆறுதல் பெருமூச்சொன்று மெல்லக் கழிந்தது.

# (நெ)நல்லோவியம்

1978 மார்ச் 15 இல் யாழ். வளாகத்தில் தந்தை செல்வா அவர்களின் உருவப்படம் ஒன்றை எமது மன்றம் பார்வைக்கு வைத்திருந்தது. தந்தை செல்வா அவர்களை நேரிலேயே பார்ப்பது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்தியது அந்த ஓவியம். இத்தனைக்கும் அது வர்ணங்களாலோ பென்சிலாலோ வரையப்பட்டது அல்ல. தனியே நெற்களை மட்டும் கொண்டு அமைக்கப்பட்ட ஓவியமே அது. மொத்தம் மூன்று நிறங்களில் 4618 நெற்கள் அதில் ஒட்டப்பட்டிருந்தன. அதை அமைத்தவர் பல்கலைக்கழக மாணவர்களின் பெரும் பாராட்டுதலுக்குள்ளானுர்.

இதை அமைத்தவர் அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. துரைசிங்கம் துரைராஜா (T. T. R.) என்பவராவார். மிகவும் எளிமையான தோற்றத்தைக் கொண்ட இவர் கூறுகையில், ''பல்கலைக்கழக மாணவர்களாகிய நீங்கள் இந்த ஓவியத்தைப் பார்த்து மகிழ்வதோடு நிறுத்திவிடாது, இதன் நுணுக்கங்களைக் கேட்டறிந்து இதைவிட நன்றுகச் செய்வதற்கு முயல வேண்டும்'' என்றுர்.

மாணவர் பலரது கேள்விகளுக்கும் பொறுமையுடன் பதிலளித்த ஓவியருக்கு மன்றம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

* * *

**உண்பா**

''மாலை நேரத்தில் மங்கிய நிலாவொளியில்
வாலை யுடனென்னைப் பார்த்ததனுல் — காலை(ப்)
பிடித்துப் பல்லிளித்துப் புகழாரம் செய்யாமல்
படித்துப் பயனென்று மில''

(வெண்மை + பா = வெண்பா; உண்மை + பா = உண்பா)

# ஓர் ஆசிகுள வாசியின் ஆகஸ்ட் அனுபவம்

— குமார் தம்பையா
மூன்றும் வருடம், மனிதப் பண்பியல்

*[இக் கட்டுரை வவுனியா நகரின் கண் உள்ள ஆசிகுளம் என்னும் கிராமத்தில் ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி நடைபெற்ற கொடூரங்களைப் பின்னணியாக வைத்து எழுதப்பட்டதாகும். இதற்குமுன் இக் கட்டுரையின் மூலமான ஆசிகுளத்தைப் பற்றி வாசக நேயர்களுக்காக விளக்க வேண்டியுள்ளது. வவுனியா நகரிலிருந்து தென்கிழக்கு மூலையை அண்டி ஏறக்குறைய நகரிலிருந்து 7 மைல் தொலைவில் இது அமைந்துள்ளது. இக் கிராமத்தை அண்டிய ஏழு அல்லது எட்டுக் கிராமங்கள் தமிழ்க் கிராமங்களாகக் காணப்பட அவற்றைச் சூழவுள்ள ஏனைய கிராமங்கள் மதவாச்சி தேர்தல் தொகுதியினதும், வவுனியாத் தொகுதியினதும் சிங்களக் கிராமங்களாகவே காணப்படுகின்றன.]*

இலங்கை முழுவதும் அன்றைய காலத்தில் தார்மீக அரசாங்கத்தின் பாரபட்சமற்ற சமதர்ம ஆட்சி நடந்து கொண்டிருந்ததாகச் சொன்னார்கள்! அப்பொழுது ஆட்சியில் இருந்து கொண்டிருந்த அரசாங்கம் அவ்வாறு தன்னை அறிமுகப்படுத்தி இருந்தது. அவ்வாறு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் குதூகலித்துக் கொண்டிருந்த நேரத்தில் பௌத்த வழிவந்த புனிதர்களின் அடிவருடிகள் சிலர் இந்நாட்டின் பரம்பரைச் சொந்தக்காரர்களான தமிழ் மக்களுக்கு என்ன என்ன கொரூரம் எல்லாம் செய்ய முடியுமோ, செய்ய வேண்டுமோ அத்தனையையும் செய்து ஆட்டி வைத்த, "அன்பின் வழியே உயிர்நிலை" என்ற அடிப்படையில் வந்த எத்தனையோ தமிழ் உயிர்கள் இன்னல்பட்ட அந்தக் கரி நாள்தான் ஆகஸ்ட் 17ம் நாள். அன்றைய நாள் என்றுமே மாற்றானுக்கு மண்டியிடா மறத் தமிழர்கள் தான் வாழ்ந்த இடம் எல்லாம் தலை குனிய வேண்டிய இழி நிலைக்குள்ளான நாள். அந்தக் கரி நாளில் பொட்டிழந்த பூவையர் எத்தனை பேர், கற்பிழந்த கன்னியர் எத்தனைபேர், கணவனையிழந்த காரிகையர் எத்தனை பேர், காலிழந்த காளையர்கள் எத்தனை பேர், செல்வமிழந்து சீரழிந்த குடும்பங்கள்தான் எத்தனை என எண்ணிலடங்கா. இந்நிலத்திற்கு இரத்தத்தை இறைத்து இந்நிலமே தன்னிலம் என்றெண்ணி உழைத்து உருக்குலைந்து ஓர் அளவு பொருள் பண்டங்களுடன் வாழ்ந்து வந்த குடும்பங்கள் இருக்க இடம் இன்றி இடம் பெயர்ந்து வந்து நின்று கண்ணீர் வடித்த கோலம் தான் எத்தனை. இத்தனை சம்பவங்கட்கும் இலங்கையின் கண் உள்ள எந்த நகரோ, கிராமமோ, வீடோ விதிவிலக்கல்ல.

இந்த வகையில் இந்நாட்டை வெள்ளைக்காரன் ஆண்டுவந்தபோது இறுதிவரை இலங்கையில் அவனுக்கு தலைகுனியாது தன் மானங்காத்த பண்டார வன்னியனின் பாரிய வளங்கொழிக்கும் பூமியாம் வன்னி நகரும் பெரும் இக்கட்டான நிலைக்கு உள்ளானது. அமைய இருக்கின்ற தமிழ் ஈழத்தின் எல்லை அரணாக விளங்கும் வவுனியா நகரிலே இதுவரை காலமும், சரிசமமாக வசிக்கின்ற தமிழர்களும் சிங்களவர்களும் ஒருவரை ஒருவர் உடன் பிறப்புக்களாகவும், உறவினர்களாகவுமே மதித்து வந்தனர். ஒரு சாரார் வீட்டில் நடக்கின்ற உறவுமுறை நிகழ்ச்சிகட்கு [திருமணம், மரணச்சடங்கு, வேறுசமய நிகழ்ச்சிகள்] தம் உறவினரை அழைப்பதை விடுத்து மொழி ரீதியான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இவ்வாறான இருமொழிச் சாராரின் தொடர்பின் நிமித்தமே சிங்களவர்கள் தமிழ்மொழியிலும் தமிழர்கள் சிங்கள மொழியிலும் பாண்

டித்தியம் பெற்று விளங்கினர். இதற்கு இக் கட்டுரையில் வரும் மேற்படி ஆசிகுளம் என்னும் கிராமம் மிகவும் பொருத்தமான உதாரணம் ஆகும். இதற்கொரு காரணம் பல சிங்கள கிராமங்கள் இதனைச் சூழ உள்ளமையே.

வன்னிப் பிரதேசத்தின் வரலாற்றுக் கிராமமான மேற்படி ஆசிகுளமும் இலங்கையின் வரலாற்றில் கறை படிந்த ஆகஸ்டில் தாக்குதலுக்குள்ளான குறிப்பிடத்தக்ககிராமம். ஆகஸ்ட் 17 இனக் கலவரம் ஆரம்பித்த அன்று வவுனியா நகரில் பல கிராமங்கள் தாக்குதலுக்குள்ளாயின. ஆனல் 18, 19 ஆகிய இரு தினங்களும் ஏராளமான சிங்களக் காடையர்கள் இந்நாட்டின் காவல் நாய்களான பொலிஸ் இராணுவம் என்பவர்களின் உதவியுடன் ஏராளமான தமிழ்க் கிராமங்களை சூறையாடி தீக்கிரையாக்கினர். குறிப்பாக வவுனியாவின் தென்பகுதியை அண்டியுள்ள கள்ளிக்குளம், கறுவல்புளியங்குளம், மாமடு, வீமன்கல்லு. காத்தார்சின்னக்குளம் போன்ற பல கிராமங்களில் உள்ள சகல வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டதாலும், சேதப்படுத்தப்பட்டதாலும் ஊரில் உள்ளோர் அனைவரும் உயிரை மட்டும் கொண்டு அகதிகளாய் இடம் பெயர்ந்து காடு, மேடெல்லாம் அலைந்து இறுதியில் சிங்கள பிரதேசங்கள் அண்மையில் இல்லாத ஓமந்தை போன்ற இடங்களில் உள்ள தமது உறவினரை அண்டி வாழ்ந்தனர். இத்தனைக்கும் மத்தியில் இவ் ஆசிகுளக் கிராமம் தப்பித்து இருந்தது. ஆனல் இக் கிராமமும் இதனை அண்டிய ஏனைய சில கிராமங்களும் மிகவும் பீதி அடைந்த நிலையில் காணப்பட்டன. இதனல் முன்கூட்டியே சிலர் தமக்கும் தமது குடும்பத்தாருக்கும் காடுகளில் புகலிடம் தேடத் தொடங்கினர். பெரும்பாலும் 17 ம் திகதி தொடக்கம் 20 ம் திகதி வரையான காலப்பகுதியில் பலர் பகலில் உணவை உண்டுவிட்டு இரவில் காடே தஞ்சம் என்று வாழ்ந்து வந்தனர். இவ்வாறு பகல் நேரங்களில் தங்கி இருந்தபோது கூட இவ்வூர் மக்கள் பல இன்னல்கட்கும், துன்புறுத்தல்கட்கும் ஆளாகி இருந்தனர். வவுனியாவில் பல கிராமங்கள் தீக்கிரையாக்கப்பட்டும், நகரின் மத்தியில் 15 — 20 க்கு மேற்பட்ட கடைகள் தீக்கிரையாக்கப்பட்டு இருந்தபோதும்; பல சிங்களக் கிராமங்களால் சூழப்பட்டு இருந்த ஆசிகுளம் மட்டும் எஞ்சி இருந்தமைக்கு இவ்வூர் மக்களின் வீரத்தன்மையும், விறுவிறுப்புமே காரணம் எனலாம். ஏறக்குறைய 50 — 75 குடும்பங்கள் வரை வாழும் இக் கிராமத்தில் சுமாராக 25 30 வரையான துப்பாக்கிகள் இவ்வூர் மக்களிடம் சொந்தமாக இருந்தன. இதனல் ஊரில் உள்ள சகல இளைஞர்களையும் ஒன்று சேர்த்து வீரம் நிறைந்த பெரியவர்கள் பலர் ஊரைக் காப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். ஊரின் நாற்புறங்களும் இரவுபகலாய் பலத்த காவலுக்குட்பட்டு இருந்தமையால் சிங்களக் காடையர்களும், ஆசிகுளத்தை அண்மிய சிங்களக் கிராமங்களும் பலவிதத்திலும் அச்சம் கொண்டிருந்தன. பொதுவாக இந்நான்கு நாள் இடைவெளியில் வவுனியாவின் பல கிராமங்களிலும் இருந்த மக்கள் வேறுபல கிராமங்களை புகலிடமாக நாடிச் சென்றனர். வெளியூர் மக்களில் பிழைப்பு நாடியும், வேறு பல முயற்சிகள் கருதியும் வவுனியாவில் வந்துகுடியேறிய யாழ்ப்பாண மக்கள் போன்றோர் யாழ்நகரில் தஞ்சம் புகுந்தனர். ஆனல் வன்னிப் பூமியையே பரம்பரையாகக் கொண்ட மக்கள் காட்டுப் புறங்களையும், மறைவிடங்களையுமே தமது ஒதுக்கிடமாகக் கொண்டிருந்தனர்.

ஆசிகுளக் கிராமத்தில் 19–ம் திகதி நண்பகல் 12 மணி மதிய உணவை உண்டுவிட்டு காட்டில் இரவு பூராகவும் இருந்த களைப்புத்தீர வீட்டில் இளைப்பாறும் நேரம். உண்டகளைப்புத்தீரஉறக்கம் எனைத்தூண்ட தென்னைமர நிழலில் நான்படுத்திருக்கும் நேரத்தில் எமதூரில் இருந்து தென்மேல் பகுதியை நோக்கிய சிறிது தூரத்திற்கு அப்பால் பயங்கர வெடியோசைகள் கேட்டவண்ணம் இருந்தன. சிறிது நேரத்தில் ஊர்ச் சனங்கள் 350 க்கு மேற்பட்டோர் தம் கைக்குழந்தைகளையும் உடுபுடவைகள் சிலவற்றையும் ஏந்திய வண்ணம் காட்டை அண்டிய ஊரிற்கு பின்புறத்தில் உள்ள சேனைகள் நிறைந்த வெளிக்கூடாக ஐயோ ஐயோ எனஓலமிட்டபடி

ஓடிவருகின்ற காட்சியைக் கண்ட எமது குடும்பத்தார்க்கும் கிலி விட்டுவைக்கவில்லை. எமது வீட்டில் இருந்த 15 இளைஞர்கள் ஆயுதபாணிகளாக வெடி கேட்ட திசையை நோக்கி ஓடினர். எமது குடும்பத்தார் எல்லாச் சனங்களுடனும் சேர்ந்து காட்டிற்குள் நுழையத் தொடங்கினர். அச்சமயம் காட்டின் எப்புறத்திலும் சன ஓலமும் கூக்குரலுமே தென்பட்டது. இந்நேரத்தில் மக்கள் 1 மைல் தூரத்தை நடந்து பெரும் காட்டுக்குள் நுழைந்து விட்டார்கள். அன்று ஊர்மக்கள் பலரோடு காட்டில் இருக்கும் சந்தர்ப்பம் அடியேனுக்கும் கிடைத்தது. முன்கூட்டியே பல குடும்பங்கள் தமக்கு பொருத்தமான ஒவ்வொரு இடத்தைக் காட்டிலே தெரிவு செய்து அதனைத் தமது வசதிக்கு ஏற்றாற்போல் தயார் செய்து கொண்டார்கள். இவ்வாறு பலரது தங்கும் இடங்கட்கும் சென்றபோது மறக்க முடியாத சில அனுபவங்களும் என்னைத் தொடர்ந்தன. இதுவரை கண்ணால் கண்டிராத, மனதால் நினைத்துப் பார்க்க முடியாத சில காட்சிகளைக் கண்டு கண்ணீர் வடித்த பலருடன் நானும் கண்ணீர் வடிக்க வேண்டிய நிலைக்குள்ளானேன். வீட்டின் குளுகுளுப்பில் விளையாடித் திரிந்து பஞ்சணை இல்லாவிடினும் பசுமையான தொட்டிலில் துவண்டு விளையாடிய பச்சிளம் பாலகர்கள் எல்லாம் அடர்ந்த பெரும்காட்டில் ஆங்காங்கே காணப்படும் ''தேன்தூக்கி'' மரம் எனப்படும் ஒருவகை மரத்தில் தொட்டில்கள் தூங்கிய காட்சி மனத்தை உருக்குவதாய் இருந்தது அன்று 3மணிவரையும் ஊரின் எல்லாமக்களும் (ஊர்காவலரைத் தவிர்த்து) காட்டிலேயே இருந்தனர். அன்றைய பயங்கர வெடியோசைகள் எமதூரில் இருந்து 3மைல் தொலைவில் உள்ள கல்நாட்டின குளம் என்னும் கிராமத்தில் நடந்த கொடூரத்தின் எதிரொலி. அன்று அங்கு 15வீடுகட்கு மேல் தீக்கிரையாக்கப்பட்டு இருந்தது. இத்தனை கொடூரத்தை செய்தவர்கள் கல்நாட்டின குளம் என்ற மேற்படிகிராமத்தின் அடுத்த கிராமமான ஈறற்பெரிய குளம் என்னும் சிங்களக் கிராமத்தின் சிங்களக் காடையர்களே. இக்கிராமத்தில் ஒரு வீரமிகு சம்பவமும் நடைபெற்றது. மேற்படி ஊரில் உள்ள அனைவரும் சிங்கள வெறியரின் வெறியாட்டத்திற்கு அஞ்சி ஓடி மறைந்திருந்தபோது ஒரு வீட்டில் நின்றான் ஓர் மறத்தமிழன். இவ்வேளையில்தான் வீடுகளைத் தீக்கிரையாக்கி வீதிவழியே ஆடியும், பாடியும் அட்டகாசம் புரிந்து வந்தார்கள் மதவெறி பிடித்த சிங்கள வெறியர்கள். இந்நிலையில் தனது வீட்டிற்கு வந்த வெறியர்களை நோக்கி தன்னிடம் இருந்த துப்பாக்கியால் குறிவைத்தான் தனித்து நின்ற அம் மறத் தமிழன். ஒரு சிங்களக் காடையனின் கால் துண்டாடப் பட்டது. இந்நிலையில் திகில் அடைந்த வெறியர் கூட்டம் தாறுமாறுகச் சுட்டது. மூன்று குண்டுகள் தமிழனின் நெஞ்சில் பாய்ந்தது. இரண்டு நாட்களின் பின் யாழ்நகர் வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்ட அந்த மறத்தமிழன் இரண்டு மாதங்களின் பின் தன் அருமை மனைவியையும் தன் நான்கு தமிழ்ச் செல்வங்களையும் தவிக்கவிட்டு தமிழனுக்காக தன் உயிரை ஈய்ந்து விட்டு இவ்வுலகை விட்டகன்றான்.

20ம் திகதி காலைப்பொழுது கஸ்டத்தின் மத்தியில் புலர்ந்து அன்றுதான் என் பிறந்த மண்ணும் நெருப்பில் வேகவேண்டிய கரிநாளாயிற்று. ஆண்டவன் மீது அசையாத நம்பிக்கை வைத்திருக்கும் இவ்வூர் மக்களுக்கு ஆண்டவனும் அடிக்கடி அருள் புரிவது மக்களின் நம்பிக்கைக்கு மேலும் வலுவூட்டியது. அன்று ஊர் எல்லாம் ஒரே கதை ''இன்று ஆசிகுளத்திற்கு நெருப்பு வைக்கப் போகிறுங்களாம்'' என. இதற்குச் சான்று கற்பிப்பது போன்று அன்று காலை 7மணிக்கே 3 பொலிஸ் வான்களில் வந்த பொலிஸ் நாய்கள் வீடுவீடாகச் சோதிக்கத் தொடங்கின. அத்துடன் இரண்டு தடவை இராணுவத்தினர் வந்து அட்டகாசம் புரிந்தனர். ஊரில் உள்ள மக்களில் பலர்காட்டில் கரந்து வாழ்ந்தபோது தருணம் பார்த்து வந்த சிங்களக் காடையர்களுடன் கூடிய இராணுவ வேட்டை நாய்கள் ஊரில் உள்ள கோழிகள், தென்னஞ்சோலையின் அழகுதந்த இளநீர் குலைகள் யாவற்றையும் பதம் பார்த்தனர். அன்று பிற்பகல் 3 மணியளவில் 5 பெரிய ரக்குகளில் வந்த பொலிஸ் நாய்களும், இராணுவ வெறியர்களும் மீண்டும் ஒவ்வொரு வீடாகவும் ஒவ்வொரு ஆளாகவும் சோதனையிட்டனர். ''அடோ பறத்தெமிழ நீங்கள் வல்வெட்டித் தொறையிலே இருந்து

பொய்ஸ் (Bombs) கொண்டுவந்ததுதானே'' என்று கேட்டவண்ணம் சிலரை அடித்துத் துன்புறுத்தியும், சிலரை இம்சைப் படுத்தியும் வற்புறுத்திக் கேட்டனர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தது எல்லாம் எட்டாத பழத்திற்கு கொட்டாவி விட்ட கதையாகவே முடிந்தது. இராணுவத்தினரதும், பொலிஸ் நாய்களதும் அட்டகாசத்தின் நிமித்தம் ஊரில் உள்ள மக்களில் ¾ பகுதியினர் தமது அத்தியாவசிய மூட்டை முடிச்சுக்களுடன் வவுனியாவின் வடமேற்கில் சிங்களப் பிரதேசங்கள் அல்லாத தமிழ்க் கிராமங்கள் அதிகமுள்ள சாஸ்திரி கூழாங் குளம், தாண்டிக்குளம், புதுக்குளம் போன்ற இடங்கட்கு அவ்வூர் மக்களின் உதவியுடன் அன்று பகல் 1 மணிக்குள் இடம் பெயர்ந்து சென்றனர். இச்சந்தர்ப்பத்தில் ஒன்று குறிப்பிடத்தக்கது. ஆசிகுளக் கிராமத்தின் ஆண்கள் அனைவரும் இன்னும் ஊரைக்காப்பாற்றுவதில் முன்நின்று உழைத்தனர். வவுனியா நகரில் தீர்த்துக் கட்டவேண்டிய பல கிராமங்களைத் தீக்கிரையாக்கிய பின்னர் ஆசிகுள மறத்தமிழர்கட்கு அஞ்சி இருந்த சிங்களக் காடையர்கள் இன்று இரவு எப்படியாவது ஆசிகுளத்தைத் தீக்கிரையாக்கவேண்டும் என்ற ஒரேநோக்குடன் பொலிஸ் நாய்களினதும், இராணுவ வெறியர்களினதும் உதவியையும், ஒத்தாசையையும் நாடினர்.

20 ம் திகதி மாலை 6 மணி தொடக்கமே ஆசிகுளக் கிராமத்தில் பயங்கர அமைதி குடிகொண்டு இருந்தது. இவ் அமைதியை குலைத்து அடிக்கடி பொலிஸ் நாய்களின் காவல் வண்டிகள் வலம்வந்து கொண்டிருந்தன. ஆனால் இரவு 9 மணிக்குப் பின் எந்தவாகனமும் வரவில்லை. பூரணசந்திரன் அன்று தன் நிலவின் வண்ணத்தால் இரவை பகலாக்கிக்கொண்டிருந்தான். அப்போது நேரம் அதிகாலை இரண்டுமணி இருக்கும் இன்னும் ஊரைக்காக்கும் உத்தமதமிழர்கள் விழிப்பாகவே இருந்தனர். இந்நேரத்தில் ஆசிகுளக்கிராமத்தின் வடக்கெல்லைப் புறத்தில் இருந்து சங்கொலி போன்ற ஒரு பயங்கர ஓசை கேட்டது. 5 விநாடிகளின் பின் கிராமத்தின் தெற்கெல்லைப்புறத்தில் இருந்து முதல் கேட்ட ஓசைக்கு எதிரொலி தெரிவிப்பதைப் போன்று அந்தஒலிகேட்டது சிறிதுநேரத்தின் பின் வடக்கு எல்லையில் இருந்து வீதிக்கு நேராக பாரிய வெளிச்சம் ஒன்று ஏறக்குறைய 40 அடிக்கு மேலாக பாய்ந்தது. அதே போன்று தெற்குப் புறத்திலும் இருந்து அதேபோன்ற ஒளி பரவியது. அவ் ஒளியைத் தொடர்ந்து டுமீல், டுமீல் என்று எட்டுக்குமேற்பட்ட வெடிச்சத்தங்கள் இருபுறத்திலும் ஒலித்தன. அதன் பின்னர் ஊரில் காவலுக்கு நின்ற வீரர்களும் சுட்டனர். ஆனால் இராணுவத்தினரும், பொலிஸ் நாய்களும்தான் சிங்களக் காடையர்களுடன் இணைந்து தீ வைக்கின்றனர் என்பதை உணர்ந்து பின்வாங்கத் தொடங்கினர். இப்போது காவல் இருந்த அனைவரும் மறைவிடத்தை நாடினர். ஊரின் இரு எல்லைப்புற வீடுகளும் தீயில் எரிந்துகொண்டிருந்தன. ஊரே குமுறியது. ஊரில் உள்ள நாய்களெல்லாம் ஊளையிட்டன இந்த அவல நிலையைக் கண்டு. பசு மாடுகளெல்லாம் தாங்கமுடியாத துயரில் பெருத்த சத்தமிட்டுக் கத்தின. இந்தச் சந்தர்ப்பத்தில் எனது நண்பர்கள் சிலர் ஒரு மரத்தில் அதியுயர்ந்த இடத்தில் தஞ்சம் புகுந்திருந்தனர். அவர்கள் இது பற்றி விபரித்தபோது ''ஆசிகுளம் அப்போது சுடுகாடு எரிவது போல் எரிந்ததாகவும், தாம் பதுங்கி நின்றபோது 10க்கு மேற்பட்ட இராணுவ வீரர்கள் ஊரின் மத்தியில் உள்ள வீடொன்றில் புகுந்தனர் என்றும், அவ்வாறு புகுந்த வீடு ஒரு பெரிய கல் வீடென்றும், கல் வீட்டுக்கு ஆபத்து வராது என்று எண்ணிய பலர் தமது நெல் மூடைகளை அங்கு பாதுகாப்பிற்காக வைத்திருந்தனர் என்றும், ஏறக்குறைய 250 மூடை நெல் (800 புசல்) அங்கிருந்தது என்றும், அவ் வீட்டை இராணுவ வீரர் அண்மித்தபோது தாம் அவர்களை நோக்கிச் சுட்டதாகவும், அப்போது அவர்கள் பெற்றோல் (Petrol Bombs) அடித்தபோது நெல் மூடைகள் அடுக்கப்பட்ட அப் பெரிய கல்வீடு சுவாலைவிட்டு எரிந்ததாகவும் வர்ணித்தனர். (இப்போதும் இப் பெரிய கல்வீடு எரிந்து அழிந்த நிலையிலேயே காணப்படுகின்றது) 21ம் திகதி காலையில் நாம் எமதூரைச் சென்று பார்த்தபோது 25 வீடுகட்கு மேல் சாம்பலாகி இருந்தன.

வெறிபிடித்த காடையர்களின் அட்டகாசம் ஆசிகுள மக்களின் வரலாற்றில் இடம்பெற்று விட்டது. இப்போது பகைமை வெறி இரு இனங்கட்குமிடையே உருவாகத் தொடங்கிவிட்டது. ஆகஸ்டில் நடந்த அநியாயங்களால் அழிக்கப்பட்ட ஆசிகுளத்தை, ஒவ்வொரு சிங்களவனின் இரத்தமும் சொட்டு சொட்டாய்ப் பிழிந்தெடுத்து, வதை செய்து தமிழ்ஈழம் சமைக்கும்போதே ஈடு செய்ய முடியும். அந்த நாள் வெகு தூரத்திலில்லை என்பதை ஆசிகுள மக்கள் மட்டுமல்ல, உலகிலுள்ள ஒவ்வொரு தமிழனும் உணர்ந்துவிட்டான்;

வாழ்க தமிழ் ஈழம்.

# குறள் என்ன கூறும்?

''விருந்து புறத்தாத் தான் உண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று''

பரிமேலழகர்: 'சாவா மருந்தெனினும் விருந்து புறத்தாத் தான் உண்டல் வேண்டற்பாற்றன்று' என்று எடுத்து, உண்ணப்படும் பொருள் அமுதமே ஆயினும் தன்னை நோக்கி வந்த விருந்து தனது இல்லின் புறத்தாகத் தானே உண்டல் நன்றன்று என்றும்,

பரிதியார்: 'விருந்து புறத்தாத் தான் உண்டல் சாவா(ம்). மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று' என்று எடுத்து, விருந்து புறத்திலேயிருக்க தான் உண்பது நன்றன்று. நஞ்சாகிலும் விருந்தோடு புசிப்பது நன்று என்றும் கூறுகின்றனர்.

ஒருவர் அமுதமாயினும் கொடுத்துச் சாப்பிடு என்றும், மற்றவர் நஞ்சேயாயினும் கொடுத்துச் சாப்பிடு என்றும் கூறுகின்றனர். வழக்கமாகப் பரிமேலழகரின் உரையையே நாம் ஏற்றுக்கொள்கிறோம். அத்துடன் அது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் இங்கு பரிதியாரின் உரையே சிறந்ததுபோல் தோன்றுகிறது. அதாவது நஞ்சேயாயினும் விருந்துடன் உண் என்னும்போது, எல்லாவற்றையுமே விருந்தோடு சாப்பிடு என்பது தெளிவாகின்றது; அறிவுறுத்தப்படுகின்றது. ஔவையார் கூட ''மருந்தே யாயினும் விருந்தோடுண்'' என்றுதான் சொல்லியிருக்கிறார். இனி உங்கள் சிந்தனைக்கு.

* * *

அதிர்ஷ்டம் என்பது சோம்பேறித் தனத்தின் சின்னம்.

# நம் நாட்டின் சில முக்கிய நாட்கள்

கி. மு. 3ம் நூற்றுண்டைச் சேர்ந்த, பொம்பரிப்பு, புத்தளம், காரைதீவு ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட பித்தளை, செம்பு மட்பாண்டங்கள் கி. மு. 3ம் நூற்றுண்டிற்கு மூன்பே இங்கு தமிழர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கு ஆதாரமாகும்.

கி. மு. 3ம், 2ம் நூற்றுண்டின் காலகட்டத்தைச் சேர்ந்த ஒரு கல்வெட்டு அநுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் 6 தமிழர்களின் பெயர்கள் காணப்பட்டன.

அத்துடன் வவுனியாவில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு கல்வெட்டுக்களில் பிராமி எழுத்தில் 'விசாக என்ற தமிழ் வணிகன்' இங்கு இருந்தது பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது.

கி. மு. 237 சேன, குட்டிக என்ற இரு தமிழ் இளைஞர்கள் சுரத்திஸ்ஸ என்ற சிங்கள அரசனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினர்.

கி. மு. 161 தமிழ் மன்னன் எல்லாளன் அநுராத புரத்தைத் தலைநகராகக் கொண்டு இலங்கை முழுவதையும் ஆட்சி செய்தான்.

கி. மு. 117 சிங்களச் சிற்றரசன் துட்டகைமுனு தனிச்சமரில் எல்லாளனை வென்முன். இதனுல் அநுராதபுரத்தில் சிங்கள அரசு எழுந்தது.

கி. மு. 103 பாண்டிய மன்னனின் உதவியுடன் தமிழர் ஆட்சி தமிழ் ஈழத்தில் அமைக்கப்பட்டது.

கி. பி. 404 7 தமிழ் தலைவர்கள் பாண்டிய நாட்டிலிருந்து வந்து நகுலன் என்ற ஈழத் தமிழ் அரசனின் உதவியோடு 1ம் துட்டகாமினியை வீழ்த்தி தமிழ் இராச்சியம் ஒன்றை நிறுவினர்.

436 பாண்டு, பறிந்து, குட்டப் பறிந்து ஆகிய தமிழர்கள் அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்தனர்.

993 இராஜ இராஜ சோழனின் படைகள் இலங்கை மீது படையெடுத்தன, அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்ட சிங்கள மன்னனைத் தோற்கடித்தன. ஜனநாதமங்களத்தை (பொலநறுவையை)த் தலைநகராகக் கொண்டு ஆட்சி நடாத்தினர். இவ் வேளையிலும் தீவின் தென் பகுதியை 5ம் மகிந்தன் ஆட்சி செய்தான்.

1017 இராஜஇராஜசோழனின் மகனுன இராசேந்திரனின் சோழப்படைகள் 5ம் மகிந்தனை தோற்கடித்தன. இதன்பின் தீவு முழுவதும் தமிழர் ஆட்சி இருந்தது.

1070 1ம் விஜயபாகு சோழரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றினுன். இக்காலத்திலும், தலைநகரம், ஏனைய நகரங்கள், ஊர்கள், சந்தைகள் என்பன தமிழர் வசம் இருந்தது.

1215 மாகன் என்பவன் தமிழ்நாட்டு, மலையாளப் படை வீரர்களைக் கொண்டு பொலநறுவை அரசை வீழ்த்தினன்.

1255 பாண்டியரின் உதவியுடன் சந்திரபானு என்பவன் மாகனின் ஆட்சியை முறியடித்தான்.

1282 ஆரியச் சக்கரவர்த்திகள் தமிழ் ஈழ மன்னர்களானார்கள். ஆரியச் சக்கரவர்த்திகள் பரம்பரையைச் சேர்ந்த கடைசி மன்னன்தான் சங்கிலி.

செப். 1618 சங்கிலி மன்னனின் தமிழ் ஈழ அரசை எதிர்த்துப் போத்துக்கேயப் பாதிரியார் பீதுறு பொட்டன் கொன் தலைமையில் உள்நாட்டுக் கலவரம் ஏற்பட்டது.

ஜூன். 1619 சங்கிலி மன்னன் சிறை பிடிக்கப்பட்டான். தமிழ் ஈழம் அடிமை நாடாகியது. தமிழ் ஈழத்தின் இறைமை போத்துக்கேயரை சென்றடைந்தது.

1656 சிங்கள அரசுகள் போத்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டது.

1658 தமிழ் ஈழம் போத்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டது.
இப்பொழுது தீவு முழுவதும் ஒல்லாந்தர் வசம் இருந்தது.

1795 பிரிட்டிஷ் படைகள் ஒல்லாந்தரிடமிருந்து திருகோணமலையைக் கைப்பற்றினர். படிப்படியாக ஏனைய இடங்கள் கைப்பற்றப்பட்டன.

1815 கண்டி அரசு கைப்பற்றப்பட்டது.

இப்போது தீவு முழுவதும் பிரிட்டிஷாரின் ஆட்சிக்குள் அமைந்தது. எனினும் தமிழ் நிலப் பகுதிகளில் தனியாகவே ஆட்சிசெலுத்தப்பட்டது.

1833 ஈழத் தமிழரின் தனியான நிலப்பகுதி பலவந்தமாகச் சிங்களவரின் வாழ்விடங்களுடன் இணைக்கப்பட்டது.

1944 ஆங்கிலத்தின் இடத்தில் 'சிங்களம்' ஆட்சி மொழியாக அமரவேண்டுமென்று அரசாங்க சபையில் திரு. J. R. ஜெயவர்த்தன முன்மொழிந்தார். 'சிங்களமும் தமிழும்' எனத் திருத்தப்பட்டு இத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

(பாராளுமன்றம் அமைக்கப்படுமுன் அரசாங்க சபை என்ற அமைப்பு இருந்தது. 1948 இல் ஆட்சிப் பொறுப்பு இலங்கையிடம் கையளிக்கப்பட்ட போது ஆட்சிமொழி பற்றிக் குறிப்பிடாததால் ஆங்கிலமே ஆட்சி மொழியாகத் தொடர்ந்தது.)

நவ. 1944 அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி அமைக்கப்பட்டது.

27 நவ. 1944 அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் 1-வது மாநாடு கொழும்பு நகர மண்டபத்தில் நடைபெற்றது. இதில் தலைமையுரை ஆற்றிய திரு. G. G. பொன்னம்பலம் '' ... தமிழர்கள்தான் இத் தீவின் ஆதிக்குடிகள் ... '' என்று ஆதாரத்துடன் கூறினர்.

9 ஒக். 1945 இலங்கைத் தமிழர்களுக்குப் பாதகமான, ஒற்றையாட்சி அரசைச் சோல்பரி ஆணைக்குழு விதந்துரைத்தது.

11 நவ. 1947 இலங்கை அரசாலும், பிரிட்டிஷ் அரசாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலங்கை அரசியலமைப்பு விதிகளைக் கூறும் ஒப்பந்தம் இலங்கை அரசியல் தலைவர்களினாலும், பிரிட்டிஷ் அரசினாலும் கையெழுத்திடப்பட்டது. இலங்கையின் சார்பில் திரு. D. S. சேனநாயக்கா கையெழுத்திட்டார்.

4 பெப். 1948 இலங்கை அரசிடம், பிரிட்டிஷ் அரசு இலங்கைக்கான முழுமையான ஆட்சிப் பொறுப்பைக் கையளித்தது. ஆனால் இலங்கையின் ஆட்சியுரிமையும், இறைமையும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தினூடாகப் பிரிட்டிஷ் மன்னரிடம் தொடர்ந்து இருந்தது.

டிச. 1948 இந்திய, பாகிஸ்தானிய குடியிருப்பாளர் (குடியுரிமைச்) சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது இலங்கை வாழ் தமிழர்களில் ⅓ பங்கினரை நாடற்றவர்களாக்கியது. தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்த ஒரே பாவத்திற்காக இவர்கள் வாக்குரிமை, நாட்டுரிமை, குடியுரிமை, ஆட்சியுரிமை அனைத்தையும் இழந்தனர். அப்போது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. G .G பொன்னம்பலம் அவர்களின் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. S J. V. செல்வநாயகம், இச் சட்டத்திற்கு எதிராக வாக்களித்தார். கட்சியிலிருந்து விலகினார்.

1949 தமிழரசுக் கட்சி தொடங்கப்பட்டது.

18 டிச. 1949. கொழும்பு அரசாங்க எழுது வினைஞர் சேவைச் சங்கத்தின் மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் 1-வது மாநாட்டில் தலைமையுரை நிகழ்த்திய திரு S. J. V. செல்வநாயகம் அவர்கள் "...... பல நூற்றூண்டுகளாக இருந்த (தமிழ் அரசு, சிங்கள அரசு என்னும்) இரு நாடுகள் பிரிட்டிஷாரினால் இணைக்கப்பட்டன. இவை இயற்கையாக ஒன்றிணையவில்லை......" என்று குறிப்பிட்டார்.

1951 ஆட்சியில் அமர்ந்திருந்த ஐக். தேசியக் கட்சியின் அமைச்சராக இருந்த திரு. S. W. R. D. பண்டாரநாயக்கா, சிங்களத்தையும், தமிழையும் ஆட்சி மொழியாக்காது ஐ. தே. க. இனது ஆட்சி காலத்தைக் கடத்துகிறது எனக் குற்றஞ் சாட்டி அக்கட்சியிலிருந்து விலகினார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைத் (சு. க.) தொடங்கினார். சிங்களமும், தமிழும் ஆட்சி மொழிகளாக்கப்படும் என்று கொள்கை வகுத்தார்.

1954 இலங்கையின் பிரதமராக இருந்த சேர். ஜோன். கொத்தலாவல கொக்குவில் இந்துக் கல்லூரியில் உரையாற்றுகையில், "...சிங்களத்திற்கும் தமிழிற்கும் சம உரிமை வழங்கி ஆட்சி மொழிகளாக்கப்படும்...' என்று உறுதியளித்தார்.

1955 சு. க. சிங்களத்தை மட்டும் ஆட்சி மொழியாக்கவேண்டும் என கொள்கை வகுத்தது.

1956 களனி மாநாட்டில் ஐ. தே. க. சிங்களத்தை மட்டும் ஆட்சி மொழியாக்கவேண்டும் என்று தீர்மானித்தது. திரு. S. W. R. D. பண்டாரநாயக்கா பிரதமரானார்.

5 ஜூன் 1956 ''சிங்களம் மட்டும் ஆட்சி மொழியாகும்'' என்ற சட்டமூலம் பாராளு மன்றத்தில் முன்வைக்கப்பட்டது. இந் நாளன்று தமிழ்த் தலைவர் களும், தமிழர்களும் காலிமுகத் திடலில் அறப்போர் நிகழ்த்தினர். உண்ணாவிரதம் இருந்தனர். சிங்களக் காடையர்களினால் தாக்கப்பட் டனர். இதைத் தொடர்ந்து நாடெங்கிலும் சத்தியாக்கிரகங்கள் நடை பெற்றன.

14 ஜூன் 1956 'சிங்களம் மட்டும்' சட்டமூலம் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் கட்சி வேறுபாடின்றி எதிர்த்து வாக்களித்தனர். இரு முஸ்லிம் உறுப்பினர்களைத் தவிர ஏனைய முஸ்லிம் உறுப்பினர்கள் யாவரும் எதிர்த்து வாக்களித்தனர்.

(இதன் பின் தமிழர்கட்கும் சிங்களவர்கட்குமிடையே, கசப்புணர்வு ஏற்படத் தொடங்கியது. சிங்கள - தமிழ் உறவுகள் மோசமடைவதை விரும்பாத திரு. பண்டாரநாயக்கா தமிழரசுக் கட்சியினரைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்தார். இதனால் பண்டாரநாயக்கா — செல்வநாய கம் ஒப்பந்தம் எழுந்தது. இதன் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங் களைத் தமிழர்களே ஆட்சி செய்யும் மாநில அவைகட்கு இடமளிக்கப் பட்டது. இதை ஐ. தே. க. உம். பௌத்த பிக்குகளும் கடுமையாக எதிர்த்தனர். ஒப்பந்தம் கைவிடப்பட்டதாக திரு. பண்டாரநாயக்கா அறிவித்தார்.)

1957 இலங்கை குடியரசாக மாற வேண்டும்; அதற்கேற்ப அரசியல் அமைப்பு மாறவேண்டும்; என்று விரும்பிய திரு. பண்டாரநாயக்கா, இதற்காகப் பாராளுமன்றத் 'தெரிவுக் குழு' ஒன்றை அமைத்தார். (திரு. பண்டார நாயக்கா சுட்டுக் கொல்லப்பட்டதும் இக் குழுவின் நடவடிக்கைகள் ஓய்ந்து போயின.)

1958 வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு கிழக் கிலிருந்து சென்றோர் பொலனறுவையில் தாக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து தீவு எங்கிலும் சிங்கள - தமிழ் கலவரம் ஏற்பட்டது.

1965 திரு. டட்லி சேனநாயக்காவின் தலைமையில் அமைக்கப்பட்ட அரசு மேற்கூறிய 'தெரிவுக் குழு'வை மீளமைக்க முயற்சித்தது. ஆனால் அப் போது எதிர்க் கட்சியிலிருந்தோர் ஆதரவு அளிக்கவில்லை.

1968 சுயாட்சிக் கழகம் ஆரம்பம்.

1969 ஈழத் தமிழ் இளைஞர் இயக்கம் உதயமானது.

1970 ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கை சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டு முன்னணி ஆட்சிக்கு வந்தது.

19 ஜூலை 1970 கொழும்பு ரோயல் கனிஷ்ட பாடசாலையின் அரங்கமான 'நவரங்கலா' வில் வைத்து அரசியலமைப்பு யாக்க அவையை திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் கூட்டப்பட்ட 'சனப் பிரதிநிதிகள் கூடும் கூட்டம்' உருவாக்கியது.

செப். 1970 பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் முதன் முதலாக அமுலாக் கப்பட்டது.

டிச. 1970 மாணவர் பேரவையின் தோற்றம். தரப்படுத்தலை எதிர்த்து மாணவர் பேரவையினர் ஊர்வலம் ஒன்றை நடாத்தினர்.

பெப். 1971 பிரதி மந்திரி சோமசேகர சந்திரசிறியினது காருக்கு வெடிகுண்டு வைக்கப்பட்டது. இதுவே தமிழ் ஈழத்தின் 1 வது பலாத்காரச் சம்பவமாகும்.

இதைத் தொடர்ந்து துரையப்பாவின் காருக்கும் வெடிகுண்டு வைக்கப்பட்டது.

7. பெப். 1971 இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி, தமிழர் சுயாட்சிக் சழகம் ஆகிய நான்கு கட்சிகளும் வல்வெட்டித் துறையில் கூடி அரசியல் யாப்பு அவையில் முன் வைக்க ஒன்பது கோரிக்கைகளை உருவாக்கின.

15. மார். 1971 புதிய அரசியலமைப்புப் பற்றிய 1-வது அடிப்படைத் திர்மானம் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் முன்மொழியப்பட்டது.

28. மார், 1971 3-வது அடிப்படைத் தீர்மானம் திரு. T. R. இலங்கரத்தினவால் முன் மொழியப்பட்டது. இதில் ''......பௌத்த மதத்தைப் பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாதல் வேண்டும்.'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

5. ஏப். 1971 ரோகண விஜேவீரவின் தலைமையிலான சிங்கள இளைஞர்களின் கிளர்ச்சி ஆரம்பமானது. இது தமிழ் இளைஞர்களின் ஒரு மாறுன சிந்தனைக்கு வழி வகுத்தது.

24 ஜூன் 1971 11-வது அடிப்படைக் தீர்மானம் முன் மொழியப்பட்டது. இதில், ''எல்லாச் சட்டங்களும் சிங்கள மொழியில் சட்டமாக்கப்பட வேண்டும்......'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

(அடிப்படைத் தீர்யானங்கள் முன் மொழியப்படும்போது கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் யாவும் தோற்கடிக்கப்பட்டன. திருத்தத்திற்கு எதிராகவும் அடிப்படைத் தீர்மானத்திற்கு ஆதரவாகவும் வாக்களித்தோரில், திரு. S. அருளம்பலம், திரு. M K. சுப்பிரமணியம், திரு. A. தியாகராஜா ஆகியோரும் அடங்குவர்.)

28 ஜூன் 1971 தமிழரசு கட்சி அரசியலமைப்பு யாக்க அவையைப் பகிஷ்கரித்தது.

டிச. 1971 வங்காள தேச விடுதலை. இது தமிழர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. தனி நாட்டு உணர்வை மேலும் தூண்டியது.

ஜன. 1972 தமிழரசுக் கட்சியின் சிறப்பு மாநாடு. முதன் முதலாக அரசியல் வாதிகள் தனிநாட்டுக் கோஷத்தை முன் வைத்தது.

17. மே 1972 தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் தலைவர்கள் கூடி தமிழர் கூட்டணி என்னும் அமைப்பை உருவாக்கினர். இது பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி (த. வி. கூ.) யாக மாறியது.

22. மே. 1972. புதிய அரசியலமைப்பு பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது: தமிழ்ப் பிரதேசம் எங்கும் பூரண ஹர்த்தால். இது சம்பந்தமாக 72 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

25. மே, 1972. யாழ்ப்பாணத்தில் பொது மக்களின் முன் கூடிய த. வி. கூ. புதிய அரசியலமைப்பின் படி ஒன்றை எடுத்துத் தீயிலிட்டது.

25. ஜூன் 1972. த. வி, கூ. 6 அம்சக் கோரிக்கைத் தீர்மானத்தை நிறைவேற்றியது.

3. ஒக். 1972. திரு. S. A. V. செல்வநாயகம் அவர்கள் தனது தேசிய அரசுப் பேரவை (தே. அ, பே.) உறுப்புரிமையைத் துறந்தார்.

28.ஜன.1973. தமிழ் இளைஞர் பேரவை ஆரம்பமானது.

22.பெப்.1973. மாணவர் பேரவைத் தலைவர் கைது செய்யப்பட்டார்.

9. மார். 1973. மாணவர் பேரவையைச் சேர்ந்த 40 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

14.மார்.1973. இவற்றையெல்லாம் எதிர்த்து மாணவர்கள் பாடசாலைகளைப் பகிஷ்கரித்தனர். த. வி. கூ. உண்ணு விரதம் மேற்கொண்டது.

20.மே.1973. மருதனுமடத்திலிருந்து தமிழ் இளைஞர் பேரவை (த. இ. பே.) ஒரு சட்டமறுப்பு ஊர்வலத்தை நடாத்தியது.

11செப்.1973. த. இ பே. 5 நாள் உண்ணு விரதத்தை மேற்கொண்டது.

10.ஜன,1973. 4-ம் அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாடு யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

இதில் ஏற்பட்ட பொலிஸ் தாக்குதலினுல் 9 இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள்.

5.ஜூன் 1974, சிவகுமாரன் உயிர் துறந்தது. இதற்குப் பொலிஸ் அட்டூழியமே காரணம் எனலாம்.

4.ஒக். 1974. ஸ்ரீமாவோ யாழ். விஜயம். இதை எதிர்த்து இளைஞர்கள் 'ஸ்ரீமா எதிர்ப்பு ஊர்வலம்' நடாத்தினர்.

6.ஒக். 1974. யாழ். வளாகம் திறக்கப்பட்டது.

(4. 5. 6. ஆகிய மூன்று தினங்களும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.)

10.ஜன.1975. தமிழாராச்சி மாநாட்டில் உயிரிழந்தோருக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது.
(இது சில வெறியர்களால் உடைக்கப்பட்ட நிலையில் உள்ளது.)

6. பெப்.1975. அதிக காலமாகப் பின் போடப்பட்ட காங்கேசன்துறை இடைத் தேர்தல் நடந்தேறியது.

22 மே.1975. குடியரசு தினத்தை முன்னிட்டு த, வி. கூ. உம், த. இ. பே. உம் சட்ட மறுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டன.

5 ஜூன் 1975 சிவகுமாரனுக்கு சிலை எழுப்பப்பட்டது.

7 ஜூன் 1975 த. இ. பே., த. வி கூ. இன் அங்கமாக மாறியது.

14 ஜூன் 1975 தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ஆரம்பமானது.

27 ஜூலை 1975 துரையப்பா கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

1976 புத்தளத்தில் சிங்கள-மூஸ்லீம் கலவரம் ஆரம்பமானது.

4 பெப். 1976 பாராளுமன்றத்தில் முதன் முதலாகத் தமிழ் ஈழப் பிரேரணையை த. வி. கூ. கொண்டு வந்தது.

14 மே 1976 த. வி. கூ. இன் 1-வது மாநாடு வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பண்ணாகம் என்ற இடத்தில் கூடியது. இங்கு தீர்மானிக்கப்பட்டதே வட்டுக் கோட்டைத் தீர்மானமாகும்.

22 மே 1976 குடியரசு தினமான இன்று தனித் தமிழ் ஈழம் அமைக்கக் கோரும் துண்டுப் பிரசுரங்களை த. வி. கூ இனர் மக்களுக்கு வழங்கினர். ஒரு சில தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

18 ஜூன் 1976 கைது செய்யப்பட்ட த. வி. கூ. தலைவர்கள் 'இராஜத் துரோகம்' செய்ததாக குற்றஞ் சாட்டி ட்ரயல் அட்பார் முறையில் வழக்கு விசாரிக்கப்பட்டது.

5 ஓக. 1976 கூட்டுச் சேரா நாடுகளின் மாநாடு (இலங்கையில்) ஆரம்பம். சிறையிலே உள்ள இளைஞர்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.

இக் காலகட்டத்தில் செம்மணியில் பரராசா என்னும் இளைஞன் அநியாயமாசப் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானான். இது தமிழர்களிடையே பொலிசார்மீது ஒரு வெறுப்புணர்வை ஏற்படுத்தியது.

22 நவ. 1976 திரு. மு. திருச்செல்வம் Q. C. அவர்கள் காலமானார்.

8 பெப். 1977 திரு. G. G. பொன்னம்பலம் அவர்கள் காலமானார்.

27 ஏப். 1977 திரு. S. J. V. செல்வநாயகம் அவர்கள் காலமானார்.

3 ஜூன் 1977 திரு. S. J. V. செல்வநாயகம் அவர்களின் அஸ்தி திருமலைக்குக் கொண்டு செல்லும்போது ஏற்பட்ட கலவரம் சிங்கள - தமிழ்க் கலவரமாக மாறியது. இது சில தினங்களில் ஓய்ந்துவிட்டதால் மற்ற இடங்களுக்கும் பரவவில்லை.

21 யூலை 1977 தேசிய அரசுப் பேரவைக்கான தேர்தல் நடைபெற்றது. முதன் முதலாக த. வி. கூ. தேர்தலில் போட்டியிட்டு பிரதம எதிர்க்கட்சியாக வந்தது.

16 ஓக. 1977 சிங்கள - தமிழ்க் கலவரத்தின் ஆரம்பமாக தரைப்படையினரும் பொலிசாரும் (எனச் சாட்சியங்கள் கூறுகின்றன.) யாழ் நகரின் பஸ் நிலையத்தை அடுத்துள்ள தமிழ்க் கடைகளை தீக்கிரையாக்கினர். இது தீவின் பல இடங்களிலும் சிங்கள - தமிழ்க் கலவரமாக விஸ்வரூபம் எடுத்தது.

உசாத்துணை: மு. திருச்செல்வம்; ஈழத் தமிழர் இறைமை:

J. சின்னத்தம்பி, திருமதி இரா. சச்சிதானந்தன் (தமிழில்); தமிழ் ஈழம் நாட்டு எல்லைகள்.

W. L. ஜெயசிங்கம்; இலங்கையின் அரசியலும், அரசியல் கட்சிகளும்.

மகாவம்சம்:

4-ம் அனைத்துலக தமிழாராய்ச்சி நினைவுமலர் ஆராய்ச்சிக் கட்டுரை;

Paranavithana; Inscriptions of Ceylon Volume I

Dr. S. Pathmanathan; The Tamils in Ceylon.

Paranavithana; Concise history of Ceylon.

*1970-ஆம் ஆண்டிற்குப் பின்பான நிகழ்ச்சிகள் சேகரிப்பில் பேருதவி புரிந்த யாழ் - பல்கலைக்கழக மாணவன் திரு. வரதராஜப்பெருமாள் அவர்களுக்கு எனது நன்றிகள்.*

—ஆ—ர்.

## துவேஷம்

*ஒருநாள் தீசன், காமினி ஆகியோரின் தந்தை ஒரு தட்டில் உணவை எடுத்து மூன்றாகப் பிரித்து, 1-வது பகுதியைக் காட்டி, ''பிக்குகளுக்கு மாறாக என்றுமே நடக்கமாட்டோம் என்று சொல்லிச் சாப்பிடுங்கள்'' என்றார். இருவரும் சாப்பிட்டனர். 2-வது பகுதியைக் காட்டி ''நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் விரோதம் கொள்ளமாட்டோம் என்று சொல்லிச் சாப்பிடுங்கள்' என்றார். இருவரும் சாப்பிட்டனர். 3-வது பகுதியைக் காட்டி ''தமிழர்களுடன் எப்போதுமே போரிடமாட்டோம் என்று சொல்லிச் சாப்பிடுங்கள்.'' என்றார். உடனே தீசன், உணவைத் தன் கையினால் தட்டிவிட்டான், காமினி அதை எடுத்துத் தூர எறிந்தான்,*

ஆதாரம்—மகாவம்சம்

## பாரதியர் பெண் அடிமையைச் சாடினாரா?

"... ... ... ...
ஊரவர்தம் கீழ்மை உரைக்குந் தரமோ
வீரமிலா நாய்கள் விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே
பொன்னை அவள் அந்தப் புரத்தினிலே சேர்க்காமல்
நெட்டை மரங்களென நின்று புலம்பினார்
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ"

— *பாரதி.*

சகல விதமான கிறில் கல்லுகளும்
ஓடருக்குக் குறித்த தவணையில்
பெற்றுக்கொள்ளலாம்.

## ஆனந்தசிறி கிறில் வேக்ஸ்

கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையம்

திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

சகல விதமான
பலசரக்குச் சாமான்களும்
பாடசாலை உபகரணங்களும்

நியாய விலையிற் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

## ஓடியன் ஸ்ரோர்ஸ்

வளாகச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## M. P. சின்னராசா

78, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

எங்களிடம்

- A. S. ஆறுமுகம் செட்டியார் கொழும்புப்பொடி
- M.P.S. திறச் ஸ்பெஷல் சுருட்டுக்கள்
- M.P.S. திறம் சற்குண பீடி
- M.P.S. திறம் ஸ்பெஷல் நீலம்
- M.P.S. திறம் அசோகா பாக்குத்தூள்
- M.P.S. திறம் நல்லெண்ணெய்
- M.P.S. திறம் வெற்றிலைக் கூட்டுத் தூள்

என்பன பெற்றுக்கொள்ளலாம்.

கிளை; **வசந்தாஸ்**
13, பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு:

## மேக்குரி கல்வி நிலையம்

நெல்லியடி,
கரவெட்டி.

# செட்டி கோப் பப்படம்

செட்டிகுளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உற்பத்தி.

தூய்மையான கலப்பற்ற திறம் உழுந்தினுல் தயாரிக்கப்பட்ட
சுத்தமான பப்படம்.

— இன்றே வாங்குங்கள் —

உற்பத்தியாளர் :

**வெங்கல செட்டிகுளம் ப. கூ. சங்கம்**

செட்டிகுளம்.

அன்பளிப்பு :

## ஆனந்தா ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி,
செட்டிகுளம்.

சகல விதமான
கார் உதிரிப்பாகங்களுக்கும்
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.

## யாழ். சென்றல் மோட்டோர்ஸ்

உரிமை : S. மகேந்திரன்

98 B. பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

---

விவசாயிகளின் நினைவிலிருக்கவேண்டிய ஸ்தாபனம்

# லக்கி டிரேடர்ஸ்


உரிமை : பாலா & சுதா

செட்டிகுளம் பகுதி விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு
எந்த நேரமும் காத்திருக்கின்றோம்.

நவதானியங்கள், இரசாயன கிருமி நாசினிகள்
எதற்கும் எம்மை நாடுங்கள்.

**பிரதான வீதி, — செட்டிகுளம்.**

## ரமணி கோப்பறேசன்



Specialist in
**Radio, Watches**

**70, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தரமான
செருப்பு, சப்பாத்து வகைகளுக்கு



## THE NEW FOOT EMPORIUM

**47, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**Calling !**

All Wholesale Distributors.

We are prepared to buy and sell locally produced items like

- Rice
- Paddy
- Coconut
- Thamarind
- Cow-pea

and

- Gingelly

## New Central Stores

**Hunugama,**
**Bandarakoswatta,**
**KURUNEGALA.**

## THE MALAYAN TRADING COMPANY

(சிங்கப்பூர் கம்பனி)

General Hardware, Brassware,
Paint Merchants.

128, 130, K. K. S. Road,
JAFFNA.

☎ 547

# கலையும், கலைஞர் உள்ளமும்

— மு. உமாகாந்தன் —
நுண்கலைப்பிரிவு.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், பண்புக்கும், நாகரீகத்திற்கும் அளவுகோலாயிருப்பது அந் நாட்டின் கலை வளர்ச்சியாகும். ஒரு நாடானது பல வளங்களாலும் நிறைந்து செழிப்பாக இருந்தால்தான் அதில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரமானது உயர்வடையும். மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வடைந்தால்தான் நாகரீகமானது வளர்ச்சியுறும். நாகரீகம் வளர்ச்சியுறுதல் மட்டுமன்றி, மன அமைதி தரும் ஒரு இன்பமான சூழ்நிலையையும் நாகரீக மக்கள் விரும்புகின்றார்கள். இதைத் தாம் நாம் சமுதாய கலை கலாச்சார வாழ்வு என்கின்றோம். இவ்வாறு கலைகளும் இலக்கியங்களுமே சமுதாயத்தின் இரு கண்களாகும். மனிதனால் படைக்கப்படும் இவை இரண்டும் அவன் சிந்தனையை உயர்த்தி, மனத்தை வளப்படுத்தி, பண்புள்ளவனாக்கி, சூழ்நிலையைத் தூய்மையாக்கி சமுதாயத்தின் அமைதிக்கும், நாகரீக முன்னேற்றத்திற்கும் அடிகோலுகின்றன. இலக்கிய ரஸனையும், கலையார்வமும் மனித குலத்தை இணைப்பதால்தான் இலக்கிய மேதைகளும், கலை விற்பன்னர்களும் ஒரு நாட்டின் கலாச்சாரத் தூதுவர்களாக மதிக்கப்படுகின்றார்கள். இந் நிலையில் கலைகளையும், அவற்றை உருவாக்கித் தரும் கலைஞர்களையும், கலைகளின் இன்றைய நிலை பற்றியும் நாம் சிறிது அவதானத்திற் கொள்வோம்.

மனிதனது மனத்தின் இயல்புகள், உணர்வுகள், ஆசைகள் என்பவற்றினோடு அவனது ஆக்க சக்தியால் படைக்கப்படுவது கலைகள் எனப்படும். இதனைச் சிறிது விரிவாக நாம் நோக்கலாம். மனிதனிடம் அமைந்துள்ள பல்வேறு இயல்புகளுள் ஆக்க சக்தியும் ஒன்று. இந்த ஆக்க சக்தியோடு கற்பனையும், அதன் பாற்பட்ட உணர்ச்சிகளும் சேரும்போது ஒரு புதிய செயல் உருவாகின்றது. அச் செயலின் தோற்றத்திலும், அத தோற்றத்திற்குரிய முயற்சியிலும் ஒரு மகிழ்ச்சி உண்டாகின்றது. இந்த மகிழ்ச்சிதான் மற்றவருக்குப் பகிர்கின்றபோது கலையாக உருவகிக்கின்றது. இதனைப் படைப்பவன் கலைஞன் என அழைக்கப்படுகின்றான்.

இப்படியாக உருவாகும் கலைகள் அறுபத்திநான்கு எனச் சான்றோர் உரைக்கின்றனர். ''ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என் அம்மை...'' என்பது இதற்குச் சான்று பகருகின்றது. மேலும் இக் கலைகளை சாதாரண கலைகள், நுண்கலைகள் என இரு பிரிவுக்குள் அடக்கலாம். நுண் கலைகளெனப்படுவது நுண்ணிய உணர்வுகளுடன் நம்மைப் பரவசப்படுத்தும் தன்மைவாய்ந்த கலைகளாகும். இசைக் கலை, கவிதைக் கலை, ஓவியக் கலை, சிற்பக் கலை, நாட்டியக் கலை, நாடகக் கலை போன்றவை நுண்கலைகளுக்கு உதாரணமாகும். நுண்கலைகள் கலைஞனால் படைக்கப்பட்டுப் பின் அதனை ஒரு ஒழுங்கு ரீதியான வரையறைக்குட்படுத்தப்படுகின்றன. ஆனால் சாதாரண கலைகள் அநேகமாக வரையறுக்கப்பட்டு ஒழுங்கு முறையோடு படைக்கப்படுவனவாகும். சாதாரண கலைகளுக்கு உதாரணமாக சமையற்கலை, தையற்கலை போன்றவற்றைக் கூறலாம். பொதுவாக நாம் கலைகளெனக் கூறிக்கொள்வது நுண்கலைகளையேயாகும். மேலும் இந் நுண்கலைகளை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று கண்பொறிவழி அனுபவிக்கப்படுவது. மற்றையது செவிப்பொறிவழி அனுபவிக்கப்படுவது. கட்டடம், சிற்பம், ஓவியம் போன்ற கலைகள் கண்பொறிவழி அனுபவிக்கப்படும் கலைகளுக்கு உதாரணமாகும். இசைககலை, கவிதைக்கலை என்பன இரண்டாவது கூறிய முறையில் அனுபவிக்கப்படுவதற்கு உதாரணமாகும். நாடகம், நாட்டியம் போன்ற கூட்டுக் கலைகள் இரண்டு பொறிவழிகளாலும் அனுபவிக்கப்படுவதாகும்.

இன்று எமது ஈழநாட்டில் கலைகள் மிகவும் விரைவாக முன்னேறி வளர்ச்சி

யடைந்து கொண்டு வருகின்றன. வளர்ச்சி யடைந்து வரும் கலைகளில் இசை, நாட்டியம், நாடகம், ஓவியம் போன்றவை முக்கியம் பெற்று வருகின்ற கலைகளாகும். எமது அண்டை நாடாகிய இந்தியாவின் தென் பகுதியில் இக் கலைகளின் நிலையினை நாம் நோக்கும் பொழுது, அவை ஓரளவிற்கு மேல் குறிக்கப்பட்ட கலைகளில் விஷேச வளர்ச்சி பெற்றிருக்கின்றன. இக் கலைகள் வளர்வதற்கு இக் கலைகளைப் படைக்கும் கலைஞர்களின் மனோபாவங்கள் எப்படி அமையவேண்டுமென ஓரளவு நாம் அறிந்து கொள்ளவேண்டும். இங்ஙனம் அறிந்து கொள்வதினால் எமது கலைஞர்களை நாம் ஊக்குவித்து ஆக்க வழிகளில் அவர்களைப் பயன்படுத்தவும் ஏதுவாக இருக்கும்.

மனித மனம் அகமனம், புறமனம் என இருவகைப்படும். இவை இரண்டிற்குமிடையேயுள்ள வேறுபாட்டை ஒரு சிறு உதாரணத்தைக் கொண்டு விளக்கலாம். தாவர நூல் வலலோன் ஒருவன் முல்லைப்பூவொன்றை நோக்குவதாக வைத்துக் கொள்வோம். அவன் அதனுடைய புற இதழ், உள் இதழ், காம்பு, மகரந்தம், நிறம், வாசனை போன்றவற்றை மட்டுமே நோக்குகின்றான். அதற்கப்பால் அவன் செய்வதில்லை. அந்தப் பூவைத்தான் வகுத்துள்ள தாவரக் குடும்பங்களில் எந்தக் குடும்பத்தைச் சார்ந்தது என்பதைப் பற்றி ஆராய்ந்து அந்த வகுப்பினுள் அவன் அடக்குகின்றான். அதே பூவை ஒரு கவிஞன் நோக்குகின்றான் என வைத்துக்கொள்வோம். உடனே அவனுடைய கற்பனை தன் தொழிலை ஆரம்பிக்கின்றது. முல்லை பூக்கும் காலம் உடனே நினைவுக்கு வருகின்றது. கற்பனை தொடங்கியவுடன் உணர்ச்சிகளுக்கு வேலை கிடைக்கின்றது. தன்னை ஒரு தலைவியாகவும், தன் தலைவன் பிரிந்து சென்றுள்ளார் அவன் கார் காலத்தே திரும்பி வருவதாகக் கூறிச்சென்றான். இதோ முல்லை பூத்துவிட்டது. இன்னும் காணோமே என்று கற்பனை செய்கின்றான். உடனே அவனுக்கு கவிதை பிறக்கின்றது. இங்கு இருவருடைய நோக்கங்களும் வேறுபட்டிருப்பதைக் காண முடிகிறது. தாவரநூல் வல்லோன் முல்லைப் பூவினுடைய வெளித்தோற்றத்தை அறிவியல் ரீதியாக நோக்கியிருக்கின்றான். இதனைக் கவிஞர் நோக்கும்பொழுது அறிவியல் ரீதியோடு கற்பனையையும் அதன்பாற்பட்ட உணர்ச்சிகளையும் கொண்டு புறத்தோற்றத்துடன் அகத் தோற்றத்தையும் நோக்கியிருக்கின்றார். இவருடைய மனம் முதலாவதவரினுடைய மனத்தைக்காட்டிலும் சிறிது வேறுபட்டது. வெளித்தோற்றத்தைக்கண்டுகொள்வது புறமனம். உள்தோற்றத்தினைக்கண்டு கொள்வது அகமனம். புறத்தோற்றத்தோடு அகத் தோற்றத்தினையும் நோக்குபவன் கலைஞன் ஆகின்றான். அவனால் தான் சிறந்த கலைகளைப் படைக்க முடியும். இந்த அகத்தோற்றத்தினைப் பெறுவதுதான் கலைஞனுடைய அனுபவமாகும். இவ்விரண்டின் வேறுபாட்டை ஊயி K. அன்ஸ்பாஸர் என்பவர் நன்கு விளக்குகின்றார். ''புறமனம் விழிப்புடையது; கூர்மையானது; எல்லையுடையது; பருமையுடையது. ஆனால் அக மனமோ அகன்று, ஆழ்ந்து, எல்லையற்று, உணர்ச்சி, கற்பனை என்பவற்றுடன் அதிகம் தொடர்புகொண்டுள்ளது புறமனம் பொறிகளின் வழியால இயங்குவது. ஆனல் பெரும்பாலும் பொறிகளின் உதவியின்றியே அனுபவங்களைப் பெறக்கூடிய இயல்பு அக மனத்திற்கு அமைந்துள்ளது'' இங்ஙனமான அனுபவம் தான் ஒரு கலைஞன் பெறும் அனுபவம்.

சாதாரண ஒருவர் ஒரு பொருளைக் காணும்போது காணுகின்றவன், காணப் படுகின்ற பொருள், கண்டதால் உண்டாகின்ற அவை என மூன்று முறைகளில் தனித்தனியே நோக்குவதைக் காணலாம். ஆனல் ஒரு கலைஞன் ஒரு ஆக்கத்தைப் படைக்கும்பொழுது காணப்படுகின்ற பொருள், கண்டதால் உண்டாகின்ற அவை என்பவற்றை அனுபவிக்க வேண்டுமேயொழிய, காணுகின்றவன் தான் என்ற முனைப்பு அந்நேரத்தில் அவனிடம் இருப்பதில்லை. இருத்தலும் கூடாது. அம்முனைப்பு இருக்கும்வரையில் பொருளோடு ஒன்ற அவனால் முடியாது அதனால் அவன் ஒரு சிறந்த ஆக்கத்தைப் படைக்கமுடியாது.

வெறும் பொழுதுபோக்கிற்காகப் படைக்கப்படுவது கலையன்று அதன் அடிப் படைப் பொருள் மனித மனத்தின் ஆழத்

தில் புதைந்து கிடக்கும் தன்மைகளையும், அழியாத உண்மைத் தத்துவத்தையும் வெளிப்படுத்துவதுதான் அதனுடைய நோக்கம். ''கலை என்பது ஒருவகை ஆற்றல். குறிப்பிட்ட ஒரு வழியை மேற்கொண்டு, முன்னரே கலைஞன் மனத்தில் தோன்றிய ஒரு பயனைப் பிறர் அறியச் செய்யும் ஆற்றலே கலை'' என்கின்றார் ஆபர்கிராப்பி என்னும் திறனாய்வாளர். பழங்காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் தங்கள் கருத்துக்களைக் கலைகள் மூலமே வெளியிட விரும்பினர். அவர்கள் வாழ்க்கையில் பெற்றிருந்த பண்பாட்டை இன்று நமக்கு அறிவிக்கும் கருவியாகத் திகழ்வன அவர்கள் ஆக்கிய கலைகளேயாகும்.

கலை இத்துணை சிறந்ததாயினும், அது தோன்றும் இடம் மனிதனது ஆக்க சக்தியிலேதான் என்பதை ஏற்கனவே நாம் நோக்கினோம். இந்த ஆக்கும் சக்தி தானாகவே ஒரு கலைஞனிடம் அமையவேண்டும். இதனைக் கற்றுக் கொடுத்தல் என்பது இயலாது. சக்கரவர்த்தியான கம்பர், பாரதியார் போன்றவர்கள் மிக்க இளம் பருவத்திலேயே கவிஞர்களாகத் திகழ்ந்தார்கள். ஏன்? இன்றுகூட இசை, எழுத்து போன்ற துறைகளில் இளம் கலைஞர்களை இங்கும் தென்னகத்திலும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆதலால் கலைஞனுக்கு வயது, அனுபவம் முதலிய கட்டுப்பாடுகள் தேவையில்லை. இந்த கலைஞன் மனதில் மறைந்துகிடக்கும் இந்த ஆக்கசக்தி தோன்றினால் காணும் உடனேயே கலைகள் உருவாகத் தொடங்கிவிடும். கலையின் வடிவமும் உட்பொருளும் கலைஞன் மனத்தினுள் ஆழத்திலிருந்தே வெளிவருகின்றன. எனவே கலையின தோற்றத்திற்கு மூலகாரணம் மனிதனின் இயல்பிலேயே அமைந்துகிடக்கிறது.

கலைகள் பெரும்பாலும் இயற்கையைப் பார்த்தே படைக்கப்படுகின்றன. ஆனால் சிலர் கலைகளெல்லாம் மனிதன் இயற்கையைப் பிரதி செய்து வைத்தவையே என்று கூறுவர். இது முற்றிலும் தவறு. கலைக்கு நிலைக்களமாக இயற்கை அமைவது உண்மை. ஆனால் அவைகள் இயற்கையின் பிரதிகள் அல்ல. இயற்கையைக் கலைஞன் அனுபவிக்கின்றான். அவனுடைய மனச் சித்தம், அறிவு என்பவற்றிற்கேற்பவே அவனது அனுபவமும் அமைகின்றது. இவ்வனுபவத்தைக் கொண்டு அவன் கலையைப் படைக்கும்போது அங்கு இயற்கை அப்படியே இருக்காது அதற்குப் பதிலாக தனிப்பட்ட அவனுடைய மனத்தில் அது எக்காட்சியை வழங்கிற்றோ அக்காட்சியே கலையாக வருகின்றது. எனவே கலைஞன் இயற்கையிலே தன்னை ஏற்றிக்காண்கின்றானே தவிர அதனுடைய உண்மையை அவன் அப்படியே காணவில்லை. கலையைப் படைக்க இயற்கை துணைசெய்கின்றதேயொழிய இயற்கையின் நகலாக கலை படைக்கப்படுவதில்லை. மேலும் கலைஞர் இவைகளைப் படைக்கும்பொழுது அவர்களது பொறிஉணர்விலேயே கலைகளை சுதந்திரமாகப் படைக்கவிடுதல் வேண்டும். அப்படிக் கலைகளைப் படைத்தால்தான் அவனது கற்பனையில் கலைகள் பூரணத்துவம் அடைகின்றன.

ஒரு கலைஞனின் மனம் நுண்ணிய உணர்வுகளால் மிகவும் கடுமையாகத் தாக்கப்படுகின்றது கலைஞன் ஒருவன் கலைகளைப் படைக்கும்பொழுது மக்கள் அதனை எப்படி வரவேற்கின்றார்கள் என்பதில்தான் அவனது திருப்தி (நிறைமனம்) அல்லது திருப்தியின்மை தங்கியிருக்கின்றது. அவனது கலைகளைப்பற்றி அவனது உள்ளம் புண்படும் படியான செயல்களோ, அல்லது வார்த்தைகளோ மக்களிடமிருந்து வெளிவந்தால் அவன் துடியாய்த் துடித்துவிடுகின்றான். அவனுடைய மிருதுவான உள்ளத்தில் தோல்விகளை, தாங்கும் சக்தி மிகக் குறைவாகத்தான் இருக்கும். அதனால் அவன் மேற்கொண்டு படைக்கும் புதிய கலைகளிலும் திருப்தி அடையமாட்டான். அதே வேளை அவனது கலைகளை மிக உயர்வாக நாம் மதிப்பிட்டால், அதை விட அவன் பெறும் ஆனந்தம் வேறொன்றுமிராது. நாம் அவனது கலைகளை வரவேற்கின்றோம், புகழ்கின்றோம் என்னும்பொழுது அவனது முகம் மலருகின்றது. அவனது ஆக்கசக்தி மேலும் விருத்தியடைந்து தன்னால் இயலாதென கைவிட்ட சில கலைப்படைப்புக்களையும் அவன் தன்னையறியாமலேயே மக்களுக்கிடையே படைத்துவிடுகின்றான்.

இதற்கு நல்ல உதாரணமாகத் திகழ்பவர்கள் இசைக்கலைஞர்கள் ஆகும். திறமையான கலைஞர்களின் முகம் எந்நேரமும் மகிழ்ச்சியாகத்தானிருக்கும். இதனால் இவ்விடத்தில் நாம் ஒன்றை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். கலையைப் படைக்கும் கலைஞன் ஒருவன் முதலில் முக்கியமாகத் தன்னுடைய கலையை மக்களிடையே படைக்கப்போகுமுன் தனிமையிலே அதனைச் சிந்தித்துப்பார்க்கின்றான். பூரணத்துவம் அடையாத கலையை ரசிகர்களுக்கிடையே படைக்கப்படுவதால் தான் கலைஞன் புண்படும்படியான செயல் அங்கு தோன்றுகின்றன. ஆகவே இங்கு கலைஞன் தான் கலையொன்றைப் படைக்கப் புறப்படும்போது இக் குறைபாட்டை நிவர்த்தி செய்து கொள்ளல்வேண்டும்.

தற்போது எமது நாட்டின் கலை வளர்ச்சிகளில், ரசிகர்கள் ஏதாவது புதுமைகளை எதிர்பார்க்கின்றார்கள். அவர்களுக்கு கலைகளில் புதுமையைப் படைக்க விரும்பும் கலைஞர்கள் மிக அவதானமாக இருக்கவேண்டும். வளர்ச்சியென்றால் உடை முதல் ஒவ்வோர் அம்சத்திலும் மேற்கத்திய நாகரீகத்தைப் பின்பற்றுவதுதான் என்று இன்று அநேக மக்கள் கருதுகின்றார்கள். இதனால் கலைகளினூடே புதியதொரு பாதையை அமைப்பது மிகுந்த சிரமமான பணியாகும். ஒரு புதிய பாதையை நோக்கி முன்னேறும்போது ஏற்கனவே இருக்கும் பழைய விஷயங்களை மாற்றி அமைக்க நேருகின்றது. ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை முறையில் பழகிப் போனவர்கள் அதே மாறுதலான முன்னேற்றத்திற்கேற்ப தம்மை மாற்றிக் கொள்ளமுடியாமல் சிரமப்படுகின்றார்கள். இதே நிலைமைதான் கலைஞர்களுக்கும். புதிய படைப்புக்களைப் புதுமையுடன் படைக்க விரும்பும் கலைஞர்கள் இப்படியான பல்வேறு சமூகக் குறைபாடுகளையும் பிரச்சனைகளையும் ஆராய்ந்து பின் ஆக்கபூர்வமான புதிய வழி முறைகளை உருவாக்கவேண்டும்.

இறுதியாக நாம் ஒரு விடயத்தைக் கட்டாயம் அவதானிக்கவேண்டும். இன்று கலைகளை அரைகுறையாகப் பயின்று எல்லோரும் மேடை ஏற விரும்புகின்றார்கள். இவற்றில் இசையையும், நடனத்தையும் முக்கியமாக நாம் கவனிக்கலாம். பரத நாட்டியம் கற்றுக்கொண்டும், சங்கீதம் கற்றுக்கொண்டும் மேடையேறி நடனமாடுவதும் பாடுவதும் ஒரு பாஷனாக வருகின்றது. தங்கள் பிள்ளைகளுக்கு இவற்றைக் கற்றுக்கொடுத்து நாலுபேர் முன்னிலையில் அவர்களுக்கு 'அரங்கேற்றம்' என்று கூறி, மேடை ஏற்ற மட்டுமே பல பெற்றோர்கள் ஆவலாய் இருக்கின்றார்கள். அது மட்டுமா? கலைக்கும், தங்களுக்கும் கொஞ்சமும் தொடர்பில்லாத பெரிய மனிதர்களைத் தலைமைதாங்கவைத்து, அவர்களது வாயால் தங்கள் பிள்ளைகளுக்கு ''ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கிறது'' என்று கூறுவதைக் கேட்டு பரம திருப்தி அடைகிறார்கள். ஒரு சிலர் அரங்கேற்றத்திற்கு முன்பேயே பிள்ளைகளுக்கு என்ன பட்டம் கொடுப்பது என்று தீர்மானித்துவிடுகின்றார்கள். இதனால் இவற்றைக் கற்றுக்கொடுக்கும் ஒரு சில சுயநலக் கலைஞர்கள் இலாபமடைகின்றனர். அரங்கேற்றத்தைச் சாக்காக வைத்துக் கொண்டு புடவை, வேஷ்டி பெறுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள். இதை இப்பொழுது ஒரு வியாபாரமாகக் கருதுகின்றார்கள். இதனால் கலைகளின் தரம், மதிப்பு கெட்டுக்கொண்டு போகின்றது. இப்படியே போனால் கலைகளின் நிலை தான் என்னே?

ஒரு நாட்டின் கலைவளர்ச்சி அந்நாட்டின் பண்பாட்டை, நாகரீகத்தைக் காட்டுவதால் நாம் இதுவரை நோக்கியது போல கலை, கலைஉள்ளம், அதன் இன்றைய நிலை போன்ற விடயங்களில் அக்கறைகாட்டி உண்மையான கலையையும், கலைஞர்களையும் பாதுகாத்துக் கலையைக் கலையாக வளர்ப்பதில் ஈடுபடவேண்டும்.

---

அநீதிகளிலிருந்து புது அரசுகள் எழுகின்றன.

## யாழ்
## ஓட்டோ ஹவுஸ்

நீரிறைக்கும் இயந்திரம்
உதிரிப்பாகங்கள்
மோட்டார் சைக்கிள்
உதிரிப்பாகங்கள்

போன்றவற்றிற்குச்
சிறந்த ஸ்தாபனம்.

171, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சிறந்த
புகைப்படங்களுக்கு



## கஜேந்திரா ஸ்ருடியோ

40, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**With the best Compliments**
**from**

# Mohamadally Abdulally

**5 & 7, GRAND BAZAAR, — JAFFNA.**

அன்பளிப்பு :

# நொர்தேண் இன்டஸ்றீஸ்

டயர் நிரப்புபவர்கள்

112, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.

தமிழ் மன்றத்தின் வளர்ச்சிக்கு
எமது வாழ்த்துக்கள்.

சேகர்
மோட்டோர்ஸ்

118, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**V. K. Rajaratnam**

95, Stanley Road,
JAFFNA.

Dealers in:

Radios
Tape Recorders
Radio Spares
Imported Toys
etc.

☎ 7447

# யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர்ப் பயன்பாட்டுப் பிரச்சனைகளும் தீர்வுகளும்

— மு. சிவதாஸ் —
இறுதி வருடம், மனிதப் பண்பியல் பீடம்.

இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் இருந்து கடல் நீரினால் பிரிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கையின் ஏனைய பகுதிகளில் இருந்து மாறுபட்ட புவியியல் அம்சங்களைக்கொண்ட பகுதியாகும். புவிச்சரிதவியல் அடிப்படையில் மயோசின் காலத்தில் மேல் உயர்த்தப்பட்ட சுண்ணாம்புக் கற்பாறைகளைக் கொண்டும் தரையின்மீது ஆங்காங்கு வெளிப்பட்டுக் காணப்படும் உயர வேறுபாடுகளைக் கொண்டும் குடாநாடு காணப்படுகின்றது. குடாநாட்டின் சிறப்பான நீர்வளத்திற்கு இப்பிரதேசத்தின் புறம்பான புவிச்சரிதவியல் அமைப்பே அடிப்படையாக விளங்குவதினை நாம் மனதில் கொள்ளுதல் அவசியமாகும். இந்தியாவின் புவிச்சரிதவியல் அமைப்புடன் மிக நெருக்கமான தொடர்பினையும், கடல்படிவுகளால் ஏற்பட்ட உருமாற்றத்துடன் மேல் உயர்ந்த சுண்ணாம்புக்கல்லையும், மயோசின் கால மேல் உயர்ச்சியையும், 10 அடி தொடக்கம் 50 அடிவரையான வேறுபட்ட மேல் உயர்ச்சியையும், சில பகுதிகளில் மண்ணால் மூடப்பட்ட பிளேயோசின், பிளைட்டோசின் கால நீரேரிப்படிவுகளும், காற்றினால் படியப்பட்ட மண்படிவுகளையும், ஆங்காங்கே கொண்டு யாழ்ப்பாணக் குடாநாடு காணப்படுகின்றது. இதிலிருந்து நாம் 250 அடி வரை சுண்ணாக்கல் தடிப்பு காணப்படுவதனையும் அவற்றுக்கிடையில் சங்கு, சோகி, சிப்பி, ஊரி, போன்ற கடல் உயிரினச் சுவடுகளையும் காணமுடிகின்றது. படைபடையான சுண்ணக்கல் பாறைமூட்டுக்களையும், நுண்துளைகளையும் ஓரளவு சமமான தரையமைப்பையும் கொண்டுள்ளமை குடாநாட்டின் தரை அமைப்பின் சிறப்புப் பண்புகளாகும். எனவே குடாநாட்டின் நீர்வளத்திற்கு அடிப்படையாகக் காணப்படும் தரைக்கீழ் நீர் செறிவிற்கு இத்தகைய அமைப்புக்களே துணைபுரிகின்றது. அத்துடன் மண்ணில் காணப்படும் வேறுபட்ட இரசாயனச் செய்முறைகளும் அதன் ஆழமும் நீர் வளத்தினைத் தீர்மானிப்பதில் அதிக பங்கு வகிக்கின்றது.

குடாநாட்டின் நீர்வளத்தினைத் தீர்மானிப்பதில் காலநிலை மூலக் கூறுகளான வெப்பநிலையும், மழைவீழ்ச்சியும் முக்கிய இடத்தினைப் பெறுவதுடன் நீர்வளத்தின் தரத்திலும், நீர் மட்ட அளவினைத் தீர்மானிப்பதிலும், பிரச்சினைகளை உருவாக்குவதிலும் முக்கிய இடத்தினை வகிப்பதனை நாம் மனதில் கொள்ளலாம். அயனவலயத்தின் காலநிலைத் தன்மைகளைத் தன்னகத்தே கொண்ட யாழ்ப்பாணக் குடாநாடு உயர்வெப்பநிலையான 82° வரையான வெப்பத்தினை அனுபவிக்கின்றது. ஏப்ரல் மே மாதங்களில் 82° வரை அதிகரித்துச் செல்லும் வெப்பநிலை டிசம்பர் — ஜனவரி மாதங்களில் 76° ப வரை குறைவடைந்து செல்வதும் உண்டு. சிறப்பாக ஆவியாக்க அளவினைத் தீர்மானிப்பதில் வெப்பநிலை முக்கிய பங்கினை வகிக்கின்றது ஏப்பிரல் — மே மாதங்களில் குடாநாட்டின் நீர் வளத்தில் உவர்த்தன்மை ஏற்படுவதினையும், ஆவியாக்கம் ஏனைய மாதங்களைவிட ஒப்பீட்டளவில் அதிகம் நிகழ்வதினையும் அவதானிக்கமுடியும். இக்காலத்தில் நீர் மட்டமானது அடியில் இருந்து 6 அடி வரை குறைவடைந்து செல்வதினையும் அவதானிக்கலாம். யாழ்குடா நாட்டில் நீர்வளத்தினைத் தீர்மானிப்பது மழைவீழ்ச்சியாகும். குடாநாட்டின் நிலமேற்பரப்பினை நோக்கி வரும் நீரின் ஒரு பகுதி தரையின் மீது ஓடிக் கடலையும், இன்

ஒரு பகுதி ஆவியாதலுக்கும் உட்பட மிகுதி தரையின் கீழ்ச் செல்கின்றது. குடாநாட்டின் வருடாந்த மழை வீழ்ச்சி 51·2'' அங்குலமாகும். சிறப்பாக இலங்கையில் நான்கு மழைப்பருவ ஒழுங்குகள் காணப்பட்டாலும், குடாநாட்டின் நீர் வளத்திற்கு அடிப்படையாக விளங்குவது டிசம்பர் — பெப்பிரவரி வரையான வட கீழ் மொன்சூன் பருவக் காற்றாகும். இக்காலம் குடாநாட்டின் நிரந்தர மழைக் காலமும், மாரிகாலமும் ஆகும். இக்காலத்தில் குடாநாட்டில் தேக்கி வைக்கப்படும் தரைக்கீழ் நீரே குடாநாட்டின் முக்கிய நீர்வளமாகும்.

இலங்கையின் அரசியலிலும், பொருளாதார நடவடிக்கையிலும் இன்று பிரச்சினைக்குரிய பகுதியாகக் காணப்படுவது யாழ்ப்பாணக்குடா நாடாகும். இக்குடா நாட்டின் பொருளாதார வளம் என்ன, இதன் பங்கு இனரீதியாக ஏற்படும் ஒரு அரசியலில் பிரிவிற்கு வழிவகுக்குமா? என்பது இன்று அரசியல்வாதிகளிடையேயும் குடாநாட்டின் பொது மக்களிடையேயும், மாணவர்களிடையேயும் எழுந்துள்ள முக்கிய கேள்வியாகும். யாழ்குடாநாட்டின் மூலவளங்கள் பற்றிய கண்டு பிடிப்பும், மதிப்பீடும், நடைபெறும்வரை இக்கேள்வி தொடர்ந்து எழுதல் தவிர்க்க முடியாதது ஆகும். ஆனால் இங்கு நாம் யாவரும் அடையாளம் கண்டு கொண்டுள்ள நீர்வளத்தின் பயன்பாட்டில் தோன்றும் பிரச்சினைகளையும் தீர்வுகளையும் எதிர்கால நடவடிக்கைகளையும் ஆய்வு செய்து குடா நாட்டு மக்கள் முன் வைப்பதே நோக்கமாகும்.

யாழ்ப்பாணக்குடா நாட்டின் நீர் வளம் பற்றிய ஆய்வு மிக அண்மைக் காலத்தில் முக்கியம் பெற்றுள்ளதினை நாம் காணலாம். கடந்த சில ஆண்டுகளாக பல்வேறு திறுவன ஆய்வுகளும், பேராசிரியர்களது அறிவுறுத்தல்களும், வந்து கொண்டிருப்பினும், பெரும்பாலான பொது மக்கள் இதனைச் செவிமடுக்கத் தவறுவதினால் குடாநாட்டின் எதிர்கால நிலப்பயன்பாட்டில் நீர்ப்பிரச்சனை என்பது பாரதூரமான தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதினை நாம் உணருகின்றோம்.

குடாநாட்டின் நீர்வளத்தில் தரைக்கீழ் நீர் என்பது தனித்தன்மையுடையதாகும். இந் நீர்வளத்தினைத் தீர்மானிப்பதில் குடாநாட்டின் மழைவீழ்ச்சி, பரம்பல், போக்குத் தரைத்தோற்ற வேறுபாடுகள், வடிகாலமைப்புக்கள், மண்ணின் இரசாயன அமைப்பு, ஆழம், மேல்பரப்புப் பாறைகளின் தன்மை, உட்புகவிடும் இயல்பு என்பன ஆதிக்கம் செலுத்துகின்றது. சராசரியாக 51'5 அங்குல மழை பெறும் குடாநாட்டில் 60% மான நீர் கடலைச் சென்றடைய மிகுதி 40% மான நீரே பயன்பாட்டில் இடம் பெறுகின்றது. அதாவது மழையில் இருந்து பெறும் நீரில் இருந்து மண்படை உறிஞ்சும் நீரும், தரை மேலாக ஓடும் நீரும், குளம், ஏரி, பதிவுகள் பள்ளங்கள் போன்ற நீர்த் தேக்கங்களை நிரப்பிக் கடலைச் சென்றடைகின்றது. அத்துடன் தரையின் கீழ்ச் செல்லும் நீரின் ஒரு பகுதியும், கடலைச் சென்றடைவதுண்டு. குடாநாட்டில் ஏறத்தாள 75,000 ஏக்கர் அடிநீர் வருடத்திற்கு கடலினுள் சேர்ந்து வருவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. குடாநாட்டின் நீர்வளத்தில் முக்கிய பங்கு வகிக்கும் கிணறுகள் ஏறக்குறைய 25,000 இற்கும் மேற்பட்டதாகும். இத்துடன் 1060 ஏரிகள், குளங்கள் என்பனவும் காணப்படுகின்றது. இவைகளைப் பொறுத்தவரை 66,000 கிணறுகள் வீட்டுத்தோட்டப் பாவிப்பிற்கே உபயோகிக்கப்படுகின்றது ஆனால் இன்று நன்னீர்க்கிணறுகள் உள்ள 1,45,00 ஏக்கர் நிலம் கோடையில் உவர்த்தன்மையாக மாற்றம் அடைவது கண்டறியப்பட்டுள்ளது.

அண்மைக்கால ஆய்வின்படி குடாநாட்டின் மத்திய பாகத்திலும், பச்சிலைப் பள்ளியிலும் குறைவாகவும், தீவுப் பகுதியில் அதிகமாகவும் நீர்வளம் பயன்படுத்தப்படுகின்றது. குடாநாட்டில் அதிகரித்து வரும் குடித்தொகை விரிவடையும் பயிர்ச்செய்கை நடவடிக்கை, சிறுகைத்தொழில் நடவடிக்கை என்பனவற்றினால் நீர் வளத்தின் பயன்பாடு விரைவாக அதிகரித்து வருகின்றது. இதுவரை குடாநாட்டின் நீர் வளத்திற்கு அடிப்படையான புவிச் சரிதவியலையும், காலநிலையையும், நீர் வளத்தி

ளையும் நோக்கிய நாம் அடுத்து ஏற்படும் பிரச்சனைகளை நோக்குதல் பொருத்தமாகும்.

குடாநாட்டின் நிலப் பயன்பாட்டில் பயிர்ச்செய்கை நடவடிக்கை என்பது பொருளாதாரத்தின் முதுகெலும்பாகக் காணப்படுகின்றது. இதற்கு அடிப்படையாகக் காணப்படுவது தரைக்கீழ் நீர்வளமே. அடுத்து வீட்டுப் பாவனைக்கான குடிநீர், சமைத்தல், குளித்தல், துவைத்தல் என்பனவற்றுக்கும், மாநகர சபையின் தேவைக்கும், பெருமளவில் குடாநாட்டின் கிணறுகளே பயன்படுத்தப்படுவதனால் கிணறுகள் ஊடாக நீரை விநியோகிப்பதில் ஏற்படும் பிரச்சனைகளையும், தீர்வுகளையும் சிறப்பாக ஆய்வு செய்தல் தவிர்க்க முடியாதது ஆகும்.

கிணறுகளது ஆழம், நீர்மட்டம், தரம் என்பன இடத்திற்கு இடம் வேறுபட்டுக் காணப்படுவதிற்கு ஏற்பப் பிரச்சனைகளும் வேறுபட்டுள்ளது. இப் பிரச்சனைகளை நாம் ஆராயும்போது வீட்டுப் பாவனை நீரில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் பயிர்ச்செய்கையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் என நோக்குதல் பொருத்தமுடையதாகும். பொதுவாக உவர்த்தன்மை, நீரின் வன்மை பருவரீதியில் ஏற்படும் நீர்ப்பற்றுக்குறை அல்லது உவர்த்தன்மை அதிகரிப்பு, நீர்ப் பற்றுக் குறை என்பன முக்கியமாகும்.

சிறப்பாக உவர்த்தன்மை என்பது குடாநாட்டின் பெருமளவு கிணறுகள் உவர்த்தன்மையானதாக மாறி விடுவதனையும், நீர் வெளியேற்றத்தினை அதிகரிக்கும்போது நன்னீர்க் கிணறுகள்கூட உவர்நீர்த் தன்மையாக மாறி வருவதனையும், ஆழமாக்குகையில் கடல்நீர் உட்புகுதலையும், பருவகால உவர்த்தன்மை என்பவற்றின் மேல் எழும் பிரச்சனைகளையும் உள்ளடக்கும்.

குடாநாட்டின் தரைக்கீழ் நீர்த்தேக்கம், அதன் அளவு என்பவற்றுக்கு ஏற்ப வடபகுதியில் அதிகளவில் உவர்த்தன்மைக் கிணறுகளும், தென்பகுதியில் நன்னீர்க் கிணறுகளும் உள்ளன. ஆயினும் பரவலாக நீர் வெளியேற்றுகை அதிகரிக்கும்போது நன்னீர்க் கிணறுகளும் உவர் நீராக மாற முயல்கின்றது. அத்துடன் கிணற்றின் பயன்பாட்டினை அதிகரித்துப் பெருமளவு நீரினை இறைக்கும்போதும், நீர் மட்டம் குறைவடையும்போதும், குறிப்பிட்ட பரப்பில் கிணறுகள் செறிவாகக் காணப்படும் போதும், விவசாய பாவனைக்காகப் பெருமளவு இயந்திரங்களை உட்படுத்தும் போதும் உவர்நீர்த் தாக்கம் அதிகரிக்கின்றது.

மேலும், கிணறுகளை ஆழமாக்குவதினாலும் உவர்த்தன்மை அதிகரிக்கின்றது. கோடைகால நீர்த் தேவையைப் பூர்த்தி செய்யலாம் என்னும் நோக்குடன் கிணறுகளை ஆழமாக்கிப் பயன்பாட்டினை அதிகரிக்கும்போதும், ஆழமாக்கியதனால் நன்னீர் வலயத்தினைத் தாண்டிச் செல்லும்போதும் உவர்நீர் உட்பிரவேசிக்கின்றது.

குடாநாட்டின் விவசாய நடவடிக்கைகளை உவர்நீர் அதிகரிப்பு பெருமளவு பாதித்துள்ளதினைக் காணலாம். ஆனைக்கோட்டை, அராலி, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் பெருமளவு வயல் நிலம் காணப்படினும், உவர்த்தன்மை கூடியமையினால் பெருமளவு நிலம் வருடத்தின் பெரும்பாகம் பயன்படுத்தப்படாதேயுளது. கடல் நீர் உட்புகுவதாலும், நிலத்தின் கீழ்ப்படை உப்பு நீரிற் கரைந்து மழை நீருடன் துளைகளூடாக மேலெழும்போது ஆவியாகி நிலத்தில் படிவதினாலும், உப்பு செறிவாகவுள்ள நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதினாலும் உவர்த் தன்மை ஏற்படுகின்றது. அத்துடன் விவசாயப் பயன்பாட்டின்போது ஏற்படும் நீர்ப்பற்றுக் குறை என்பது குடாநாட்டு மக்கள் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சனையாம். எதிர்காலத்தில் எமது விவசாய நடவடிக்கைகளின் அதிகரிப்பை கட்டுப்படுத்தும் காரணியாக இது விளங்கும் என்பதில் சந்தேகமில்லை. குடாநாட்டின் பெருமளவு நிலம் வேற்று நிலமாக காணப்படுவதற்குக் காரணம் உவர்த்தன்மையும், நீர்த்தட்டுப்பாடுமேயாகும், விவசாயத்திற்கு உட்படும் கிணறுகளில் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதால் இயல்பாகவே ஊற்றுக் குறைவாகவுள்ள கிணறுகள் நீர்த் தட்டுப்பாட்டை ஏற்படுத்துகின்றது. இப்பற்றுக் குறையைத் தீர்மானிப்பதில் தரைக் கீழ் நீர்வளமே

பொறுப்பான பங்கினை வகிக்கிறது. தரையின் கீழ் நீர் வளம் அதிகரிக்கக் குடாநாட்டின், குளங்களும், கேணிகளும், பள்ளங்களும், பெருமளவு உதவி புரிகின்றன. ஆனால் இன்று குடாநாட்டின் குடிசன அதிகரிப்பினால் ஏற்பட்ட அதிக சேவையினால் பெருமளவு நீர் உடனேயே வடிகால் ஊடாக வெளியேற்றப் படுகின்றது. அத்துடன் பள்ளங்கள் நிரப்பப்பட்டுள்ளன. குளங்கள், கேணிகள் தூர்ந்து போயும், கவனிப்பாரற்றும் காணப்படுவதினால் நன்னீர் நிலத்தினுள் வடிவது குறைவடைந்து கடலை நோக்கிச் செல்வதால் தரையின் கீழ் நன்நீர் வலயத்தினை உவர் நீர் ஆக்கிரமித்துக் கொள்கின்றது. ஆலயங்களின் தேவைக்காக அமைக்கப்பட்ட கேணிகள் ஏரிகள், குளங்கள், மனித தொழிற்பாட்டுக்குப் பயன்படும் ஏரிகள், வண்ணான் குளங்கள், விவசாயப் பயன்பாடு உடை குளங்கள், கால்நடை வளர்ப்பிற்கான ஏரிகள், என்பன இன்று அடர்சேற்றினாலும், மண்ணாலும் நிரப்பப்பட்டு அதிகளவில் ஆவியாதலுக்கும் வாய்ப்பாகக் காணப்படுவதினால் தரைக் கீழ்நீர் வலயம் பாதிப்படைகின்றது. இதனைப் பாதுகாத்தல் முக்கிய பிரச்சனையாகும்.

அதிகரித்து வரும் குடித்தொகைக்கு ஆதாரமாக இருக்கும் பொருளாதாரம் விவசாய நடவடிக்கையாகக் காணப்படுவதுடன் கட்டுப்பாடற்ற இயந்திரங்களைப் பயன்படுத்துவதிலும். குடாநாட்டின் நீர் வளத்தில் ஏற்பட்டுள்ள நீர்ப் பற்றுக்குறை உவர்த்தன்மையடைதல் ஆகியவற்றுக்குத் தீர்வு காணுதல் அவசரமானதும், அவசியமானதுமாகும். உடன் தீர்வாக இலகுவாகக் காணப்படுவது குளங்களையும் கேணிகளையும், பேணிப் பாதுகாத்து நன்னீர்த் தேக்கத்தினை அதிகரித்தலாகும், இதன் மூலம் தரைக்கீழ் நீர்த் தேக்கத்தினை உருவாக்க முடியும். பல்வேறு தேவைகளுக்காக அமைக்கப்பட்டுக் காணப்படும் தூர்ந்துபோன குளங்களும், கேணிகளும், படிவுகள் அகற்றப்பட்டு அகலமாக்கப்பட்டு மீண்டும் புனரமைப்புச் செய்தல் அவசியமாகும், இவ் ஏரிகள் கூட திறந்த வெளியில் காணப்படுவதினால், ஆவியாதலைக் குறைக்கும் முகமாகத் தாமரை போன்றவற்றை இவற்றினுள் வளர்ப்பதுடன் கரைகளில் நிழல் தரக் கூடிய வேம்பு, ஆல், புளி' இலுப்பை முதலிய மரங்களை நடுதல் அவசியம். இதன் மூலம், ஆவியாதலைக் கட்டுப்படுத்த முடியாவிடினும் குறைவடையச் செய்யலாம். ஏரிகளில் குளங்களில் உள்ள நீரை விவசாய நடவடிக்கைக்காக இயந்திரங்கள் மூலம் பயன்படுத்துதலைத் தடை செய்தல் வேண்டும். ஏன் எனில் ஏரி, குளம் என்பவற்றினைச் சூழ உள்ள கிணறுகளுக்கு ஏரியின் நீர்மட்டம் நீர் அமுக்கத்தினைக் கொடுக்கும். அதே வேளையில் கழிவு நீரைத் தேக்கும் ஏரிகளை நன்னீர் ஏரிகளுடன் தொடர்பற்றதாக அமைத்தல் வேண்டும். தவிர கடந்த 25 வருடங்களுக்கு மேலாகப் படிதல்களையும், சுரிகளையும் அகற்றாத நிலையில் இருக்கும் ஏரி, குளங்கள், என்பன திருத்தியமைக்கப்பட்டுக் கூடுதலான மழை நீர் தேக்கப்படுவதுடன் புதிய குளங்கள், கேணிகள் அமை.கப்படுதல் வேண்டும். வெள்ள காலத்தில் மழை நீர் கடலை நோக்கி முற்றாக ஓடாது அதிக நாட்கள் குடாநாட்டின் நிலப்பரப்பினுள் தேங்கி நிற்கக் கூடியதாக வரம்புகளைக் கட்டித் தேக்குதல் அவசியம். தரிசு நிலம் எல்லாம் வான்பார்த்த மரங்களை நடுவதுடன் ஒவ்வொரு வீட்டிலும் வெள்ளம் தேங்கி நிற்கக்கூடிய வசதி அவசியமாகும்.

பயிர்ச்செய்கைநடவடிக்கைக்கு நீரைப் பயன் படுத்தும் போது நிர்வாக முறைகளைக் கடைப்பிடித்தல் ஆவசியம். பயிர்களின் தேவை, நீர் வழங்கக் கூடிய கால அளவு என்பன நிர்ணயிக்கப்படல் வேண்டும். வறட்சிக்கால நீர்ப்பற்றுக் குறையை நிவர்த்தி செய்யத் திட்டமிட்டு நீரை சூழலுக்கும் பயிருக்கும் உகந்ததாக நீர்ப்பாசனமுறைகளைக் கையாளுதல் அவசியம். குடாநாட்டின் நிலப்பரப்பில் ஏற்படும் நீர்மட்டத்தினை ஒவ்வொரு விவசாயியும் அறிவியல் பூர்வமாக அறிந்திருத்தல் அவசியம் நீர் வீணுக்கம் என்பது ஊடு வடிவதினாலும், கசிவதினாலும், ஆவியாதலினாலும், ஏற்படுகின்றது. இதனை சாய்வற்ற நிலப்பரப்பு மூலமும், பெரும் நிழல் மரங்களை தோட்டங்களின் ஓரங்களில் நடுவதின் மூலமும் தடை செய்யலாம்.

சமீப காலத்தில், காலநிலை, சீரற்றும் மாறும் தன்மையுடனும் காணப்படுவதி

னால் நீர் கிடைக்கும் காலங்களில் நீரைக் கவனமாக பிரயோகித்தல் அவசியமாகும். வடிகால் ஓரங்களில் சிறு குளங்களை அமைப்பதினால் வெளியேறும் வடிகால் நீரையும் வெகுவிரைவாகக் கடலை நோக்கி ஓடாது தேக்கி வைப்பதன் மூலம் குடாநாட்டின் நீர்ப்பற்றுக் குறையைத் தீர்க்க முடியும். குடாநாட்டில் இருந்து மழை காலத்தில் கடலினுள் தள்ளப்படும் நீர் திட்டமிட்டு சேமிக்கப்படுமாயின் எமது நீர்ப் பற்றுக் குறையைப் பூர்த்தி செய்வதுடன் நீர்வளத்தினையும் கடல் நீர் உட்புகாமலும் பாதுகாக்க முடியும். இதேபோன்று தொண்டமனாறு, உப்பாறு போன்றவற்றில் மழை நீருடன் கடல்நீர் சேராவண்ணம் பாதுகாத்து தண்ணீர் வளத்தினை அதிகரிக்கலாம். கூடுதலான வெப்ப நேரமான காலை 10 மணி தொடக்கம் மாலை 4 மணிவரையான நேரத்தில் நீர் இறைப்பைத் தவிர்த்தல் வேண்டும். தேவைக்கு மேலாக கிணறுகள் தோண்டும் போதும், ஆழமாக்கும் போதும், நீர்ப்பாசன இலாகாவின் ஆலோசனையைப் பெறுதல் அவசியம். கிணறுகளை அமைக்கும் போது மலசல கூடங்களுக்கு அண்மையில் அமைத்தல் கூடாது குடாநாட்டின் தரையமைப்பினால் கிணறுகள் அசுத்தம் அடைவதற்கு வாய்ப்பு உண்டு என்பதினை மனதில் கொள்ளுதல் அவசியம்.

நீர்ப் பிரச்சனைக்கு துணைக்காரணியாக விளங்குவது பெருமளவு நீர் இறைப்பு இயந்திரப் பயன்பாடாகும். இந்நிலை தொடர்ந்து கட்டுப்பாடற்று நடைமுறைப்படுத்தப்படின் எதிர்வரும் 15—20 வருடங்களில் குடாநாட்டின் 80% மான கிணறுகள் பயன்படுத்த முடியாத நீரையே கொண்டு காணப்படுதல் தவிர்க்க முடியாததாகும். அத்துடன் தேவைக்கு மட்டும் கிணறுகளைப் பயன்படுத்துவதினைப் பல நாடுகளில் சட்டங்கள் மூலம் அமுல் செய்யப்படுகின்றது. குடா நாட்டிலும் சட்டங்களை அமுல் நடத்தல் இன்றைய நிலையில் அவசியமானதாகும். அத்துடன் நீர்ப்பாசன முறையையும், நீரைக் கடத்திச் செல்லுதலையும் அவதானத்துடன் மேற்கொள்ளுதல் அவசியமாகும். நீரைக் கடத்திச் செல்தவற்கு அல்கத்தீன் குழாய்களைப் பயன்படுத்தல் அவசியமாகும். விரைவில் பெருகிவரும் குடித் தொகையினாலும், வளர்ந்து வரும் நகராக்கத்தாலும் கைத்தொழில் வளர்ச்சியினாலும், வெளியேறும் கழிவு நீரின் அளவு அதிகரித்துள்ளது. இந்நீர் தரைக்கீழ் அடையும் போது தன்னீப்ர் படைகளையும் தாக்குவதினால் மாசுபடுகின்றது. எனவே இக் கழிவுநீரை நிலப்பரப்பில் தேக்கி நிற்கவிடாது பவுசர் மூலம் அகற்றிக் கடலினுள் சேர்த்தல் அவசியம்.

மேற்கூறிய பிரச்சினைகளுக்கு நாம் கண்டுள்ள தீர்வுகளை நடைமுறைப்படுத்த அரசும், பொது நிறுவனங்களும், பொது மக்களும் முயலுதல் வேண்டும். இதற்கு வேண்டிய நிதியையும், உபகரணங்களையும் அரசு உடன் வழங்குதல் அவசியம். இத்தகைய தீர்வுகளை அரசு அக்கறையுடன் நோக்கும்போது தொழில் நுட்ப அறிஞர்களும், பல்கலைக்கழக மாணவர்களுமிணைந்து தேவைப்படுமிடத்து ஆய்வுகளையும், ஆலோசனைகளையும், உடலுழைப்பையும், வழங்குதல் அவசியமாகும். குடாநாட்டின் நீர்வளம் பற்றிய பிரச்சனைகளை மக்கள் முன் வைத்து தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதில் அறிவுத்திறனில் உயர்கல்வி நிலையமாக விளங்கும் யாழ்வளாகத்தின் பங்கு மிக அதிகமாகும். இதனை உணர்ந்து செயல்படுவதின் மூலமே குடாநாட்டின் நீர்வளத்திற்கு ஏற்படக்கூடிய நீரியல் தொடர்பான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்த முடியும். இத்துடன் நிலப்பயன்பாட்டில் நீர்ப்பிரச்சனையைக் கட்டுப்படுத்த மக்கள் பெருக்கத்தினையும் கட்டுப்படுத்துவதுடன் இடப் பெயர்வுகளும் அவசியமாகும்.

---

## ஐக்கியம்

1977 ஆம் ஆண்டில் உலகில் 117 நாடுகளில் மனித உரிமை பறிக்கப்பட்டுள்ளது என்று 'அம்னெஸ்டி இன்ரநெஷனல்' எனும் பத்திரிகை கூறுகின்றது. இந் நாடுகள் எல்லாம் ஐ. நா. இல் அங்கம் வகிப்பவை.

நன்றி: 'துக்ளக்'

# —* மனித உறவு முறை *—

மூ. திருநாவுக்கரசு
இறுதி வருடம், மனிதப் பண்பியல் பீடம்.

மனித உறவு முறையின் தன்மையும் அதன் பரிமாணத்தையும் அவற்றுள் வளைந்து நிமிரும் அங்கங்களையும் விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். இரத்த உறவு, பாலுறவு, வர்த்தக உறவு, இன, மத, மொழி, பிரதேச உறவு எனப் பலவழிகளில் உறவு முறை வடிவப்படுத்தப்பட்டுள்ளது. ஆனல் இந்தப் பல்வேறு வடிவங்களையும் குறுக்கும் மறுக்குமான கோடுகளாக அல்லாது அடிப்படையில் ஓர் நேர் கோட்டில் நிறுத்த முடியும். இதன் மூலம் அடக்குமுறை, சுதந்திரம் என்பவற்றினுடைய சாராம்சத்தையும் விளங்க முடியும். மனிதன் ஓர் உயிரியற் பிராணி, சமூகப் பிராணி என்பவையாகிய இவ்விரண்டிற்கும் அடியில் அவன் தற்சார்புள்ளவன் இவை மூன்றையும் மனதிற் கொண்டுதான் மனித உறவுமுறை பற்றியவோர் தீர்மானத்திற்கு நாம் வர வேண்டி உள்ளது.

மனித வர்க்கத்தின் கடந்த மொத்த வாழ்வின் சில அம்சங்களை நோக்கும் போது மனிதனை மனிதன் உணவாக உண்டுள்ளான். தான் பெற்ற பிள்ளையை (பெண்) ஓர் மரபாக சம்பிரதாயமாகக் கொலை செய்துள்ளார். தாயுடன் மகனே, தங்கையுடன் அண்ணனே வேறுபாடின்றி பாலுறவு கொண்டிருந்தனர். (இதற்கு குடும்பம், தனிச்சொத்து, அரசு, ஆகியவற்றின் தோற்றம் என்னும் எங்கல்ஸ் எழுதிய முழுநூலே ஆதாரமாயுள்ளது) மனிதனை மனிதன் செக்கிற்பூட்டினன். மனிதனை மாடுபோல உடலிற் குறிசுட்டு சங்கிலியாற் கட்டையிற் பூட்டி வேலை வாங்கினன். அடிமையாகவும் சேவகனாகவும் ஆட்டிப்படைத்தான். இனமாய், குழுவாய் பிரிந்து நின்று மனிதனை மனிதன் கொன்று தொலைக்கிறன். அடக்கி ஆள்கிறன் (இதற்கு சமுதாயவரலாற்று சுருக்கம் பாகம் I முழு நூலும் ஆதாரம்)

எந்தவோர் உறவு முறையினதும் அடிப்படை இதுதான். அதாவது புலனுணர்ச்சியிடினப்படையில் உருவாகும் எண்ணங்கட்கும், யதார்த்தத்திற்கும், இடையிலான போராட்டத்தில், அப் போராட்டத்திற்குத் தன்னுடன் சார்புடையவர்களுடனும், சார்புடையவர்களாகக் கருதப்படுபவர்களுடனும் மனிதன் அந்நியோன்யப்படுகிறன், உறவாடுகிறன். இவ்வகையிற்றன் சகல மனித உறவுகளும் தற்காலிகமாகவோ அன்றி நிரந்தரமாகவோ நிர்ணயம் பேசுகின்றன. இதற்கப்பால் இரத்தபாசமென்று எதுவுமே இல்லை. புலனுணர்ச்சி பற்றி விளக்குகையில் லெனின் ''இயங்கும் சடப்பொருள்கள் நமது புலன்கள்மீது செயற்படுவதால் புலனுணர்ச்சிகள் விளைவிக்கப் படுகின்றன'' எனக் குறிப்பிட்டார். இவ்வாறு உருவாகும் புலனுணர்ச்சி பின்பு ஸ்த்தூலனமற்ற பண்பியற்றெகுதியாக உருப்பெறுகிறது. இப் பண்பியற்றெருதியிலிருந்து மூளையால் எண்ணங்கள் பிறப்பிக்கப்படுகின்றன. (எண்ணங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.) இவ்வாறன எண்ணங்கள் ஸ்த்தூலமாவதற்காக, துய்ப்பதற்காக யதார்த்தத்துடன் போராடுகின்றன. இதுவே எண்ணங்கட்கும் யதார்த்தத்திற்கு மிடையிலான போராட்டமென்பதாகும்.

புலனுணர்ச்சிக்கான பொதுமையான காரணத்தையே லெனின் வரையறுத்தார். ஆனல் புலனுணர்ச்சிகள் விகிதாசாரத்தில் வேறுபாடுடையன.புலன்களின் பரிமாணங்கட்கேற்ப அவை வேறுபடுகின்றன. அதாவது இயங்கும் சடப்பொருள் நமது புலன்களின்மீது செயற்படும்போது அவை நமது புலன்களின் பரிமாணத்திற்கேற்ப உணரப்படுகின்றன. உதாரணமாக கிட்டத்துப் பார்வையுள்ளவனின் கண்ணிற்குப் பொருள் அதற்கேற்பவே உணரப்படுகிறது. மொத்தத்தில் சமூக நடத்தைகள் அனைத்

திற்கும் இது பொருந்தும். இந்த அடிப்படையில் தான் பல்வேறு தொகுதி மக்களிடையேயுள்ள தேவை அல்லது பிரச்சினை பொதுமையில் எல்லோருக்கும் ஒன்றேயாயினும் அவ்வப்பகுதி மக்களின் இருக்கைக்கேற்ப அவையவற்றின் பாரம்பரியத்திற்கேற்ப வேறுபடுகின்றன, உணரப்படுகின்றன. அணுகப்படுகின்றன. இவை பல்வேறு தொகுதி மக்களிடையேயான பிணைப்பு முறிப்பிற்கான ஆளுமையைச் செலுத்துகின்றன. இந்த வகையில் இவை மனிதத் தொகுதிகளிடையில் உறவை நிர்ணயிப்பதிற் பங்கு வகிக்கின்றன. அரசியற் சுயநலமிகள் இதனைத் தம் நலனிற்காகப் பயன்படுத்துகிறார்கள். இதனால் ஏதோ ஓர் வகையிற் பலம் குறைந்த மக்கள் தொகுதிகள் நசுக்கப்படுகின்றன.

மார்க்ஸ் சமூகத்தில் வர்க்க உறவுமுறை இருப்பதைக் கண்டு பிடித்தார். இந்த மனித சமுதாயமானது புற நிலை யதார்த்தத்தால் நிர்ணயிக்கப் படுகின்றதென்றும் அப்புறநிலை யாதார்த்தந்தான் சமூகத்தை வர்க்கங்களாகப் பிரியவைத்துள்ளது என்றும் நிரூபித்தார். மார்க்ஸினுடைய இக் கண்டுபிடிப்பை ''வரலாற்றின் மாபெரும் முன்முயற்சி'' என்றும் லெனின் வர்ணித்தார். இது தத்துவத் துறையில் ஓர்புதிய அத்தியாயத்தையும், வரலாற்றுத் துறையில் ஓர் புதிய பாதையையும் தோற்றுவித்தது. புற நிலை யதார்த்தமென்பது மனித சித்தத்திற்கப்பால் உற்பத்தி, அதன் மறு உற்பத்தி என்ற வகையில் உருவாகும் சமூகத்திற்கேற்ப வரலாறு முன் தள்ளப் படுகின்றது. இவை அனைத்தையும் சாரம்சத்தில் சொல்வதென்றால் மனித ஆணையினால் புறநிலை யதார்த்தத்தை உடைக்க முடியாதெனபதுதான்.

உறவு முறையைப் பொறுத்தும் வர்க்க ஐக்கியத்தை பொறுத்தும் நோக்க வேண்டியுள்ளது. பல கட்டங்களில் நேர் எதிர் வர்க்கங்கள் கூட ஓர் குறித்த புள்ளியில் ஐக்கியப்பட்டுத் தம்மை ஒத்த வர்க்கங்களை எதிர்த்துப் போராடி வருகின்றன. ஏன் அழித்தும் வருகின்றன. சமூகம் வர்க்கங்களாகப் பிரிய முன்பு அதாவது ஆதிக்க சமுதாயத்தில் குலங்களாகவும் குழுக்களாகவும பிரிந்து நின்று ஒரு குழு மற்றய குழுவுடன் போராடியும் அழித்தும் வந்துள்ளது. இது சமூக இருக்கையிலிருந்து வரலாறு பிறப்பது மட்டுமல்ல அதனைக் கொண்டு பிறப்பிக்கப்படுவதும் கூட என்பதை நிருபிக்கின்றது. அதாவது மனிதன் தற்சார்புடையவன். அந்த அடிப்படையில் பிறரிற் சேர்க்கப்படும் தாக்கத்தை எண்ணிக் கவலைப்படாது சாத்தியமானவழிகளில் தம்மை அணிப்படுத்திக் கொள்கிறான். அவன் எதனை இலாபகரமானது எனக் கருதுகிறானோ அதற்கேற்ப அந்த அணியை எல்லைப் படுத்துகின்றான், விஸ்தரிக்கின்றான். புறநிலை யதார்த்தமே வர்க்கத்தின் பிறப்பிற்கும் அதன் ஆயுள் இறப்பிற்கும் காரணமாய் உள்ளமையால் புறநிலை யதார்த்தத்தை எல்லையாக வைத்து இதனை நோக்குதல் பொருத்தமுடையதாகும். மனிதன் தற்சார்புடைவன். இந்த வகையில் மேற் கட்டுமானமாகிய மொழி, மதம், அரசியல், கலாச்சாரம் என்பவற்றிற் காணைப்படும் பிரச்சினையையோ அன்றி பலவீனத்தையோ பயன்படுத்தி தம்மகத்தே அணியாகப் பிரிந்து கொள்கிறான். (மொழி. மதம், கலாச்சாரம் என்பன வாழ்வுடன் ஒட்டி உறவாடிக்கொண்டிருக்கும் வாழும் அம்சமாகும்) மொழி. மதம், கலாச்சாரம் என்பன பல்வேறு வர்க்கங்கட்குட்பட்ட ஓர் சமுகத்தில் ஓர் பொதுவான அம்சமாகக் காணப்படுவதால் இவ்வாறான பொதுமையின் அடிப்படையில் இணைதல் சாத்தியமாகி விடுகிறது இவை மேற் கட்டுமானமாக இருந்தாலும் கூட பிரச்சினையின் வளர்ச்சியில் அடித்தளமான பொருளாதாரம் வரை வியாபிக்கின்றன இதே போலத்தான் அடித்தளமான பொருளாதாரத்தில் ஏற்படும் அமுக்கமும் மேற்கட்டுமான பிரச்சினையாக தோற்றுவிக்கின்றன. இந்தியாவில் ஹிந்தி தேசிய மொழிக் கொள்கையின் பிரகாரம் தமிழ் நாட்டிற்கு ஹிந்தி மொழி பாடத் திட்டத்தில் கட்டாயமாக்கப்பட்டது. அதனைத் தமிழ் நாடு எதிர்த்தது. பின்பு அச்சட்டம் விருப்பத்துக்குரியதென மாற்றப்பட்டது. இதன் பின் மாநில அரசுகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் மத்திய அரசாங்கம் தமிழ் நாட்டின்மீது பாரபட்சம் காட்டியது. எனவே பிரச்சினை எம்மட்டதில் ஆரம்பித்தாலும் அது வலுவுள்ளதான பொருளாதாரத்தின்மீது தாக்கத்தை விளைவிக்காது ஒரு

போதும் இருப்பதில்லை. இவ்வாறு அணி திரள்தல் ஒரு புறத்தில்தான் முதலில் ஆரம்பிக்கப்படுமேயானாலும் மறு புறத்திற்கும் இயக்கவிசை ஏற்படுத்துவதாய் அமைய மறு அணி உற்பத்தியாகும். இவ்வாறாக அணி திரண்டதின் அடிப்படையில் பிரச்சினை சகல மட்டத்திற்கும் வியாபகமானதுடன் புற நிலை யதார்த்தத்தின் போக்கை அங்குமிங்குமாக தமக்கேற்ப வளைத்து எடுத்து விடுகிறார்கள். ஆனாலும் புறநிலை யதார்த்தத்தின் போக்கை உடைக்கமுடியாது இவ்வாறு வளைந்து நிமிரும் ஒவ்வொரு போக்கிலும் மக்கள் சுரண்டலுக்கு அப்பால் பெருவாரியாக அழிக்கப்படுகிறார்கள். அல்லது அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள். இங்கு மனித சித்தத்திற்கு முக்கிய பங்குண்டு. புறநிலை யதார்த்தத்தின் அளவு மாற்றம், பண்பு மாற்றமாகப் பரிணமிக்கின்ற அந்த எல்லைக்குள் மனிதன் பல குட்டிக் கரணங்களைப் போட்டு விடுகிறான். உள்ளபலவீனங்களுக்குள் தனது பௌத்தறிவு பூர்வமான சித்தத்தை புகுத்துகின்றான். இந்த இடத்தில் புறநிலை யதார்த்தத்தை மட்டும சிந்தித்துக் கொண்டிருக்காது யதார்த்தத்தை மனதில் கொண்டு அதற்கு முகம் கொடுத்தல் அவசியமானது. புறநிலை யதார்த்தத்தை மனதில் கொன்டு அதன் ஐந்நூறு, ஆயிரம் ஆண்டுகாலத் தீர்வையையே யோசித்துக்கொண்டிருக்கும் வேளையில் யதார்த்தத்தில் மக்கள் கூட்டம் அழிபடுகிறது. இன்று இந்தியாவில் கொம்யூனிசப் புரட்சிக்கான புறநிலை யதார்த்தம் அப்படியே காணப்படுகின்றது. ஆனால் புரட்சி நிகழவில்லை. ஏனெனில் அகநிலையில் இந்திய மக்களின் மனப்பாங்கு, ஜதார்த்தம் என்பவற்றிற் கேற்ப முரண்பாடுகள் முன்னெடுத்து செல்லப்படவில்லை. இது யதார்த்தம் பற்றிய பூரண அறிவை எமக்குத் தருகின்றது. புறநிலை யதார்த்தத்தை எல்லையாக விளங்கிக் கொண்டதன் அடிப்படையில் தான் யதார்த்தத்தை விளங்கிக்கொள்ளவேண்டும். வர்க்க பேதம் உள்ள சமூகத்தில் மொழி, மதம் ஆகிய எந்த அடிப் படையிலாயினும் மனிதன் அணியாக சேரும் போது அடக்கப்படும். அணியானது அல்லது ஆதிக்கத்திற்கு உட்படும் அணியானது சுரண்டல், அடக்குமுறை, ஆதிக்கம் என்பவற்றிற்கெல்லாம், முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது. அதேவேளை அடக்குமுறை செய்வதைச் சார்ந்துள்ள அணியானது தமக்குள் சுரண்டலிற்கு மட்டும் முகம் கொடுக்கும் அதே வேளையில் அடக்கப்படும் அணிக்குரிய சௌகரியங்களை தனக்குள் பங்கீடு செய்து கொள்கிறது. அந்த அடிப்படையில் இரண்டு அணிகட்கிடையே உள்ள எந்த வர்க்கத்தை எடுத்து நோக்குவோமானால் அவற்றினிடையே உள்ள முரண்பாடு தெளிவாக உள்ளமையால் அங்கு வர்க்க ஐக்கியம் சாத்தியமற்றதாய் விடுகிறது. அதாவது வர்க்கங்கட்கு இடையே உள்ள முரண்பாட்டை விட அணிகட்கிடையே உள்ள முரண்பாடும் இடைவெளியும் அதிகமாக உள்ளமையால் வர்க்க உறவைவிட அணி உறவு பெரிதாகவும், இறுக்கமானதாகவும் உள்ளது. [அணி உறவு என்பதனுள் மொழி, மதம், இனம், பிரதேசம், தேசிய இனம், நாட்டினம் என்பனயாவும் அடங்கும்.]

எனவே யதார்த்தத்தில் மனித சித்தத்திற்கு பாரிய பங்குண்டு என்பதன் அடிப்படையில் நசுக்கப்படும் மக்களை சாத்தியமான சகல வழிகளிலும் ஐக்கியப்படுத்தி நசுக்கும் அணிக்குள் அகப்பட்டிருக்கும் நல்ல சக்திகளும் நசுக்கப்படும் மக்களிற்காக ஐக்கியப்பட்டு, கலை, இலக்கியம் போன்ற சகல பொது சனத் தொடர்பு சாதனங்களையும் இவற்றிற்காக பயன்படுத்துவதுடன் நசுக்க முடியாததான ஓர் நெருக்கடியை ஏற்படுத்த மனிதனை தவறு செய்ய முடியாத ஓர் சூழ்நிலைக்கு தள்ள வேண்டும். சோக்கிரட்டிசோடு வாதாடுகையில் ''நீதி என்பது இயலாமையில் தான் நிர்ணயிக்கப் படுகின்றது.'' என கிளாக்கன் என்னும் சிறுவன் வாதாடினான். இக்கருத்து எல்லா இடத்திற்கும் பொருந்தாதாயினும், இவ் இடத்திற்கு மிகப் பொருத்தமானதே. இந்த வகையில் அணிகளுக்கிடையேயான உறவுமுறை யதார்த்தத்தில் வைத்து விளங்கிக்கொள்ள வேண்டியதாயும் அந்த உறவு அந்த நேரத்திற்கு மட்டுமாவது உண்மையானதாகவும் இருக்கும்.

இரத்த உறவு என்பது உண்மையில் மனித தற்சார் பாகுக்கான எல்லைப் படுத்தல்தான், குடும்ப உறவிலோ அன்றி இரத்த உறவிலோ இரத்தபாசம் என்று ஒன்று இல்லை. குடும்ப இரத்த உறவுமுறைகளை ஆராய்வோமானால் இதனை தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். ''தகப்பன் தாய் சகோதரன், சகோதரி என்ற சொற்கள் வெறும் மரியாதையை குறிக்கும் பட்டப்பெயர்கள் அல்ல அவை பரமதிட்பமான மிகக் கடுமையான பரஸ்பர கடமைகளை தாங்கிச் செல்கின்றன. அந்தக் கடமைகளின் முழுமை இந்த மக்கள் சமூகங்களின் சமுதாய அமைப்புத் திட்டத்தின் ஒரு முக்கிய பகுதியாக அமைந்துள்ளது, என்று 'எங்கெல்ஸ்' குறிப்பிட்டார் [மாட்சனின் ஆய்வைக் கொண்டே 'எங்கெல்ஸ்' இக் கண்டுபிடிப்பிற்கு வந்தார். குடும்ப உறவு முறையில் இருந்து இரத்த உறவு முறைவரை வியாபித்துச் சென்று வருவோமானால் இன்று நடைமுறை வரையுள்ள உண்மைகட்கு வரலாம், அதாவது மாமன், மாமி, சித்தப்பா, மச்சான், மச்சாள் என்றும் உறவு முறைகள் இறுக்கமான கடமைகளோடுதான் நிலை உயர்ந்துள்ளன. மாமன் மருமகனுக்கு பெண் கொடுக்க வேண்டியது அவரின் கடமை. மச்சான் மச்சாளை மணக்க வேண்டியது கடமை. அண்ணன் இறந்துவிட்டால் அவனது மனைவியையும், மக்களையும் பொறுப்பேற்று குடும்பம் நடத்த வேண்டியது, அவனிற்கு நேர் இளைய தம்பியின் கடமை. இவ்வாறு சமூகத்தின் தேவைக்கேற்ப கடமைகள் சுமத்தப்பட்டு அதன் அடிப்படையிலேயே இரத்த உறவு முறைகள் இறுக்கம் உள்ளவையாய் இருந்தன. ஆனால் இன்று குடும்ப உறவு முறைக்கு அப்பால் உள்ள மாமன், மாமி, மச்சாள், மச்சான், சித்தப்பா, சின்னம்மா என்பவற்றிற்கிடையே குறைந்து செல்கின்றது, இதன் அர்த்தம் இவற்றிற்கிடையே ஆன கடமைகள் குலைகின்றன என்பதுதான். உ+மாக மச்சான், மச்சான், மாமன் உறவு முறையை எடுத்துக் கொள்வோம். மச்சான் தான் தனது மச்சாள் மீது விரும்பியோ விரும்பாமலோ அவளை மணம் புரியவேண்டியது கடமை என வற்புறுத்தப்பட்டு இருந்தான். இதனால் அந்த உறவுமுறை மாமன், மருமகள், மச்சாள் என்ற நெருக்கம் இருந்தது, ஆனால் இன்று உறவு முறைக்கு அப்பால் திருமணத்தை நிர்ணயிப்பதில் பதவி, சீதனம், என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன. சீதனம் தலையெடுக்கையில் உறவு முறையின் ஐக்கியம் உடையத் தொடங்குகின்றது. இங்கு சீதனம் கொடுத்தால்தான் மச்சான் மச்சாளை மணம் புரிவான். அந்தஸ்திற்குரிய பதவி இருந்தால்தான் மாமன் தன்மகளை சீதனத்திற்காக பதிலீடு செய்து கொள்வான். இந்த நிலையில் பதவி சீதனம் என்னும் இரண்டும் ஒத்துவர முடியாத கட்டத்தில் அங்கு திருமணம் நிகழ முடியாது போகின்றது. எனவே இங்கு மாமன், மச்சாள், மச்சான் உறவு முறையின் அன்னியோன்னியம் உடையும் அதே வேளையில் எவ்வித இரத்த உறவு முறையும் இல்லாத இடத்தில் சீதனம் பதவியின் மூலம் திருமணம் நிர்ணயம் பெறவே, மாமன் மருமகள் என்னும் புது உறவு முறையும் உருவாகின்றது. இந்த அடிப்படையில் சித்தப்பா, சின்னம்மா என்னும் சகல உறவு முறையும் ஈடாட்டம் கண்டு தாய், தந்தை, சகோதரர்கள் என்னும் குடும்பத்திற்குள்ளேயே உறவு நின்றுவிடுகின்றது. ஆனால் இப்போ நிலவும் ரெத்த உறவுச் சொற்கள் (மாமன், மாமி, மச்சான்.) வெறும் மரபுச் சொற்களாகவே நிலவத் தொடங்குகின்றனவேயல்லாமல் இறுக்கமான அர்த்தத்துடன் அல்ல.

வரலாற்றடிப்படையில், இதனை நோக்குவோமானால் இதனை இன்னும் தெளிவாக உணர முடியும். வரலாற்றுத் தேவைக்கேற்ப மனிதன் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தான். எனவே கூட்டுக் குடும்பத்திற்கேற்ப அவன் கடமைகளில் ஈடுபடவேண்டியிருந்தது, இதனால் கூட்டுக் குடும்ப உறவு முறை நிலவியது. இன்று அத்தேவையற்றுப் போகவே அதற்கான கடமையும் அற்றுப் போக கூட்டுக் குடும்ப உறவு முறையும் அற்றுப் போகிறது. இங்கு மனிதன் கடமைகள் சுமத்தப்பட்ட உறவு முறைகளையே கொண்டிருந்தான். ஆனால் இன்று எவ்வாறு வரையறையற்ற திருமண உறவிலிருந்து சுருங்கி ஒருவனுக்கு ஒருத்தி என்ற திருமணமுறை வந்துள்ளதோ, அவ்வாறே இரத்த உறவும் குடும்பம்வரை சுருங்கிவிட்டது. மேற்கைத் தேசத்தில் ஒருத்தனுக்குஒருத்தி என்ற கட்டுக்கோப்பு குலைந்து வருகிற

தேயாயினும் அதற்குக் காரணம் தனி உடைமை வர்த்தகப் பொருளாதாரமே யாகும். தனியார் வர்த்தக சமூகப்பொருளாதார அமைப்பில் மனிதனும் ஓர் விலைப் பொருளுக்குச் சமனானவனாகி வருகிறான். அதன் வளர்ச்சி இவ்வாறான சீர்கேடுகளை கொண்டு வந்ததேயாகும். சமூகத்தின் சகலமட்டங்களிலும் புரட்சிகள் உருவாகி அதன் மூலம் சமூகம் சத்திரசிகிச்சை செய்யப்படவேண்டிய தேவைக்கு பரிணமிக்கும்.

முடிவாக இரத்த பாசம் என்ற ஒன்றில்லை. அவை கடமையின் சார்புடையன. ஏன் சகோதரபாசம் கூட அவ்வாறு தான். அவை தவிர்க்க முடியாத பரஸ்பர கடமைகளை குடும்பத்தில் கொண்டுள்ளமையால் நிலவுகின்றன. மேலும் அச்சகோதரங்கள் குடும்பத்திலிருந்து விலகி திருமணம் செய்து கொள்ளும் போது அங்கு பாசத்தின் நெருக்கம் குறைவடையத் தொடங்குகிறது. ஆனால் குடும்பமாக இருந்த காலச்திலிருந்த, நிலவிய நெருக்கமும் பழக்கமும் பின்பு மனப் படிமமாக நீடிக்கின்றது. எனவே மனிதன் படிப்படியாக சுமத்தப்பட்டிருந்த கடமைகளிலிருந்து விடுதலை அடைந்து வருகிறான். சமுதாயத்தின் உச்ச வளர்ச்சிக் கட்டத்தில் நட்பு என்னும் உறவுதான் தாய், பிள்ளை, கணவன், மனைவி என்பவற்றிற்கு சமாந்தரமாக அமையும். நட்பு என்பது சுமத்தப்படும் கடமையாக இருக்காது ஒருவன் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் கடமையாக இருக்கும். மேற்கூறிய இந்த உறவு முறைகளின் ஆக்கமும் பரஸ்பர கடமையின் அடிப்படையிலும் பரஸ்பர அன்பின் அடிப்படையிலுந்தான் நிலவும்.

எனவே மேலே அவதானித்த யாவற்றையும் கொண்டு உறவு முறை அனைத்திற்கும் அடிப்படையாகவும், பொதுவானதாகவும் இருப்பது புலனுணர்ச்சியின் அடிப்படையில் உருவாகும் எண்ணங்கட்கும் யதார்த்தத்திற்கும் இடையிலான போராட்டத்தில் அப் போராட்டத்திற்குத் தன்னுடன் சார்புடையவர்களுடனும் சார்புடையவர்களாக கருதப்படுபவர்களுடனும் மனிதன் அந்நியோன்னியமாக உறவாடுகின்றான் என்பதேயாகும். இவ்வடிப்படையின் தற்சார்புக்கமைய உறவுமுறை எல்லைப்படுத்தப்படுகிறது. விதிக்கப்படுகிறது இந்தவகையில் உலகளாவ விரிந்துள்ள ஒவ்வொரு மனிதன் மீதும் மனிதன் ஆதிக்கம் செய்ய முடியாதவாறு அமைப்பை ஏற்படுத்துவதும் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே நிர்ணயித்துக்கொள்கின்ற பூரண உச்ச சுதந்திரத்திற்கான பாதையில் ஒவ்வொருவனும் அக்கால கட்டத்திற்குரிய தனது பங்களிப்பைச் செய்யவேண்டியதுதான் மனித இனத்திற்கான உண்மையான கடமையாகும்.

1. — தத்துவம் தொடக்கப் பயிற்சிநூல் பக்: 203

2. — பிளேட்டோவின் குடியரசு

3. — குடும்பம் தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் பக்: 65

## காதலர் உள்ளம்

''சுனைவாய்ச் சிறுநீரை எய்தா தென்றெண்ணிப்
பிணைமான் பெரிதுண்ண வேண்டி — கலைமான்
கள்ளத்தால் ஊச்சும் சுரம் என்ப காதலர்
உள்ளம் படர்ந்த நெறி''

தமிழ் மன்றம் ஓங்கி வளர

எமது

வாழ்த்துக்கள்

சீவம்ஸ்

14 A, மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

யாழ் பல்கலைக் கழக
தமிழ் மன்றத்தின் பணி சிறப்படைய
வாழ்த்துகின்றோம்.

# யாழ் உலோகத் தொழிற்சாலை

250-254, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7049

# யாழ் மெற்றல் விற்பனை நிலையம்

6, நவீன சந்தை, — யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7596

அன்பளிப்பு :

# கமலா & பிறதர்ஸ்

**BOOKS & FANCY GOODS**

3, மக்கள் சந்தை,

பருத்தித்துறை.

★ டொலர் அலுமினியப் பாத்திர விநியோகஸ்தர்கள்
★ ஜனதா தேயிலை விநியோகஸ்தர்கள்
★ பஜாஜ் ஸ்கூட்டர் வடமாகாண விநியோகஸ்தர்கள்

மற்றும்

பித்தளை, சில்வர் கோவில் உபகரணங்கள்
றியோலக் பெயின்ற்
வல்லைத் துவாய்கள்
பரிசுப் பொருட்கள்

ஆகியவற்றுக்கு

# சிவன் ஸ்ரோர்ஸ்

80 (166), காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

# புற்று நோயும் அதன் தடுப்பு முறைகளும்

— எம். எஸ். எம். அஸ்லாஹ்
இரண்டாம் வருடம், விஞ்ஞானபீடம்

விஞ்ஞானம் வளர்ந்தோங்கிய இவ் விருபதாம் நூற்றாண்டிலே, வளர்மதியை வலம்வந்து விந்தைமிகு வினைகள் புரியும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் உச்சக்கட்டத்தில் வீறுநடை போட்டுக்கொண்டிருக்கும் இவ்வேளையில், விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிக் கண்ணோட்டம் புற்றுநோயின் பக்கம் சென்றிருப்பது மனிதனின் சுகாதார வாழ்க்கையின் ஒருபடி முன்னேற்றத்திற்கேதான் என்று அழுத்தமாகக் கூறிவிடலாம்.

இந்த நவநாகரிக யுகத்திலே புற்றுநோய் பலவாறாக உருவமெடுத்து மனிதனைத் தாக்கிக்கொண்டிருக்கின்றது. விலங்கினத்தைச் சேர்ந்த மனிதனின் வளர்ச்சி மிக நுட்பமாய்க் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதென்பது விஞ்ஞானிகள் அறிந்த ஓர் உண்மை. கலங்கள் தத்தம் நிலையை விட்டகலாது ஒத்துவாழும் இயல்பை ஒரு கலத்தின் சாதாரண வளர்ச்சியில் காணலாம். எனினும் சில கலங்கள் இப் பொறிமுறையைமீறி அளவு கடந்த வளர்ச்சியடைகின்றன. பொதுவாகக் கலங்களின் வாழ்க்கை வட்டம்-வளர்ச்சி, அனுசேபம், கலப்பிரிவு, இறப்பு என்ற நிலையில் நடைபெறுகின்றது. இவ்வாறாக நடைபெறும் நிலையில் திடீரென உடம்பிலொரு கலம் சீரற்றமுறையில் அதிவேகத்துடன் பெருக்கத் தலைப்படுகின்றது. அதன் காரணமாக அங்கே அசாதாரண கலக்கூட்டமொன்று அசாதாரணமாகத் தோன்றி ஒரு வளர்ச்சியைப் பரிணமிக்கச்செய்வதால் கலங்கள் சிதைவுற்று ஆரோக்கியமான உயிர் அணுக்களை சிதைவுறச் செய்கின்றன. இவ்வாறு நடப்பதால் கலங்களுக்குத் தத்தம் வேலைகளைச் செய்ய முடியாமல் இருப்பதாலும், குருதி, நிணநீர் போன்ற பதார்த்தங்கள் சிதைவுகளை ஏனைய உறுப்புக்களுக்கு எடுத்துச் செல்வதாலும் புற்று உடலிலே தோன்ற வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன.

தற்போது பரவி வரும் புற்றுநோய் மனிதனை மாத்திரமன்றி விலங்குகள், பறவைகள், மீன்கள் ஆகியவற்றையும் தாக்குகிறது. மனிதனின் உடலில் உள்ள இரத்தம் உட்பட பல இடங்களை இது பீடிக்கிறது. புற்றைப் பூரணமாகக் குணப்படுத்த முடியாவிடினும் அதனை ஓரளவுக்காவது தடுக்கக் கூடிய தடுப்பு நடவடிக்கைகள் இன்று உலகம் பூராகவும் செயற்பட்டு வருகின்றன. ஒருவகை வைரசுவால் உண்டாகும் எனக் கருதப்படும் இந்நோயை முற்றாகக் குணப்படுத்தப் பல முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

புற்றுநோய் மனித இனத்தைப் பல வழிகளில் தாக்குகிறது. முக்கியமாக இரசாயனப் பொருட்கள் புற்றுநோயை ஊக்கப்படுத்துவதாக அண்மைக் கண்டுபிடிப்புக்கள் சான்று பகர்கின்றன ஐதரோகாபன், நப்தைல் அமின், அமைனோபீனைல், கடுகு வாயு போன்ற பதார்த்தங்கள் கலங்களின் நிற மூர்த்தங்களில் உள்ள DNA என்ற பொருளைத் தாக்குவதால் புற்று ஏற்படலாம். DNA தாக்கப்படுவதால் கலங்கள் செயலற்றுப்போக வாய்ப்புக்கள் உண்டு. எனினும் சில வேளைகளில் கடுகுவாயு, பியுரின் எதிரிகள் போன்ற இரசாயனப் பொருட்கள் புற்றைக் குணமாக்கவும் பாவிக்கப்படுகின்றன. அளவுக்கதிகமான கதிர்வீசல்களும் புற்றை ஊக்கப்படுத்தும். உராய்வுக்கும், உறுத்தலுக்கும் அடிக்கடி இடங்கொடுக்கும் இழையங்களிலும் புற்றுநோய் ஏற்படலாம்.

இரத்தப் புற்றை எடுத்தால், சாதாரண மனிதனின் குருதியில் செங்குருதிச் சிறுதுணிக்கை வெண்குருதிச் சிறுதுணிக்கையிலும் கூடியளவில் காணப்படும். கலங்கள் சிதைவடைந்து குருதி கெட்டுப்போவதால் வெண்குருதிச் சிறுதுணிக்கை அதிகரித்து செங்குருதிச் சிறுதுணிக்கையை அழிக்க

முற்படும் இந்த நிலையில்தான் இரத்தப் புற்று உண்டாகிறது. இன்று இலங்கை மக்களிடையேயும் இரத்தப்புற்று காணப் படுவதாக வைத்திய அறிக்கைகள் கூறு கின்றன. இரத்தப் புற்று நோய் சம்பந்த மான ஆராய்ச்சி தற்போது அமெரிக்கா வில் மிக வேகமாக முன்னேறியுள்ளது. நோயாளியின் இரத்தத்தில் 'CEA' என்ற பதார்த்தம் இருந்தால் அவர் இந் நோயால் பீடிக்கப்பட்டுள்ளார் என்று சோதனை மூலம் காணலாம். இச்சோதனை "ரேடியோ இம்மியுனோஸே" என்று அழைக்கப்படும். ஒருவனின் குருதியில் 2·5 ng (நனோகிராம்) CEA இருந்தால் அவரின் உடலில் புற்றுநோய்க்கிருமிகள் உண்டென்பதை அறிந்து கொள்ளலாம். இரத்தப் பரிசோதனைமூலம் புற்றுவராமல் இருக்கும் வாய்ப்பு 35% இலிருந்து 90% அதிகரிக்க முடியும் என்று அமெரிக்க வைத்தியர் R. J. சிட்னி என்பவர் கூறி யுள்ளார். CEA என்ற பதார்த்தம் ஒரு வகைக் கட்டியால் உந்தப்படுகின்றது. கதிர்வீசல் மூலம் புற்றுநோய் கலங்கள் முற்றாக எரிக்கப்பட்டனவா இல்லையா என்பதை CEA சோதனையின் மூலம் அறி யலாம்.

அதிகளவு போதைப்பொருட்கள் மிட்டாய்கள் பாவிப்பதும் புற்றை ஏது வாக்குகின்றது. "சாக்ரீன்", "சைக்ள மேட்" என்ற இரு நொதியங்கள் மிட் டாய்களில் 50% காணப்படுகின்றன. இவைகளை அதிகம் உட்கொண்டால் பசி யின்மை, வயிற்று நோ, மயக்கம் முதலிய வற்றை ஏற்படுத்தும். இவைகள் சிறு நீர் புற்றை ஏற்படுத்துவதாக அமெரிக்க விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

புகையிலை பாவிப்பது நுரையீரல் புற் றுக்குக் காரணமாகின்றது. புகையிலையில் உள்ள நிகொட்டின், தார் என்ற இரு நஞ் சுப்பொருட்கள், நுரையீரலைத் தாக்கும். சிகரெட் புகைப்பவர்களில் 70% ஆனோ ருக்கும், புகைக்காதவர்களில் 20% ஆனோ ருக்கும் புற்று உண்டாவதாக ஆராய்ச்சி களின் முடிவுகள் நமக்கு உணர்த்துகின் றன. "நீர்பற்றவைக்கும் சிகரெட் உமக்கு வைக்கப்படும் கொள்ளி என்றறிக" என்று சில நாடுகளில் சிகரெட் விளம்பரப்படுத் தப்பட்டுள்ளது எமது நாட்டிலும் இதைக் கைக்கொண்டால் சிகரெட் புகைப்பவர் களை ஓரளவுக்குக் குறைக்கலாம். சுருட் டுப் புகைப்பதாலும் தாடைப்புற்று உண் டாகிறது. புகையிலை வெற்றிலை போடுத லும் புற்றை ஏற்படுத்தும். வெற்றிலையை அதிக நேரம் வாய்க்குழிக்குள் வைப்பதால் வாய்க்குழியில் உள்ள சீத மென் சவ்வு கள் சிதைவுறுவதாகக் கண்டு பிடிக்கப்பட் டுள்ளது. அத்துடன் வெற்றிலையுடன் பாவிக்கும் சுண்ணாம்பில் உள்ள இரசாய னப் பொருளும் சவ்வுகளைத் தாக்கும்.

பெண்களைப் பொறுத்தவரையில் புற்றுநோய் வருவது ஆண்களிலும் அதிக மாயினும், முற்றாகக்குணமடையும் வாய்ப் புக்கள் இவர்களில் அதிகம். பெண்களில் முக்கியமாக மார்பகம், கருப்பை, இடுப்பு வளையம் போன்றவற்றில் புற்றுநோய் உண்டாகிறது. கருப்பையிலும், கருப்பைக் கழுத்திலும் உண்டாகும் புற்று மார்பகப் புற்றை ஏற்படுத்தும். விவாகம் ஆகிய வர்களுக்கு கருப்பையில் கூடுதலாகப்புற்று ண்டாகும். விவாகமாகாதவர்களுக்கு மார் பகத்தில் அதிகளவு புற்றுஏற்படும். எனவே விவாகமாகாமல் இருந்து புற்றைத் தவிர்க் கலாம் என்பதில் உண்மையில்லை. இடுப்பு வளையத்தில் உண்டாகும் புற்று 35 - 60 வயதான பெண்களின் மரணத்திற்குக் காரணமாக அமைகின்றது. இவர்கள், ஏதாவதொரு இடத்தில் புற்று தோன்றும் அறிகுறிகள் இருந்தால் உடனே மருத்து வரைக் காணவேண்டும். ஆனால் பெண்கள் இவ்வாறு சோதனை செய்தால் அவர் களுக்கு அபாயம் தோன்றுது. சில இனத் தைச் சேர்ந்த பெண் சுண்டெலிகளிடம் முலைப்புற்று காணப்பட்டதால் பல ஓமோன்களைச் சுரக்கும் சூலகத்தை அகற் றியவுடன் இது குறைந்தது. பெண்களுக்கு இவ்வகற்றல் தற்போது பரீட்சாத்தமாக செய்யப்பட்டு வருகின்றது. அதேபோல் நலந்தட்டுவதன் மூலம் ஆண்களில் சில வகைப் புற்றைக் குணமாக்கியுள்ளனர்.

புற்றுநோய் அண்டக்கதிர் (Cosmic Ray) களினாலும் உண்டாகலாம். கிளர்மின் வீசல் தரையிலும், குடிநீரிலும் அதிகளவில் காணப்படும். ரேடியம், ரேடியோத்தோரி யம், அணுகுண்டிலிருந்து வெளியேறும்

துரந்தியம் போன்றன உணவின் மூலமாக என்பிற்சென்று செறிவடைந்து என்புப் புற்றை ஏற்படுத்தும்.

ஓமோன்களையும் தூண்டுமுட்சுரப்புக்களையும் சுரக்கும் கபச் சுரப்பிகள் சரியான முறையில் சுரப்புக்களைச் சுரக்காமல் அல்லது அதிகளவு சுரப்பதாலும் முதியோர்களுக்குப் புற்று ஏற்பட வாய்ப்புக்கள் உள.

புற்றுநோய் ஏற்பட்டவுடன் அதன் ஆரம்பப் படிகளில் தடுப்பு நடவடிக்கைகளை உபயோகிப்பதன்மூலம் கட்டுப்படுத்தலாம். எனவே இதற்குரிய அறிகுறிகள் கண்டவுடன் உடனே மருத்துவரைக் காண வேண்டும். பசியின்மை, வயிற்றோட்டம், உடல் மெலிவு, திடீரென அஜீரணக் கோளாறு, கட்டிகள், ஆறாத புண், புண் ஆறி மீண்டும் வரல், தலைவலி நீடித்தல். 3 மாதங்களுக்குமேல் தொண்டைக் கம்மல் இருத்தல், உணவு விழுங்குவதில் கஷ்டம், வாந்தி, சிறுநீருடன் இரத்தம்வரல், நாக்கில் வெண்ணிறப் புள்ளி, தோலில் மாற்றம், சளியுடன் இரத்தம், மருநிப்பெருக்கு போன்ற அறிகுறிகள் தோன்றினால் உடனே வைத்தியசாலைக்குப் போய் தனக்குப் புற்று ஏற்பட்டிருக்கின்றதா என்று சோதித்துக் கொள்ள வேண்டும். கவலை கொள்ளக்கூடாது. புற்றிலும் மேற்கூறப்பட்ட அறிகுறிகள் தோன்றலாமேயன்றி இவை அதற்குரிய தனிப்பட்ட அறிகுறிகளல்ல. ஏனெனில் எண்ணெய்ச் சுரப்பிகள் அடைப்பட்டாலும் வீக்கம் வரலாம். இன்னமப் பொருட்களில் எமது உறுப்புக்கள் மோதினாலும் வீக்கம் வரலாம். தொண்டைக் கரப்பன் ஏற்பட்டாலும் தொண்டையில் நோ வரலாம். அசிரணம், எடைகுறைதல், மலக்கட்டு போன்றனவும் புற்றின் அறிகுறிகளாகும்.

புற்றுநோய்க்குரிய தடுப்பு முறைகள் இப்போது பரவலாக அதிகரித்தவண்ணம் இருக்கின்றன. சிகரெட், புகையிலை, வெற்றிலை பாவிப்பை நிறுத்தவேண்டும். நகர்ப்புறங்களில் காற்று, வாவிகள், நீர்த்தேக்கங்கள் அசுத்தமாவதால் கிருமிகள் உண்டாகிப் புற்றை ஏற்படுத்தலாம். எனவே அவற்றைப் பாதுகாக்கவேண்டும். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இரசாயனப் பொருட்களை உபயோகத்திற்குக்கொண்டு வரமுன் அவற்றைப் பாவிப்பதால் புற்று ஏற்படுமா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். பற்கள் அழுக்கடையாமல் பாதுகாக்கவேண்டும். தார்போட்ட இடங்களில் மிதியடிகள் இன்றி நடத்தல் கூடாது. இது கால் பாதங்களில் புற்றை ஏற்படுத்தலாம். சிறுநீர்ப் புற்றை ஏற்படுத்தும் அதிகளவு மிட்டாய்களைச் சிறு பிள்ளைகள் பாவிப்பதைக் கட்டுப்படுத்தவேண்டும். பெண்களுக்கு மாதவிடாய் நின்று பல ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் வந்தால் மருத்துவருக்குக் காட்டவேண்டும். எவ்விதக் காரணமுமில்லாமல் உடல் மெலிவு ஏற்பட்டாலும் தலைவலி நீடித்துக் குணமாகாமலிருந்தாலும் மருத்துவரிடம் தெரிவிக்கவேண்டும். தொடர்ந்து தொண்டைக் கம்மல் இருப்பின் குரல் பெட்டியைப் பரிசோதிக்கவேண்டும். கச்சிதைவு செய்வது தடுக்கப்படவேண்டும். இன உறுப்பின் நுனித்தோலில் உள்ள ''செமிம்மா'' என்ற வெண்ணிறப் பொருள் புற்றை ஏற்படுத்தலாம். எனவே அதை அகற்றவேண்டும். அத்தோடு இறுக்கமான ஆடைகளை அணிவதால் கலங்களின் வளர்ச்சி கட்டுப்படுத்தப்படுகிறது. இதைத் தடுக்கவேண்டும். எப்படியும் ஒரு வருடத்திற்கொருமுறை தம்மைப் பரிசோதித்துக்கொள்ளவேண்டும்.

சூரிய ஒளி ஸ்நானம் செய்பவர்களுக்கும் புற்று ஏற்படும் என்று அண்மைய ஆராய்ச்சிகள் கூறுகின்றன. பல நிறங்களால் ஆக்கப்பட்ட சூரிய ஒளியில் 'அல்ட்ரா வயலட்' (Ultra Violet) என்ற ஒளிக்கதிர் கறுத்தத் தோலில்லாத அனைவருக்கும் பொருந்துவதில்லை. எனவே சூரியஒளி ஸ்நானம் செய்யும் வெள்ளையர்கள் முகமூடி அணிந்துகொள்வதன்மூலம் தோலில் உண்டாகும் புற்றைத் தவிர்க்கலாம்.

கதிர் இயக்கத் தடுப்பு முறைகள் பெருகிக்கொண்டிருக்கும்போது புற்றை எளிதில் தடுக்கமுடியும். X-கதிர் முற்றுகப் புற்றுநோய்க்கலங்களை எரிக்காமலிருப்பதாலும் வேறு கலங்களைப் பாதிப்பதாலும் ஆழ்ந்த X-கதிர் (Deep X-Ray) என்ற கதிர்வீசல் முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மிருகங்களுக்குக் கதிர்வீசல் முறை பரீட்சார்த்தம் செய்யப்பட்டு 1967ஆம் ஆண்டு வில்சன் என்ற அமெரிக்க விஞ்ஞானியால் வெற்றி

காணப்பட்டது. ஜேர்மனியில் X-கதிருக்குப் பதிலாக புரோத்தன் கதிர்வீசலான துணிக்கை உபயோகிக்கப்படவுள்ளது. X-கதிரினுல் புற்று நோயாளியின் ஆரோக்கிய இழையங்கள் பாதிக்கப்படுகின்றன. புரோத்தன் கதிர் ஆரோக்கிய இழையங்களைப் பாதிக்காது. இரசாயன மூலகங்களில் ரேடியம், கோபாற்று போன்றனவும் கதிர் வீசல் முறைக்குப் பாவிக்கப்படுகின்றன. காமா, பீற்ரு போன்ற கதிர்வீசல் துணிக்கைகளும் பாவிக்கப்படுகின்றன. ருஷியாவில் உள்ள விஞ்ஞான மருத்துவ அகடமியும், ராஜாங்க அணுசக்தி நிலையமும் இணைந்து புற்றுக்குரிய மருந்துகள் கண்டு பிடித்து வருகின்றன. கதிர் வீசல்களுக்கு நவீன கருவிகள் தேவையாகையால் ருஷியாவில் அக்கருவிகள் எடுக்கப்பட்டு ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

ஆரம்பத்தில் புற்றுநோய் கண்டுபிடிக்கப்பட்டால் சத்திர சிகிச்சைமூலம் குணப்படுத்தலாம். இல்லாவிடில் பக்கத்திலுள்ள உறுப்புக்களுக்குப் பரவும். அந்நிலையில் ரேடியம், கோபாற்று, ஆழ்ந்த X-கதிர் முதலிய சிகிச்சைகள் செய்யவேண்டும். இம்முறையால் புற்றைக் கட்டுப்படுத்தலாமேயொழிய அறவே அழிக்க முடியாது. இவ்வாறு செய்தவர்கள் 3 மாதங்களுக்கொருமுறை சிகிச்சை பெறவேண்டும். அப்போது புது இடங்களின் வருவதைக் கண்டு பிடித்து சிகிச்சை பெறமுடியும். ஆரம்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் உயிருக்குப் பாதுகாப்புக் கிடைக்கும்.

எமது இலங்கையைப் பொறுத்தவரையில் ஆராய்ச்சிகளுக்குரிய உபகரணங்களும் இங்கில்லை. வெளிநாடுகளிற் செய்யப்படும் ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளையும் இங்கு பரீட்சார்த்தமாகச் செய்யக்கூடிய அளவுக்கு மருத்துவம் விருத்தியடையவில்லை. இலங்கையில் சில மூலப்பொருட்கள் இருந்தும் அவற்றைப் பாவிக்கும் முறை தெரியாமலிருக்கின்றோம். இரத்தத்தில் ஏற்படும் புற்றுக்கு "வின்கிறிஸ்ரீன்" என்ற புதிய மருந்து பாவிக்கப்படுகிறது. இது எமது மருத்துவ நிலையங்களில் இல்லையாகையால் பல ஆயிரம் ரூபா செலவில் இறக்குமதி செய்யப்படுகிறது. வரண்ட பிரதேசத்தில் வளரும் பட்டிப்பூ மரத்தால்தான் இது செய்யப்படுகிறது. அம்மைக்குப் பால் கட்டுவதுபோல் புற்றுக்கும் பால்கட்டும் முறை நடைமுறைக்கு வருமென்று ஜீ. ஐ. அபேலேவ் என்ற சோவியத் பேராசிரியர் கூறியுள்ளார்.

மனித இனத்தின் வாழ்க்கைச் சுடரை அணைத்து அவ்வினத்தைத் துன்ப இருளில் துடிதுடிக்க ஆழ்த்தும் கொடுமை வாய்ந்த புற்றுக்கு ஒரு முடிவுநிலை வருமென்பது விஞ்ஞானிகளின் அயராத ஆராய்ச்சிகளிலிருந்து காணமுடியும். உடலின் ஒருங்கமைப்பு வியாதி எனக் கூறப்படும் புற்று நம்மில் வருமுன் நாம் அதன் அறிகுறிகளை அறிந்து அதற்குரிய தகுந்த தடுப்பு நடவடிக்கைகளை எடுத்தால்தான் எம்மை இந் நோயிலிருந்து தடுத்துக்கொள்ள முடியும். மேலும் நவீன கருவிகள் மூலம் ஆராய்ச்சிகள் அதிகமாகி, சிகிச்சைகள் பெருக மருத்துவ நிபுணர்கள் மட்டுமன்றி, இரசாயன, உயிரியல் நிபுணர்களும் இத்துறையில் பங்கெடுத்து உழைக்கவேண்டும். நகருக்குநகர் புற்றைப் பற்றிப் பிரச்சாரம்செய்து மக்களுக்கு அறிவுரைகள் வழங்க வேண்டும். இலங்கையில் தற்போது உள்ள புற்று நோய்ச் சங்கம் (Cancer Society) பல பிரசார வேலைகளில் ஈடுபடுகிறது. ஒவ்வொரு மருத்துவர்களின் மருத்துவ மனையும் புற்று நோய்த் தடுப்பு நிலையமாக மாறினுல் புற்று நோயைப் பூண்டோடு ஒழித்துக் கட்ட முடியும் என்பது ஆராய்ச்சியாளர்களினது திடமான நம்பிக்கையாகும்.

---

திருமணம் : பணத்தை ஆணும், பதவியைப் பெண்ணும் புணர்வது.

— புவனு

காதல் : சொல்லில் அழகும், செயலில் அசிங்கமும் உள்ளது.

— திருநா

முல்லைத்தீவு ஐஸ் பாவனையாளர்களின்
நன்மதிப்பைப் பெற்ற
ஒரேயொரு ஸ்தாபனம்

# ஞானம் ஐஸ் மில்

பிரதான வீதி,
முல்லைத்தீவு.

✲ பாடசாலை உபகரணங்கள்
✲ சாய்ப்புச் சாமான்கள்
✲ சில்லறைப் பொருட்கள்
✲ வர்ண வகைகள்
✲ இரும்புப் பொருட்கள்

குறைந்த விலையிற் பெற
இன்றே நாடுங்கள்,

ராஜா ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி,
தம்பிலுவில் - 2

கி மா.

✲ சிறந்த அலுமினியப் பாத்திரங்கள்
✲ பலசரக்குச் சாமான்கள்
✲ சாய்ப்புச் சாமான்கள்

சகாயமான விலையில்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ராஜினி ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி,
முல்லைத்தீவு.

யாழ் வளாகத் தமிழ் மன்ற
மலரான செந்தழலுக்கு
எமது நல்லாசிகள்.

நாதன் ஸ்ரோர்ஸ்

உரிமையாளர்: திரு. பாக்கியநாதன்

பிரதான வீதி,
முல்லைத்தீவு.

YOGA
Jewellery
Works

யோகா
நகைத் தொழிற்சாலை

132, பிரதான வீதி,
முல்லைத்தீவு.

உரிமையாளர்கள்:
க. நவரத்தினம்
ந. வித்தியானந்தராசா

# தமிழ் விழாக் கோலங்கள்

1978 ஆம் வருடம் மே 6ம் 7ம் திகதிகளில் எமது மன்றம் தனது வருடாந்த விழாவை 'தமிழ் விழா' 'என்னும் பெயரில் நடாத்தியது. எமக்கு முந்திய செயலவை வருடாந்த விழாவை 'முத்தமிழ்க் கலைவிழா' என்னும் பெயருடன் கொண்டாடிய போதும் எமது செயலவை 'தமிழ் விழா' என்னும் பெயரே பொருத்தமானது எனத் தேர்ந்தெடுத்தது. அத்துடன், பொருட்காட்சி ஒன்றும் சிறப்பம்சமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

எமது சமுதாயத்திற்கு அவசியமானதும் பயன்தரக் கூடியதுமான நிகழ்ச்சிகளாகவே தமிழ் விழாவின் நிகழ்ச்சிகள் அமையவேண்டும் என்பது எமது ஒரே நோக்கமாக இருந்தது. இந் நோக்கங்களுடனேயே கவியரங்கு, ஆய்வரங்கு, கருத்தரங்கு, வழக்குரை மன்றம், பொருட்காட்சி ஆகியவற்றுக்கான தலைப்புக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

விழாவின் முதல் நாள் காலை நிகழ்ச்சிகளுக்கு பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களும், மாலை நிகழ்ச்சிகளுக்கு பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் அவர்களும்; இரண்டாம் நாள் காலை நிகழ்சிகளுக்கு திரு. த. இராசலிங்கம் (தே. பே. உ. உடுப்பிட்டி) அவர்களும் மாலை நிகழ்ச்சிகளுக்கு பேராசிரியர் சோ. செல்வநாயகம் அவர்களும் பிரதம விருந்தினர்களாக அழைக்கப்பட்டனர்.

**விழாவில் விளங்கியவை**

**கவியரங்கு :** 'நாளை மலரும் நம் வாழ்வு'— இது எமது நினைப்பு. எமது கவியரங்கின் தலைப்பு. மன்றச் செயலவை உறுப்பினர் மாலினி கந்தசாமியின் தலைமையில் வ. ஐ. ச. ஜெயபாலன், புரட்சி மாறன், கோப்பாய் சிவம், காசி ஆனந்தன் ஆகியோர் கவி மழை பொழிந்தனர்.

**ஆய்வரங்கு :** 'தமிழர் வாழ்வும் வளமும்' — ஆராயப் படவேண்டிய ஒன்று. ஆய்வரங்கின் சிரமானது அன்று. மன்றப் பெரும் பொருளாளர் திரு. இ. முத்துத்தம்பி அவர்களின் தலைமையில் அலசி ஆராய்ந்தனர் பின்வரும் விரிவுரையாளர்கள். வரலாறு: பேராசிரியர் கா. இந்திரபாலா, புவியியல்: திரு. சிவ. தட்சணாமூர்த்தி, பொருளியல்: திரு. என். பாலகிருஷ்ணன்; இலக்கியம்: திரு. நா. சுப்பிரமணியம்

**வழக்குரை மன்றம் :** 'குற்றக் கூண்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி'
குற்றம்: 'தமிழ் ஈழத்தை மீட்கும் பணியில் தமிழர் விடுதலைக் கூட்டணி தவறிழைத்து வருகிறது.'

வாதத் தரப்பில் திரு. அ. குமரன்
திரு. ந. சிறிகாந்தா
திரு. ந. சிவராஜன் ஆகியோரும்

பிரதிவாதத் தரப்பில் திரு. பொ. கணேசமூர்த்தி
திரு. கனக. மனோகரன்
திரு. க. சிவதாசன் ஆகியோரும்

தமது வாதங்களைத் திறம்பட நடத்தினர். பல மணி நேரமாக நடந்த இந்த நீதிமன்றத்துக்கு, வருகை தந்திருந்த எமது பார்வையாளர்கள் அனைவருக்கும் இடவசதி செய்து கொடுக்க எம்மால் முடியாமல் போய்விட்டது. பார்வையாளர்களின் பலத்த கரகோஷங்களுக்கிடையில் மிக வும் விறுவிறுப்பாக நடந்த இந் நிகழ்ச்சியே விழாவின் சிகர மாக அமைந்தது எனலாம்.

வளாக விஞ்ஞான மாணவியரின் மெல்லிசையும், செல்வி. சு. இராசலட்சுமியின் மெல்லிசையும்; வளாக நுண்கலைப் பிரிவைச் சேர்ந்த செல்வி ஸ்ரீமதி கந்தையாவின் பாட்டும், செல்வி. கிளேரா அருளானந்தத்தின் வயலின் இசையும் எமது எதிர்கால இசை வானின் நம்பிக்கை நட்சத்திர மாகத் திகழ்ந்தன.

வளாக நுண்கலைப் பிரிவு மாணவன் திரு. ரி. சீலன் அவர்களின் வீணை இசை ஒரு தனி இடத்தைப் பிடித்துக்கொண்டது.

வளாக நுண்கலைப் பிரிவு மாணவர்கள் சேர்ந்தளித்த 'கான மாலிகா' இசை நிகழ்ச்சி இரசிகர்களை இவ்வுலகை விட்டு இசை உலகிற்கே அழைத்துச் சென்றுவிட்டது இதை எமக்குத் தயாரித்தளித்த நுண்கலைப்பிரிவு பகுதிநேர விரிவுரையாளர் திரு. வீ. கே குமாரசாமி அவர்களுக்கு எமது மன்றம் கடமைப்பாடுடையது.

நடனம்: நாட்டிய கலாகேந்திரம் மாணவிகளால் வழங்கப்பட்ட பல வித மான நடனங்கள் பார்ப்போரின் கண்ணுக்கும் காதுக்கும் பெரும் விருந்தாக அமைந்தன. இதில் தனிப்பட்ட அக்கறையுடன் சிரமம் பாராது எமக்காக இதனைத் தயாரித்தளித்த திருமதி, கிரு-ஷாந்தி ரவீந்திரா அவர்களுக்கு எமது மன்றம் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் சேவைகளை எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றது.

வில்லுப்பாட்டு: 'கம்பன் கண்ட தமிழ் விழா' என்னும் தலைப்பில் வவுனியா கண்ணாட்டியைச் சேர்ந்த ராஜன் குழுவினரால் நடாத்தப்பட்ட வில்லுப்பாட்டு இரசிகர்களை மிகவும் கவர்ந்த நிகழ்ச்சியாக அமைந்தது. இதனை ஒழுங்கு செய்த எமது மாணவன் வீ. குண சேகரன் அவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

நாட்டுக்கூத்து: மன்னாரில் புகழ் பெற்ற 'பாஞ்சாலி சபதம்' எனும் நாட்டுக்கூத்தை 'சூதாட்டம்' என்னும் பெயரில் தமது விடாமுயற்சியினால் எமக்களித்த எமது மாணவர்கள் எட்வர்ட் பீரிஸ், ஆனந்தன் சோசை ஆகியோருக்கு எமது நன்றிகளும், பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.

நாடகம்:

,மாணவா,: மாணவர் சமுதாயத்தின் சீர்கேடுகளைத் தெட்டத் தெளிவாக எளிமையாக, புதிய முறையில் எமக்களித்த எமது மாணவன், திரு. வரதராஜப் பெருமாள் அவர்களுக்கு எமது நன்றி கலந்த பாராட்டுக்கள்.

'தூண்டில்': முழுக்க முழுக்க புதிய உத்திகளைக்கொண்டு தயாரிக்கப்பட்ட நாடகம். அரசியல் ஏமாற்று வித்தைகளை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதுபோல் எமக்களித்த எமது மாணவன் திரு. மு. திருநாவுக்கரசு அவர்களுக்கு எமது நன்றிகளும், பாராட்டுகளும். அவரது முயற்சிகளை மீண்டும் மீண்டும் எதிர்பார்க்கின்றோம்.

விழா சிறப்பாக அமைய இரவு பகலாகப் பாடுபட்டுழைத்த எமது மன்ற அங்கத்தவர்களுக்கும், ஏனையோருக்கும் நாம் மிகுந்த கடமைப்பாடுடையோம்.

இறுதியாக, விமர்சனம் செய்யும் மன்றங்களின் நிகழ்ச்சி நிரல் முடிவுற்ற வேளையில், தமிழ் விழாவில் இடம்பெற்ற நாடகங்களையும், நாட்டுக்கூத்தையும் விமர்சனம் செய்த அறிவியற் கழகத்திற்கு எமது மன்றம் 'தனிப்பட்ட' நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஆ-ர்
(தமிழ் விழாக் குழு சார்பில்)

## 1. களத்தில்...

(இ. மே) 'சிவனு இலட்சுமணன்' கொலை செய்யப்பட்டதை எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலம்.

(வ. மே) சிங்களவரால் எரிக்கப்பட்ட 'டெல்டா' தோட்டத்தில் நிவாரணப் பணி.

(இ. கீ.) 'தீ 77' வெளியீட்டு விழா.

(வ. கீ.) 'தந்தை செல்வா'வின் அஞ்சலி ஊர்வலம்.




## 2. மேடையில்...


(இ. மே.) பாஞ்சாலி சபதம் நிறைவேறியது பாரதப் போரில். தாயகம் மீட்கும் எமது சபதம்?

(வ. மே.) மாணவர்கள் ஆர்ப்பாட்டம்; ஆசிரியர் திண்டாட்டம்.

(இ. கீ.) பனிவளம் கண்ட பின்பும் பயப்படலாமோ நாம்?

(வ. கீ.) கிழக்கின் சூறாவளி அகதிகளல்ல. கலவர அகதிகள். அவர்களுக்குத் தூண்டில் போடுகிறார்கள் அரசியல்வாதிகள்;





தமிழ் மன்றத்திற்கு எமது வாழ்த்துக்கள் !

# PEARL METAL INDUSTRIES

Manufactures of High Class Aluminium, Brass,
Stainless steel stensils.

## பேள் உலோகத் தொழிற்சாலை

60, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

எந்த விதமான இயந்திரங்களும்
பழுதுபார்த்துக் கொடுக்கப்படும்.

எலெக்றிக் வெல்டிங் வேலைகள்
குறித்த நேரத்தில் திருத்தமாகச்
செய்து கொடுக்கப்படும்.

## ஜயந்தி மோட்டோர்ஸ்

பிரதான வீதி,
கல்முனை, — காரைதீவு.

விவசாயப் பெருமக்களே !
குடும்பஸ்தர்களே !

நியாயமான ஊதியத்திற்கு
அதி விஷேசமான சேவை.

எல்லாவிதமான திருத்த வேலைகளும்,
சகல மின்சார ஒப்பந்த வேலைகளும்
ஓடருக்குச் செய்துகொடுக்கப்படும்.

## எமிலியானுஸ்பிள்ளை தொழில் நுட்ப நிலையம்

ஊர்காவற்றுறை.


உங்கள் சகலவித வைபவங்களையும் ஞாபகத்தில் இருத்த
அழகிய சிறந்த புகைப்படங்களை எடுக்க
சிறந்த இடம்



# செல்லம்ஸ்

95, 96, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வானொலி சிறப்பாக இயங்க
சிறந்த நிபுணத்துவமுடைய
வல்லுனர்களைக் கொண்ட
ஒரேயொரு ஸ்தாபனம்,



## ஈஸ்வர் கோப்பரேசன்

18, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

☎ 7308

யாழ். பல்கலைக்கழக
தமிழ் மன்றத்தின்
ஈராண்டு நிறைவை
வாழ்த்துகின்றோம்.

## முருகன்
## எலெக்றிக்கல் ஸ்ரோர்ஸ்

(மின்சார ஒப்பந்தகாரரும்
விற்பனையாளரும்)

6/8, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தந்தி: 'கறண்ட்' தொலைபேசி: 7110

# தமிழர் வாழ்வும் வளமும்

பிரித்தானியரிடமிருந்து மீளப்பெற்ற எமது ஆளுமையை, அரசியற் சுதந்திரத்தை, அனுபவிக்க முடியாது, 20 வருடங்களாக சிறீலங்காவிற்கு அடிமைகளாகி அல்லற்பட்ட பின்பும், இன்னமும் இன ஒற்றுமை, சகோதரத்துவம் என்று கூச்சலிடும் சுலநலக் கும்பல்கட்கும், விடுதலையின் அவசியத்தை உணர்ந்தும் கஷ்டங்களை எதிர்நோக்கத் தயங்கும் சில மேல்மட்ட மத்திய தரத்தினருக்கும், தமிழ் ஈழத்தை மீட்க சிறீலங்கா பாராளுமன்றம் செல்லும் தமிழ்த்தலைவர்களின் வார்த்தை ஜாலங்களில் மயங்கி செயலற்று நிற்கும் இளைஞர்சட்கும் தெளிந்த சிந்தனையையும் செயலார்வத்தையும் ஊட்டுவதாயமைந்திருந்தது இப் பொருட் காட்சி.

இளம் நெஞ்சங்களின் விடுதலை வேட்கைக்கு ஒரு 'வடிகாலாகவும் செயற்திறனுக்கு எடுத்துக் காட்டாகவும் அமைந்த இப்பொருட்காட்சியின் முக்கிய நோக்கம் தமிழ் ஈழ பொருளாதார வளங்களை முழுமையாக எடுத்துக் காட்டுவதும், அதன் விருத்திக்கு வித்திடுவதுமேயாகும். அத்துடன் குரும்பசிட்டி திரு. இரா. சனகரத்தினம் அவர்களின் பத்திரிகை வெட்டுகளும் தமிழ் ஈழ தரை அமைப்பு பற்றிய விளக்கப் படங்கள் சிலவும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

1949-ல் சுதந்திரத்தின் பின், ஈழத் தமிழரின் வரலாறு முழுவதையும் எடுத்துக் கூறுவதாய் அமைந்திருந்தன பத்திரிகை வெட்டுக்கள். சிறீலங்கா அரசியல் பின்னணிகள், தமிழ் ஈழத்தில் அதன் தாக்கம், அரசியல் கட்சிகளின் தோற்றம் வளர்ச்சி, தலைவர்கள் பற்றிய செய்திகள் போன்றவற்றுடன், மறக்கமுடியாத இனக்கலவர செய்திகளும் காணப்பட்டன அத்துடன் காலவோட்டத்தில் மறக்கப்பட்ட, மறக்கடிக்கப் பட்டவற்றை நினைவூட்டி எழுச்சியூட்டவும் இவை உதவின.

பொருட் காட்சியின் பெரும் பங்கை அடித்துக்கொண்டது பொருளாதாரமே. இங்கு தமிழ் ஈழப் பொருளாதார வளங்கள் 5 பெரும் பிரிவுகளில் அடிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் விருத்திக்கான வழிவகைகளும் ஆராயப்பட்டிருந்தன.

கடல் வளம் :

முத்திசையிலும் முழக்கமிடும் பெருங்கடலின் வளமொன்றே தமிழ் ஈழத்தைக் கட்டியெழுப்பப் போதுமானது என்பது புள்ளி விபரங்களுடன் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருந்தன. தமிழ் ஈழக் கடல் எல்லைகளும், மீன்பிடியின் அளவு, மீன்பிடி முறைகள், அவற்றில் புகுத்தக்கூடிய முன்னேற்றங்கள் என்பன ஆராயப் பட்டிருந்தன. இப்புள்ளி விபரங்களின்படி இலங்கைத் தீவின் மொத்த மீன்பிடியில் 55% தமிழீழத்திலிருந்து பெறப்படுவதுடன் இதில் பெருமளவு சிறீலங்காவிற்கு ஏற்றுமதியாகின்றது.

வெளிநாட்டு செலாவணியைத் தேடித்தரும் கடலட்டை, சங்கு, இறால் என்பவற்றின் உற்பத்தி. ஏற்றுமதி விபரங்களுடன் உற்பத்தி அதிகரிப்பு வழிவகைகளும் கூறப்பட்டன, அத்துடன் பொருளாதார முக்கியமிக்க ஜெலி, அல்ஜினிக்கமிலம் என்பவற்றின் தயாரிப்பில் உபயோகமாகும் கடற்பாசி பற்றிய விபரமும், மாதிரிகளும் வைக்கப்பட்டிருந்தன. சேது சமுத்திர ஆழமாக்கல், காங்கேசன்துறை, திருகோணமலை, தலைமன்னார் துறைமுகங்களின் முக்கியத்துவம், அபிவிருத்தியினால் ஏற்படும் நன்மைகள் என்பன ஆராயப்பட்டிருந்தன. இவற்றை விட விஞ்ஞான முறையில் இறால், மீன் வளர்ப்பு விபரங்களுடன் மாதிரியும் பார்வைக்கு வைக்கப் பட்டிருந்தன.

பயிர்வளம்: ''அரிசியைத் தம்பிரதான உணவாகக் கொண்ட தமிழ் ஈழ மக்கள் நெல் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்து விட்டார்கள்'' தமிழ் ஈழத்தைக் கன வென்போரும் விதண்டாவாதிகளும் ஏற்றுக்கொள்ள மறுக்கும் இக்கூற்று புள்ளி விபரங்களினுல் நிரூபிக்கப்பட்டிருந்தது. தீவின் மொத்த உற்பத்தியில் ⅓ பங்கைத் தமிழ் ஈழம் உற்பத்தி செய்வதையும் இதில் ⅔ பகுதி சிறீலங்காவிற்கு வழங்கப் படுவதையும் புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டின. இவற்றை விட உணவுப் பயிர்கள், பணப்பயிர்கள் என்பவற்றின் உற்பத்தி, ஏற்றுமதி வாய்ப்புகள் என்பன வும் தரப்பட்டிருந்தன.

நிறைவைச் சுட்டிக் காட்டுவதுடன் குறைகளை ஏற்கவும் தயங்கமாட்டோம் என்று, தெங்கின் பற்றுக்குறையைக் கேலிச்சித்திரம் மூலம் எடுத்துக்காட்டி, தெங்கைத் தாக்கும் நோய் பற்றிய எச்சரிக்கையும் செய்யப்பட்டிருந்தது. தொண்டைமானுறு நன்னீர்த்திட்டம் போன்ற நன்மை பயக்கும் திட்டங்கள் பற்றிய விபரங்கள் முலம் உற்பத்திப் பெருக்கத்துக்கும் வழி காட்டப்பட்டிருந்தது.

பனைவளம்:

வருங்கால சந்ததியினரின் நன்மை, காலநிலைச் சீர்கேடுகள் பொருளாதார முக்கியத்துவம் என்பவற்றைக் கருத்திற்கொள்ளாது, அழிக்கப்பட்டுவரும் பனை வளத்தின் பயன்களும், ஏற்றுமதி வாய்ப்பு பற்றிய விபரங்களும் இங்கு காணப் பட்டன. தமிழ் ஈழத்தின் 76 இலட்சம் பனைகளும் பயன்படுமிடத்து தென்கிழக் காசியா முழுவதன் சீனித் தேவையுமே பூர்த்தி செய்யப்படும் என்பதன் மூலம் எமது பொருளாதார விருத்தியில் பனைவளத்தின் பெரும் பங்கு எடுத்துக்காட்டப் பட்டது.

கைத்தொழில் வளம்:

தமிழ் ஈழ எல்லைகளில் கனிவள ஆக்கிரமிப்பு நடைபெறும்போது, உள்ளே புறக்கணிப்பு நடைபெறுவதுடன் வளங்கள் சுரண்டப்பட்டு சிறீலங்காவில் வேலை வாய்ப்பிற்கும், தொழில் வளர்ச்சிக்கும் உபயோகப்படுத்தப்படுகிறது. எமது இளை ஞர்கள் வேலைவாய்ப்பின்றி விரக்தியுறுகிறுர்கள். இந்நிலைமாற நாம் எடுக்கவேண் டிய முயற்சிகள் குடிசைக் கைத்தொழில் பற்றிய விபரங்களுடன் தமிழ் ஈழ கனி வளவிபரமும் இங்கு காணப்பட்டன. தமிழ் ஈழத்தில் தற்போது இயங்கும் தொழிற் சாலைகளும், அமைக்கப்படக்கூடிய தொழிற்சாலைகளும் காட்டப்பட்டிருந்தன.

அத்துடன் தமிழ்ஈழ உற்பத்திகளை எடுத்துக் காட்டவும், உற்பத்தியாளர் கட்கு ஊக்கமளிக்கவும் காட்சிச் சாலையொன்றும் அமைக்கப்பட்டிருந்தது.

சக்தி மனிதவளம்

சிறீலங்கா மின்சாரத்தால் இன்று பூர்த்தி செய்யப்படும் நம் சக்தித் தேவையை சுதந்திரத்தின் பின் ஈடு செய்ய உயிரியல் வாயு, சூரிய சக்தி போன்ற சக்தி மாற்றீடுகளின் பயன்களும், மாதிரியுடன் செய்முறை விளக்கமும் அளிக்கப் பட்டது.

இவையெல்லாவற்றையும் விட தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் கொண்ட எமது மனித வளம் பெரும்பலம் என்பதும், தரப்படுத்தல், வேலையின்மை போன்ற வற்ருல் இவ்வளத்தின் விரயம், மூளைசாலிகள் வெளியேற்றம் என்பனவும் சுலோ கங்கள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டன.

இறுதியாக, இவ்வளங்களின் முழு விருத்திக்கும் வேண்டிய அரசியற் சுதந் திரம் நம்மிடம் இல்லாதிருப்பதால் சிறு கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படவேண் டிய தன் முக்கியத்துவமும், தொழில் முறைப் பாகுபாடு நீங்கி ''செய்யுந் தொழிலே தெய்வம்'' என்னும் பரந்த மனப்பான்மை வளரப் பாடுபட வேண்டிய தன் அவசியமும் எடுத்துக்காட்டப்பட்டது.

— பொருட்காட்சிக் குழு

வாடிக்கையாளரின் நன்மை கருதி
எமது அச்சகம்
மறுசீரமைக்கப்பட்டுள்ளது
என்பதை மகிழ்வுடன்
அறியத் தருகிறோம்.

* நட்சத்திர மாமா
* கலாவல்லி
* ஆமை இளவரசன்

என்பனவும்

* மெய்கண்டான் திருக்குறட் கலண்டர்
* டயறி
* பிளாஸ்டிக் சாமான்களும்

விற்பனைக்குண்டு.

உங்கள் தேவையே எமது சேவை.

## மெய்கண்டான் அச்சகம்

144, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு :

## கணேசானந்தாஸ்

சில்க் பலெஸ்

15, மக்கள் நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

*Visit*

## RICH COFFEE BAR

**New Market,**
**Jaffna.**

காலத்திற்கு ஏற்ற வகையில்
நவநாகரிகமாகத் திகழ விரும்பும்
ஆடவரும் நங்கையரும்
நகரில் நாடும் ஸ்தாபனம்,

## RAJAN'S FANCY HOUSE

எந்த வகையான
அழகுசாதனப் பொருட்களுக்கும்,
பரிசளிப்புப் பொருட்களுக்கும்

மற்றும்

தங்கமுலாம் பொருட்களுக்கும்

இன்றே விஜயம் செய்யுங்கள்.

5, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

எமது நல்லாசிகள்!

## பூபாலசிங்கம் புத்தகசாலை

- சென்றல் பஸ் நிலைய முகப்பு
- புகையிரத நிலையம்
- 1ம் குறுக்குத் தெரு,
ஆஸ்பத்திரிச் சந்தி,

யாழ்ப்பாணம்.

விவசாயிகளே!
வாகன உரிமையாளர்களே!

பசளை வகைகளுக்கும்
டயர், ரியூப் வகைகளுக்கும்

இன்றே விஜயம் செய்யுங்கள்.

## S. V. முருகேசு

114, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுத்தமான மட்டன் ரோல் - பற்றீஸ் - கட்லட்
சுவையான கோழிப் புரியாணி
தேன் சிந்தும் பம்பே சுவீற்ஸ் வகைகள்
ஸ்பெஷல் பாலுதா சர்பத் - ஐஸ் கிறீம்

மற்றும்
வீடுகளுக்குக் கொண்டு செல்லும் வகையில்
ஐஸ் கிறீம் பொக்ஸ்

## றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் ஹவுஸ்

370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

☎ 464

# மன்ற அறிக்கை

## ஆரம்பம்

எமது செயற்குழு 29-3-77 அன்று தேர்தல் முறைப்படி, ஆனல் போட்டி எதுவுமின்றி ஒரு மனதாகத் தெரிவு செய்யப்பட்டது. இது யாழ். வளாகத் தமிழ் மன்றத்தின் இரண்டாவது செயற்குழு ஆகும்.

செயற்குழு விபரம் :

| | |
|---|---|
| தலைவர் : | திரு. நா. தர்மராஜா |
| துணைத் தலைவர் : | திரு. மு. சிவதாஸ் |
| செயலாளர் : | திரு. செ. சண்முகநாதன் |
| துணைச் செயலாளர் : | திரு. அ. ஜெ. செ. சவரிமுத்து |
| இளம் பொருளாளர் : | ஜனுப். அ. லெ. ஜௌபர் சாதிக் |
| பத்திராதிபர் : | திரு. ச பேரின்பராஜா |
| செயலவை உறுப்பினர்கள் : | திரு. ச. தில்லைநாதன் |
| | திரு. கி. ஆறுமுகம் |
| | திரு. கு. தம்பையா |
| | செல்வி. க. மாலினி |
| | செல்வி. சு. இராசலெட்சுமி |

31-3-77இல் உத்தியோக பூர்வமாக முதலாவது செயலவையிடமிருந்து பொறுப்புக்களைப் பெற்றுக்கொண்டோம். முதலாவது செயலவை விட்டுச் சென்ற நிதி எமது ஆரம்பகால நிதித் தேவைகட்குப் பெரிதும் உதவியாக இருந்தது.

பொருளியல் துறை விரிவுரையாளர் திரு. இ. முத்துத்தம்பி அவர்களைப் பெரும்பொருளாளராக்கலாம் என்று செயற்குழு தீர்மானித்து அவரை அணுகிய போது, அவரும் முழுமனதுடன் ஒப்புக்கொண்டார்.

## நடவடிக்கைகள்

27-4-77இல் தந்தை சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களின் மறைவுக்கு மன்றத்தினுல் அனுதாபக் கூட்டம் நடத்தப்பட்டதுடன், மன்ற அங்கத்தினர்கள் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். அஞ்சலித் துண்டுப் பிரசுரம் ஒன்றும் வெளியிட்டோம். 29-4-77 இல் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டு, ஒலி பெருக்கி மூலம் கவிதாஞ்சலி செலுத்திேேம். (படம்)

12-5-77 இல் டெவன் தோட்டத்தில் சிவனு. இலட்சுமணன் (வயது 22) பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்ட அநியாயத்தைக் கேள்வியுற்று, 14-5-77 இல் வளாகத்திலிருந்து யாழ் நகரூடாகக் கச்சேரி வரை ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினேம். (படம்) கச்சேரி வளவில் சட்டவிரோதப் பகிரங்கக் கூட்டம் ஒன்றை நடாத்தி, ஜனதிபதிக்கான மகஜர் ஒன்றை அரசாங்க அதிபரிடம் கையளித்தோம். இதில் யாழ். பல்தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களும் இணைந்து செயற்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

17-5-77 இல் 'டெல்டா' தோட்டத்தில் காடையர்களால் எரிக்கப்பட்டும், கொள்ளையடிக்கப்பட்டும் இருந்த லயன்களையும், மக்களையும் பார்வையிட்டு விசா

ரிக்க, வளாக விஞ்ஞான மாணவர் ஒன்றியத்தினல் அனுப்பிவைக்கப்பட்ட மூவர் கொண்ட குழு 30-5-77 இல் அறிக்கையொன்றை வெளியிட்டது. அதிலிருந்து அம் மக்களின் உடனடித் தேவை உடை, உணவு என்றும், உணவுப் பிரச்சினை ஓரளவு தீர்க்கப்பட்டுள்ளது என்பதையும் உணர்ந்த நாம், வளாசச் சுற்றுடலிலுள்ள (திருநெல்வேலி, வட்டுக்கோட்டை) வீடுகளில் உடைகள் சேகரித்து, 3-6-77 இல் 'டெல்டா' தோட்டத்தில் தேவையறிந்து விநியோகித்தோம். (படம்)

## (சோதனைக் காலம்)

இதன் பின் விஞ்ஞான, மனிதப் பண்பியல் பீடங்களின் வேறுபட்ட விடு முறைகளும், ஓகஸ்ட் கலவரம் காரணமாக மூன்று மாதங்கள் வளாகம் மூடப்பட்டதும் எமது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தின.

18-11-77 இல் மன்ற அங்கத்தவர்களின் கவிதைகளைத் தொகுத்து 'தேன் துளிகள்' என்னும் புத்தகமாக வெளியிட்டோம்.

இதன்பின், சிறிது நாட்களில் செயலவை உறுப்பினர் திரு. ச. தில்லைநாதன் அவர்கள் பதவியிலிருந்து விலகிக்கொண்டார்.

19-12-77 இல் தலைவரும், செயலாளரும் தமது பதவி விலகல் கடிதங்களை பெரும் பொருளாளரிடம் சமர்ப்பித்திருந்தனர். இவ்வாறே 20-12-77 இல் இளம் பொருளாளரும் பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பித்தார். இதன் பின் தலைவர், செயலாளர் பதவிகள் வெற்றிடமாகவே இருந்தன. இளம் பொருளாளர் பதவிக்கு திரு. க. கணேசன் அவர்கள் பொதுக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

29-12-77 இல், ஓகஸ்ட் கலவரத்தின்போது குண்டசாலையில் தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களின் பிரதிபலிப்பான 'தீ 77' என்னும் புத்தகத்தை யாழ். றிம்மர் மண்டபத்தில் வெளியிட்டு வைத்தோம். (படம்)

(வளாகத் தலைவர் இராமநாதன் மண்டப அனுமதியை அளிக்கவில்லை)

19-2-78 இல் கொழும்பு வளாகத்தில் நடைபெற்ற 'அனைத்து வளாகத் தமிழ் மாணவர் ஒன்றிய' இறுதி அமைப்புக் கூட்டத்திற் கலந்துகொண்டோம். எனினும் இவ் ஒன்றியம் இயங்கியதாகத் தெரியவில்லை.

## தமிழ் விழா

இதன் பின் மன்றத்தின் வருடாந்த விழாவுக்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. நிதி திரட்டும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக 25-3-78 இல் யாழ். றியோ படமாளிகையில் 'பாலும் பழமும்' நிதியுதவிக் காட்சியினை ஒழுங்கு செய்தோம்.

திட்டமிடப்பட்டபடி தமிழ் விழா 6 & 7-5-78 ஆகிய தினங்களில் சிறப்பாக நடைபெற்றது.

இவ் வேளையில் எமது ஆண்டுச் சஞ்சிகை 'செந்தழலு'க்கான விடய தானங்களும், விளம்பரங்களும் சேகரிக்கப்பட்டுக்கொண்டே வந்தன. இத் தழலும் மிக விரைவில் வெளிவர இருக்கின்றது. இதுவும் மன்றத்தின் ஏனைய நடவடிக்கைகளைப் போல் சிறப்பாக அமையும் என்று நம்புகிறேன்.

இறுதியாக, எமக்குப் பலவிதமான நெருக்கடிகள் ஏற்பட்ட வேளையிலும் மன்றம தனது நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாயிருந்த சக மன்ற அங்கத்தினருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எமது மன்றம் தனது ஒவ்வொரு நடவடிக்கைக்கும், தேவைக்கும் பொதுமக்களையே நாடவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது அவ்வேளைகளில் எல்லாம் சளைக்காமல் பேருதவி புரிந்தோர்க்கு எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு, மன்றம் தொடர்ந்தும சிறப்பாக இயங்குமென்ற நம்பிக்கையுடன் விடைபெறுகின்றேன்.

நன்றி. தமிழ் வளர்க!

— துணைச் செயலாள

---

1. தற்போதய யாழ். பல்கலைக் கழகம் 1978 இற்கு முன் யாழ். வளாகம் என்னும் பெயருடன் இயங்கியது.

2. கலைப்பீடம் 1978 இற்கு முன் மனிதப் பண்பியல் பீடமாக இருந்தது.

# ஆண்டவனும் சிங்களவனும்

**'கண்ணன்'**

என்னுடைய வீட்டிலிருந்து இரண்டு வீடுகள் தள்ளி ஒரு புகையிரத நிலைய அதிபர் குடியிருக்கிறார். அவர் கடவுள் பக்தி நிறைந்தவர். அது அவருடன் சொற்ப நேரம் பழகுபவர்களுக்கே புலப்படும். எதற்கெடுத்தாலும் ''ஆண்டவன் அருள் ... ஆண்டவன் அருளிருந்தால்...'' என்றெல்லாம் சொல்லிக்கொள்வார்.

முன்பெல்லாம் கடமைக்காகச் செல்லும்போது ''ஆண்டவன் அருளிருந்தால் அடுத்த கிழமை வருவேன்...'' என்று சொல்லி மனைவி மக்களிடம் விடை பெற்றுச் செல்வார்.

'ஆகஸ்ட் 77' வந்தது. அப்பொழுது அவர் சிங்கள நாட்டில் கடமையாற்றிக் கொண்டிருந்தார். ஒரு மாதிரி உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடிவந்து சேர்ந்தார்.

அதன் பிறகும் அவருக்குச் சிங்கள நாட்டில்தான் வேலை கிடைத்திருக்கின்றது. இப்பொழுதெல்லாம் அவர் வேலைக்குச் செல்லும்போது, ''சிங்களவன் அருளிருந்தால் அடுத்த கிழமை வருவேன்...'' என்று சொல்லி மனைவி மக்களிடம் விடை பெற்றுச் செல்வார்.

ஒன்று மட்டும் உண்மை. — எங்கும், எதையும், எப்பொழுதும் ஆள்பவனுக்குத்தானே ஆண்டவன் என்று பெயர்.

இப்பொழுது நீங்களே சொல்லுங்கள்... அவர் இப்பொழுது சொல்லிக்கொள்வதில் அப்படியென்ன பெரிய பிழை இருந்துவிடப்போகின்றது...?

எங்கள்

விளம்பரதாரர்களை

ஆதரியுங்கள்.

Space
Donated by

# MISKINS

GRAND BAZAAR.
JAFFNA.

ROYAL DISPENSARY

றேயல் டிஸ்பென்ஸறி

யாழ்ப்பாணம்

☎ 397

# நன்றி கூறுகிறோம்.

* எமது மன்றக் கூட்டத்தில் உரையாற்றிய அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி அவர்களுக்கும்;

* நிதியுதவிக் காட்சியை நடாத்த உதவிய திரைப்படக் கூட்டுத்தாபன, றியோ சினிமா நிறுவனத்தாருக்கும்;

* தமிழ் விழாவிற்கு,

  ஒலி அமைப்புச் செலவை ஏற்ற அரஸ்கோ நிறுவன அதிபர் திரு. ஆர். அரசரெத்தினம் அவர்களுக்கும்;

  ஒளி அமைப்புச் செலவை ஏற்ற மில்க்வைற் நிறுவன அதிபர் திரு. க. கனகராசா அவர்களுக்கும்;

  பிரதம விருந்தினராக வருகைதந்த உடுப்பிட்டி தே. பே. உ. திரு. த. இராசலிங்கம் அவர்களுக்கும்;

  மற்றும்,

  விழாவைச் சிறப்பித்த கவிஞர்கள், பேச்சாளர்களுக்கும்;

  நாட்டுக் கூத்துக்கு மன்னாரிலிருந்து வருகை தந்தோருக்கும்;

  வில்லுப்பாட்டுக்கு கண்ணாட்டியிலிருந்து வருகை தந்தோருக்கும்;

  மேடையமைத்து உதவிய பராமரிப்புப் பகுதியினருக்கும் குறிப்பாக 'அனில்' அவர்களுக்கும்;

  ஜீப் வண்டி ஒழுங்கு செய்த உதவிப் பதிவாளர் திரு. சிவபாதம், கலாநிதி அ. சண்முகதாஸ் ஆகியோருக்கும்;

  எம்முடன் சேர்ந்துழைத்த சாரதி திரு. சுந்தரம் அவர்களுக்கும்;

  எமக்கு உதவியாயிருந்த சிற்றுண்டிச்சாலையினருக்கும்;

  விசேட பேருந்து ஒழுங்கு செய்த யாழ். இ. போ. ச. அதிபர் திரு. தியாகராசா அவர்களுக்கும்;

  இவற்றுக்கு உறுதுணையாய் உழைத்த மாணவருக்கும், விரிவுரையாளர்களுக்கும்

* இத் தழல் சிறப்புற அமைய,

  விளம்பரங்கள் தந்துதவிய விளம்பரதாரருக்கும்;

  கடனுதவி புரிந்த மாணவ நண்பர்களுக்கும்;

  குறுகிய காலத்துள் அச்சிட்ட சுன்னாகம் அச்சகத்தினருக்கும்;

  அட்டைப் படம் வரைந்த 'நேசன்' அவர்களுக்கும்;

* மற்றும் எமது நடவடிக்கைகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்த **பொதுமக்கள்** அனைவருக்கும்

நன்றி கூறுகிறோம்.

— செயலவை

## பிழை திருத்தம்

தமிழ் வீரம் என்னும் கவிதையில், 10வது பாடலின் கடைசி வரியான ''சண்டாளன் தானொருவன் வேலை எய்தான்'' என்பதனை,

''காரானை வேலெடுத்து எய்த தம்மா'' என்று திருத்தி வாசிக்கவும்.

(புறநானூற்றில் வரும் ஒரு செய்யுளை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது)

---

இத் தழலில் காணப்படும் படைப்புகள் யாவற்றிற்கும் அவற்றை ஆக்கியோரே பொறுப்பாளிகள் ஆவர். சொந்தப் பெயரோ, அன்றிப் புனை பெயரோ இன்றி இடம் பெறும் படைப்புகளுக்கு நானே பொறுப்பு.

ஆ-ர்.

---

ஆடவரே! நங்கையரே!

காலத்திற்கேற்ற முறையில் உங்கள் ஆடைகள் அமைவதற்கு நீங்கள் நாடவேண்டிய இடம்

↓

ஸ்மக்ஸ் ரெயிலரிங்

10, 12, பஜார் வீதி, யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு

# கண்ணன் அச்சகம்

நல்லூர் — யாழ்ப்பாணம்.

*With the best Compliments of*

# KUSHIBA (Distributors) Ltd.

## MAVIDDAPURAM.

Distributors For

Bajaj Scooters,
All Goods Manufactured by
Kushiba Group of Companies.
Dollar Brand Aluminium ware.
Quality Cast Aluminium &
Brass Products,
Tata Brand Soap,
Vantage & Janatha Tea.
And many other Products.

HEAD OFFICE:

**17, Claessen Place,**
**COLOMBO-5.**

BRANCHES:

**Maviddapuram,**
**Jaffna,**
**Colpetty,**
**Kilinochchi.**

Kannan Press, Nallur.